

கல்கி
KALKI
2.7.2000
ரூ. 5.00
"வேகத்தைதக் காதலித்தேன்!"

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

பவர் ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

முதலீடுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள்

காலம்	முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS)			திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - I)		
	வழங்கப்பட உள்ள ஆண்டு வட்டி விகிதம்		அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்)	முதிர்வுத் தொகை ரூ. 5,000/-த்திற்கு	ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வருவாய் விகிதம்	அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்)
	மாதத்திற்கு	காலாண்டிற்கு				
12 மாதங்கள்	–	10.59%	ரூ. 47,000/-	ரூ. 5,551/-	11.02%	ரூ. 45,000/-
24 மாதங்கள்	–	11.10%	ரூ. 45,000/-	ரூ. 6,224/-	12.24%	ரூ. 38,000/-
36 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 7,155/-	14.37%	ரூ. 31,000/-
48 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 8,061/-	15.31%	ரூ. 27,000/-
60 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 9,085/-	16.34%	ரூ. 24,000/-

திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - II)

காலம்	குறைந்த அளவு டெபாசிட் ரூ.	முதிர்வுத் தொகை ரூ.	ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வட்டி விகிதம்	அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்) ரூ.
60 மாதங்கள்	550/-	1,000/-	16.34%	23,650/-

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 64, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894 மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in

Visit us at : www.tnpowerfinance.com / www.tninfrafinance.com

[illegible]

ஷூட்டிங் ஸ்பாட்



• ரமணனுடன் சுபஸ்ரீ



அதிகபட்சம் முப்பத்தைந்து குறைந்தபட்சம் ஐந்து!

சேதி தெரியுமா? 'அலை பாயுதே' மாதவன் ஒரு நல்ல பாடகர். ஆனால் அவரது இசைத் திறமையைத்தான் யாரும் புரிந்து கொள்ளவே மாட்டேன் என்கிறார்கள். மாதவனுக்கு நண்பர்களின் சவால்; உன்னால், 'சப்த ஸ்வரங்கள்' நிகழ்ச்சியில் பங்கேற்று, ஜெயித்து பரிசு வாங்க முடியுமா? சவாலை ஏற்று, நிகழ்ச்சியில் பங்கேற்று, பரிசையும் தட்டிக் கொண்டு போகும் மாதவனுக்கு அடங்காத சந்தோஷம்!

இதென்ன கலாட்டா என்று திகைக்கிறீர்களா? இங்கே சொன்ன சம்பவம் மாதவன் நடித்துள்ள 'சுகம்' என்ற படத்தில் இடம் பெறும் காட்சி.

இதை தனது சப்தஸ்வரங்கள் நிகழ்ச்சிக்குக் கிடைத்த ஒரு அங்கீகாரமாகக் கருதுகிறார் ஏ.வி. ரமணன். இது மட்டுமா, எம்.எஸ்., டி.கே. பட்டம்மாள் போன்றவர்கள் கூட, ரமணனிடம், ''இந்த நிகழ்ச்சி மூலமாக இசைக்கு நீங்கள் பெரும் சேவை செய்து வருகிறீர்கள்!'' என்று பாராட்டினார்களாம்.

இன்று சினிமா உலகில், இசையமைப்பாளர்களுக்கு, புதுக்குரல் தேவைப்பட்டால், "சன் டீ.வி.யில் விசாரி, ரமணனிடம் கேளு!'' என்கிறார்களாம்!

விளையாட்டுப் போல ஆரம்பித்து மூன்று வருஷங்களுக்கு மேல் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமைகளில் நேயர்களை டீ.வி முன் கட்டிப் போட்டு இருக்கிறது.



இந்த நிகழ்ச்சி, சன் டி.வி.யின் சொந்த தயாரிப்பு. முரசொலி வளாகத்தில் உள்ள அரங்கில் செட் போட்டால், நாலு நாட்களில் பதிமூன்று வாரங்களுக்குண்டான நிகழ்ச்சிகளை கட்டுத் தள்ளி விடுகிறார்கள் ஒரே மூச்சில். "ஆனால் அந்த நாலு நாட்களில், பெண்டு நிமிர்ந்து விடும்'' என்கிறார் ரமணன்.

"முதல் தடவையாக நிகழ்ச்சியை நடத்த, விண்ணப்பங்கள் வரவேற்றபோது வெறும் நூற்று இரண்டு பேர்கள்தான் விண்ணப்பித்தார்கள். இப்போது, ஒளிப்பதிவாகும் நிகழ்ச்சிக்கு விண்ணப்பித்தவர்கள், ஆயிரத்து நானூற்று இருபது பேர்! இதுவே நிகழ்ச்சியின் பாபுலாரிட்டிக்கு ஒரு அளவுகோல்'' என்கிறார் இந்த நிகழ்ச்சியின் இயக்குனர் சுபஸ்ரீதணிகாசலம்.

இந்த நிகழ்ச்சியை நடத்த எஸ்.பி. பாலசுப்ரமணியம், ஏ.வி. ரமணன் இரண்டு பேரும் பரிசீலிக்கப்பட்டார்கள். ஆனால் எஸ்.பி.பி தனக்கு தமிழ் சினிமாப் பாடல்கள் பற்றி அதிக அறிவு இல்லை என்று ஒதுங்கிவிட, ரமணன் மைக் பிடித்து, தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார். சப்த ஸ்வரங்கள் நூற்றி எழுபத்தைந்தாவது நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர், எஸ்.பி.பி.தான்!

"சுபஸ்ரீ! நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறவர்களை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறீர்கள்?''

''சங்கீதம் கற்றுக்கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே பள்ளி, கல்லூரி, மற்ற பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மேடை அனுபவமும் கட்டாயம் இருக்க வேண்டும். அதிக பட்ச வயது முப்பத்தைந்து. குறைந்த பட்ச வயது ஐந்து. விண்ணப்பிக்கிறவர்களை வரவழைத்து, குரல் டெஸ்ட் நடக்கும். திறமைக்கு ஏற்ப A+, A, B, C என்று தரம் பிரிக்கப்பட்டு, மறுநாள் ரிசல்ட். ஒளிப்பதிவுக்கு முன் மூன்று கட்டமாகத் தேர்வு நடக்கும். ஒவ்வொருவரும் என்னென்ன பாட்டு என்று கலந்து பேசி முடிவெடுத்து, அதற்கேற்ப தயாராக வரும்படிச் சொல்லுவோம்!''

பெரியவர்களைவிட, பொடிசுகள் பங்கேற்கும் சப்த ஸ்வரங்கள் நிகழ்ச்சிக்கு ஏகமாய் வரவேற்பு.

ஷூட்டிங் ஸ்பாட்டுக்காக நாம் போனபோது, கார்த்திக், ஹரிணி ஸ்வர்ணலதா, மகாதேவன், பவித்ரா என்று நான்கு பொடிசுகள் ஒத்திகை பார்த்துக்கொண்டு இருந்தனர். கார்த்திக்கிற்கு நெய்வேலி. மற்றவர்கள் சென்னைவாசிகள்.

முதல் ரவுண்டின்போது, சின்னதாக ஒரு திரையில் நட்சத்திரங்கள் வாயசைத்துக் கொண்டிருக்க, மைக் பிடித்து பொடிசுகள் பாடினார்கள். இரண்டாவது சுற்றுக்கு ஹரிஹரன், ஏ.ஆர். ரஹ்மான், ஸ்ரீனிவாஸ், மால்குடி சுபா ஆகியோரது தனி ஆல்பங்களிலிருந்து எடுக்கப்பட்ட பாடல்கள். மூன்றாவது சுற்றுக்கு மறுபடி சினிமாப் பாட்டு.

"இந்த நாலு குழந்தைகளும், இத்தனை நன்றாகப் பாடுகிறார்கள் என்றால் முறைப்படி சங்கீதம் கற்றுக் கொண்டதன் பயன் அது'' என்றார் சுபஸ்ரீ.

ஏ.வி. ரமணனுக்குத் துணையாக நிகழ்ச்சியில் இசைக் கருவிகளை இசைப்பவர்கள் ரமணனின் மியூசியானோ இசைக் குழுவின் சிலர்தான். பக்க பலம் விக்னேஷ் ரமணன். இவர் இன்ஜினியரிங் கல்லூரியில் படிக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் பாடுகிறவர்களுக்கெல்லாம் சினிமா வாய்ப்பு கிடைக்கிறது. (வளவளவென்று) பேசுகிற ரமணனுக்கு?

"ம்... இசையமைப்பாளர் வித்யாசாகர் ஒரு தெலுங்குப் படத்தில் பாட வாய்ப்பளித்திருக்கிறார்."

ஸ்கிரிப்ட்: **கௌதம் ராம்**

கேமரா: **யோகா**

பெண் சாமியார்கள் விண்ணப்பிக்கவும்!



''எதுக்கு அந்த ஆசாமி நடுரோட்டில் நின்னுக்கிட்டு 'தமிழ் வழிக்கல்வி வாழ்கன்னு' கத்தறார்?''

''பாவம், அலையாய் அலைந்தும் எந்த இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலிலும் மகனுக்கு அட்மிஷன் கிடைக்காத வெறுப்பிலே தான்!''



''படம் படுமட்டம் போல!''

''அப்படியா?''

''பின்னே, 'இதுவே கடைசி வாரம்'னு ஒட்டினதும், 'நன்றி'ன்னு பதில் போஸ்டர் ஒட்டியிருக்காங்கன்னா பாரேன்!

''பேப்பரைப் படிச்சுட்டுத் தலையில் அடிச்சுக்கிறியே, ஏண்டா?''

''பிரபலமான எங்கள் ஆசிரமத்தின் கிளைகளை கமிஷன் அடிப்படையில் ஏற்று நடத்த பெண் சாமியார்கள் விண்ணப்பிக்கவும்னு விளம்பரம் வந்திருக்கு!''

— உ. ராஜாஜி



''அந்த ஆளு தீவிரவாதின்னு எப்படி உறுதியாச் சொல்றே?''

''நாய்கள் ஜாக்கிரதை போர்டு மாதிரி வீட்டு வாசல்ல 'மனித வெடிகுண்டு ஜாக்கிரதை'னு போர்டு வச்சுருக்கார்!''

— அம்பை தேவா



"Good morning sir" எங்க marketக்குக் கிளம்பிட்டீங்களா? பாத்து மெதுவா போயிட்டு வாங்க. நம்ம தெருக்கோடில அதான் ஸார் ரங்கவிலாஸ் ஓட்டல் எதிர்ல ஒரு பெரிய பள்ளம் தோண்டி வச்சருக்காங்க. மழைத் தண்ணி தேங்கியிருக்கறதனால பள்ளம் கண்ணுக்குத் தெரியலை, பார்த்து மெதுவா போயிட்டு வாங்க என்று என் பக்கத்து வீட்டுக்காரர் மிகுந்த அக்கறையோடு கூறினார். பிறகு அப்படியே வரும்போது எனக்கு ஒரு கால்கிலோ கத்தரிக்காய் வாங்கிட்டு வாங்க என்றார்.

ஒரு வேலையைச் செய்யுமாறு நேரிடையாகக் கூறாமல் எப்படிச் சுற்றி வளைத்துப் பேசியிருக்கிறார் பார்த்தீர்களா?

இது போன்ற டெக்னிக் workout ஆகத்தான் செய்கிறது.

நாம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளைச் சந்திக்கிறோம். பல தரப்பட்ட மக்களிடம் பேசுகிறோம்.

நமக்காக ஒரு வேலையைச் செய்து தருமாறு மற்றவர்களிடம் கேட்க வேண்டிய சூழ்நிலையில் நாம் முதலில் என்ன பேச வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக எப்படிப் பேச வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். வங்கியில்:- நீங்கள் உங்களது passbookல் entry போட்டுத் தருமாறு வங்கியில் உள்ள ஊழியரிடம் கூற வேண்டும்.

இதை 'passbook'ல் entry போட்டுத் தாருங்கள் என்று சொல்வீர்கள் அல்லவா? இதை இங்கிலீஷில் எப்படிப் பேச வேண்டும் என்று பார்க்கலாமா?

பொதுவாகவே, ஒரு வேலையைச் செய்து தருமாறு மற்றவரிடம் கேட்க மூன்று முறைகள் உள்ளன.



நாம் பேசும் விஷயம் மற்றும் பேச வேண்டிய நபர் இவற்றைப் பொறுத்து வாக்கிய அமைப்பு மாறுபடும்.

- ☐ 'ஒரு வேலையைச் செய்' என்று உத்தரவிடுவதை order அல்லது command என்கிறோம்.
- ☐ ஒரு வேலையைச் செய்யுமாறு மற்றவரிடம் வேண்டிக் கொள்வதை request எனலாம்.
- ☐ ஒரு வேலையைத் தங்களால் செய்து தர இயலுமா என பணிவாகக் கேட்டறிதலை 'polite request' என்று சொல்வதுண்டு.

இவற்றில் எதைப் பயன்படுத்துவதென்பதை நாம் முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

பொறுமை ரொம்பவே வேணும்!

அலுவலகங்களில் Receptionist ஆகப் பணியாற்றுபவர்களுக்கு மகா பொறுமை வேண்டும். தகவல் பெற வரும் சிலர் கேட்டதையே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டு அசையாமல் எதிர்சீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள்.

ஸார், இது விஷயமா நீங்க மானேஜரைப் பார்த்துப் பேசுங்க. இப்ப இடத்தைக் காலி பண்ணி அங்கே போயி உட்காருங்க என்று நாசூக்காகத் தெரிவிக்க வேண்டும். இதை இங்கிலீஷில் நாசூக்காகத் தெரிவிக்க Please have your seat over there என்று சொல்லலாம். இதையே Could you please have your seat over there? என்று மிகவும் பணிவாகத் தெரிவிக்கலாம்.

பொது இடங்களில் அதாவது ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு, வங்கி போன்ற இடங்களில் அங்கு பணிபுரிவோரிடம் order பண்ணினா நிலைமை disorder ஆயிடும்!

இது போன்ற இடங்களில் request செய்வதே நல்லது.

சரி, 'entry' போட்டுத் தாங்கன்னு சொல் லணும் இல்லியா? entry சரி, 'போட்டுத் தாங்க'ங்கறதை இங்கிலீஷ்ல எப்படிச் சொல்றது? make entriesனு சொல்லுங்க.

'Make entries in the pass book' – இந்த வாக்கியத்துடன் please சேர்த்து please make entries in the pass bookனு சொல் லுங்க. தயவு செஞ்சு pass bookல entry போட்டுக் குடுங்க என்பது இதன் அர்த்தம்.

'Make entries'னா (order) entry போட் டுக்கொடுங்கள்.

'Please make entries' (request) தயவு செஞ்சு entry போட்டுக்குடுங்க.

'Could you please make entries?' தயவு செய்து entry போட்டுத் தர முடியுங் களா? இதைத்தான் polite request அதாவது பணிவான வேண்டுகோள் என் கிறோம்.



ஆங்கிலமே அருகில் வா!

ஸ்வெட்டர் போட்டுக்க வேண்டியதுதான்!

டிரெயினில் பயணம் செய்து கொண் டிருக்கிறீர்கள். ஜன்னல் ஓரமாக உட்கார்ந் திருப்பவர்கள் இரண்டு கதவையும் திறந்து வைத்துக்கொண்டு மும்முரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கடுங்குளிர் காற்று வீசுகிறது. கைகால்கள் மரத்துப் போகுமளவிற்கு.

ஸார், தயவு செய்து ஜன்னலை மூடுகிறீர்களா? என்று பணிவாக வேண்டுகோள் விடுக்க could you please close the windows? என்று கேளுங்கள்.

இதை இன்னும் பணிவாக 'would you mind closing the windows?' ஜன்னலை மூடுவதில் உங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல் லையே என்று கேளுங்கள்.

உங்களது வேண்டுகோளை அவர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லையென்றால் அவர்களிடம் வீண் தகராறு செய்யாமல் கைவசம் ஸ்வெட்டர் இருந்தால் அதை எடுத்துப் போட்டுக் கொள்ளுங்கள்!

சூழ்நிலைக்கேற்ப பணிவான வேண்டுகோள் விடுப்பது எப்படி என்பதை அடுத்த வாரம் பார்க் கலாம்.

Could you please wait till next week?



வி. ராஜகோபாலன்

வி.ஐ.பி விருப்பம்



தோளை உரசிய கண்ணாடி!

அரசியலில் பிஸியாக இருந்த அப்பா (ஈ.வி.கே. சம்பத்) எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் திரைப்படங்களுக்கு அழைத்துச்செல்வார். அந்தக் காலத்தில் திரைப்படம் துவங்கும் முன்னர் war picture என்று இரண்டாம் உலகப் போர் யுத்தக் காட்சிகளைக் காண்பிப்பார்கள். விமானங்கள் விர்விரென்று பறந்து வானத்தில் சாகசங்கள் புரிந்து குண்டுகளை வீசிவிட்டுத் திரும்பி வரும். அது போன்ற காட்சிகளை அடிக்கடி பார்த்துப் பார்த்து எனக்கு விமானப்படை பைலட்டாகி சாகசங்கள் புரிய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டுவிட்டது. அப்பாவிடம் சொன்னேன். "உன்னோட வால்தனத்தை மூட்டைக் கட்டி வைச்சிட்டு, பட்டப்படிப்பை முடி, பார்க்கலாம்" என்றார்.

பைலட் கனவுகளுடன் சென்னை ராமகிருஷ்ணா பள்ளியில் எஸ்.எஸ்.எல்.ஸி முடித்து ஈரோட்டில் பி.யு.ஸி.யில் சேர்ந்தேன். சேர்ந்த சிறிது நாளில் கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த எனக்கு, லெக்சரர் போர்டில் எழுதியது சரியாகத் தெரியவில்லை. 'அட... இது என்ன சோதனை' என்று முதல் வரிசைக்கு மாறினேன். அப்போதும் கரும்பலகையில் உள்ள எழுத்துக்கள் கண்ணாமூச்சி காட்டின. கண் டாக்டரிடம் போனேன். "என்ன தம்பி...மைனஸ் பவர்... கண்ணாடி போடணுமே..." என்றார். "சரி.., போடுங்க" என்றேன் மகிழ்ச்சியுடன். அப்புறம்தான் தெரிந்தது பார்வைக்காக கண்ணாடி போட்டால், விமானப்படை செலக்ஷனுக்கு 144ம். ஃபைலட் ஆசை போயே... போச்சு!

சொந்த விஷயம்தான் இப்படி என்றால் அரசியல்ரீதியாக பாராளுமன்ற உறுப்பினராக வேண்டும் என்பதுதான் என் ஆசை. 1984ல் எனக்கு எம்.எல்.ஏ ஸீட் கிடைத்து வெற்றி பெற்றாலும் மனம் என்னவோ தில்லியின் மேலேயே இருந்தது. பாராளுமன்றத்துக்குப் போட்டி போடும் வாய்ப்பு 1996ல்தான் கிடைத்தது. ஆனால் தோல்வி... பின்னர் 1998ம் ஆண்டும் வாய்ப்பு கிடைத்தது. இரண்டாவது முறையாகவும் தோற்றேன்.

இன்னொரு முறை நிற்க வாய்ப்பு கிடைக்குமா என்பதும், என் பாராளுமன்ற உறுப்பினர் ஆசை நிறைவேறுமா என்பதும் காலம் பதில் சொல்ல வேண்டிய கேள்விகள்.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்'

— ரமா

படம்: ராஜன்

என்ன விலை?



மேலே உள்ள பொருள்கள் மட்டுமில்லாமல் சென்னையிலேயே குறைந்த விலையில் எல்லா பொருட்களையும் விற்பது சுபிக்ஷாதான்—சுபிக்ஷாவில் வாங்காமல் அதே பொருட்களை அதிக விலை கொடுத்து மற்ற கடைகளில் வாங்குவது ஊதாரித்தனம் அல்லவா? பல்லாயிரக்கணக்கான புத்திசாலிகளின் தேர்வான சுபிக்ஷாதான் இன்று சென்னையில் No.1. நீங்களும் புத்திசாலிதானே? வாருங்கள் இன்றே சுபிக்ஷாவிற்கு!

Chennai's Largest

Subhiksha

Pay Less ... Always

10%

புதிய சுபிக்ஷாக்கள்

- திருவள்ளூர்
- அரக்கோணம்
- செங்கல்பட்டு

Order online at : www.subhiksha.com

- 68/5, பச்சல் காலனி
- 13, 2வது குறுக்குத்தெரு, கஸ்தூரிபா நகர்.
- 390, எம்.டி.எச். ரோடு
- 255, கொன்னூர் ஹை ரோடு (ICF அருகில்)
- W-125, 3வது அவென்யூ
- 1944, 18வது மெயின்
- 32, முதல் அவென்யூ
- அரக்கோணம் 4, சத்தியமூர்த்தி தெரு, கைகல்பேட்
- D-103, MMDA காலனி
- 1/C, கருணீகர் தெரு
- 15, பூண்டியம்மன் கோயில் தெரு
- 101, டி.டி.கே. சாலை
- 22, எழும்பூர் நெடுஞ்சாலை
- 2, IIவது மெயின் ரோடு, சிட்லபாக்கம்
- 133, பாரதமாதா தெரு
- 81, ராஜாநகர் மெயின் ரோடு
- 20A/3, டேம்லர்ஸ் சாலை
- 47/2, ராமசாமி சாலை (பிள்ளையார் கோயில் பின்புறம்).
- 332, ஆற்காடு சாலை
- 7, டி.டி.கே. ரோடு
- 11, கேம்ப் ரோடு (அகரம் ரோடு)
- 7/4, அருணாச்சலம் சாலை
- 13, திருவொற்றியூர் மெயின் ரோடு
- 12, தணிகாச்சலம் சாலை
- 2வது கிழக்குத் தெரு, காமராஜ் நகர்
- 44, நேரு தெரு
- 73, டி.பி. கோயில் தெரு.
- 374, டி.எச். ரோடு
- 50/1, காளியம்மன் கோயில் தெரு
- 137, வேளச்சேரி தாம்பரம் ரோடு
- 140, காலேஜ் ரோடு
- 114, லிங்கேஜ் ரோடு
- 7/19, இந்திரா காந்தி ரோடு
- 155/124
- 30, எம்.டி.எச். ரோடு
- 9-A, அரிகேசன் தெரு
- 13 & 14, குருமூர்த்தி கார்டன் தெரு
- 33/1, S.R.P கோயில் தெரு, ஜவஹர் நகர்
- 2, எல்லையம்மன் கோயில் தெரு
- 3/1A, முதலாவது அவென்யு
- 2, மடிப்பாக்கம் மெயின் ரோடு
- 113, ஆர்.கே.மடம் சாலை
- 4/1, பீமசேனா கார்டன் தெரு
- 42G, மாதவரம் ஹை ரோடு.
- 23, M.S. கோயில் தெரு
- 220&221, மவுண்ட் பூந்தமல்லி ரோடு
- 33, சிவசண்முகம் தெரு
- 15/1, தம்பையா ரோடு
- 15, பிருந்தாவன் தெரு

52 சுபிக்ஷாக்கள்
உங்கள் அருகிலும் ஒன்று

☎ 2432911

"விஜய சத்யா தேவி கல்யாணராமன் சத்தம் போடாம சௌபர்ணிகா ஆயிட்டாளாம்!"

சின்னத்திரை வட்டாரத்தில் காதைக் கடித்துக் கொண்டிருந்த இந்த விஷயம் நம் காதுக்கு வந்ததும் மந்தைவெளியிலுள்ள அவரின் வீட்டிற்குப் படையெடுத்தோம்.

தாம் நடித்த 'சௌபர்ணிகா' சீரியலை வீடியோ கேஸட்டில் போட்டுப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

"இப்படியாமே விஷயம்!" என்றால் ஆமாம் இதிலென்ன இருக்கிறது. சௌபர்ணிகா தொடர்ல நடிச்சதால மட்டும் இந்தப் பெயரை நான் மாத்திக்கலை. நான் வெளியூர் போறப்பல்லாம் அங்குள்ளவங்க என்னை 'சௌபர்ணிகா' 'சௌபர்ணிகா' என்றே கூப்பிடறாங்க. விஜய சத்யா தேவினு யாருக்குமே தெரியலை. அப்புறம் ஏன் அந்தப் பெயரையே வச்சுக்கக் கூடாதுனு தோணிச்சு. சரின்னு முடிவு பண்ணி கெஜட்லயே மாத்திட்டேன்" என்றார் தரையைப் பார்த்துச் சிரித்தபடி.

விஜய் டி.வியில் 'சிரித்தால் இனிக்கும்' நிகழ்ச்சியைத் தற்போது தொகுத்தளிக்கும் விஜய சத்யா.. ஸாரி சௌபர்ணிகாவுக்கு டைரக்டர் அகத்தியன் இயக்கிய 'சீதாராமன்' தொடர்தான் நல்ல வாய்ப்பைத் தந்தது என்கிறார். அதில் மதுரை தமிழ், சென்னை தமிழ், கொங்கு தமிழ் என்று எல்லா தமிழிலும் கலக்கினாராம். 'திடீர்னு அந்த கேரக்டர்கள் மனசில வந்து நிற்கும். உடனே வீடியோ கேஸட்டை போட்டுப் பார்ப்பேன்'

தந்தை கல்யாணராமன் சுப்ரீம்கோர்ட் வக்கீல்! "நீங்க நடிக்கணும்னு சொன்னதும் உங்கப்பா ஒத்துக் கிட்டாங்களா?"

"அது ஒரு பெரிய கதை! ராஜ் டி.வில என் ப்ரண்ட் ஒர்க் பண்ணிட்டு இருந்தா. அவளைப் பார்க்கறதுக்குப் போவேன் நான். ஒரு நாள், நீங்களும் காம்பயரிங் பண்ணுங்களேன்னுட்டாங்க. கேமரா டெஸ்ட் ஓ.கேன்னதும், எனக்கும் ஆசை வந்துடுச்சு. அப்பாகிட்ட பர்மிஷன் கேட்டேன். நான் ஒரே பொண்ணுங்கறதால எனக்கு நிறைய செல்லம். அதனால அப்பா ஓ.கேன்னுட்டார். அம்மாவும்தான்."

"சௌபர்ணிகா தொடர்ல பேய் மாதிரி நடிச்சீங்களே... அது சங்கடமாகத் தெரியலையா?" என்று ஆரம்பிக்கும் முன்பே சொன்னார்.

"அது ஒண்ணும் பெரிய ஹாரர்ரா இல்லை. கைநிறைய வளையல்போட்டு, வெள்ளைப் புடைவை கட்டிட்டு வந்தாலும் (இதுல பேய்க்கு லவ் வேற!) கடைசியில அம்மனோட போய் ஐக்கியமாயிடற மாதிரி தான் கதை. பயமுறுத்துற மாதிரியோ கொடூரமாகவோ தெரியலை. அதனால இது சங்கடமா தெரியலை. இந்தத் தொடருக்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால் இந்தத் தொடர் முடிஞ்சப்புறம் ஆவி, கொலை, அம்மன்ங்கறமாதிரி கொடூரமான கதைகளைக் கொண்டுட்டுத் தேடி வந்துட்டாங்க. நான் மறுத்துட்டேன்." என்றவரிடம் "காம்பயரிங் பண்றவங்களோட தமிழ் இவ்வளவு கொடுமையாக இருக்கே. சேனல்ல அப்படித்தான் பேசச் சொல்றாங்களா என்ன?" என்றோம்.

"அப்படியெல்லாம் இல்லை. மத்தவங்களைச் சொல்றதுக்கு முன்னாடி என் தமிழ் உச்சரிப்பு பரவாயில்லைன்னு நினைக்கிறேன். எனக்கு செகண்ட் லேங்குவேஜ் சமஸ்கிருதம் தான். தமிழ் படிக்கவே இல்லை. இப்பதான் தமிழ் படிச்சுட்டு இருக்கேன். இருந்தாலும் வீட்ல தமிழ் பேசறதால நான் சரியாவே உச்சரிக்கிறேன். தமிழ் பத்திரிகைகளையெல்லாம் எழுத்துக்கூட்டி, வாசிக்கிறேன்னா பாருங்களேன்!"

"இனி அடுத்து சினிமாதானா?"

"சான்ஸே இல்லை. சினிமாவுக்குப் போகமாட்டேன். நான் பணத்துக்காக நடிக்க போகலை. ஹாபியாத்தான் நடிக்க போனேன். சினிமாவுல நிறைய காம்ப்ரமைஸ் பண்ண வேண்டியிருக்கும். அதெல்லாம் என்னால முடியாது. அது மட்டுமில்லாம ஹீரோவைக் கட்டிப் பிடிக்கறது. மரத்தைச் சுத்தி ஆடறது

ஆவி, கொலை, அம்மன் கதைகளுக்கு

இதெல்லாம் எனக்கு ஒத்துவராத விஷயம். அதுக்காக தெரிஞ்சவங்க கூப்பிட்டா நடிக்காமலும் இருக்க மாட்டேன்'' என்று பொறிந்த சௌபர்ணிகா எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் பி.ஏ. பொலிடிக்கல் சயின்ஸ் முடித்திருக்கிறார்.

பக்தி பாடகி எம்.ஆர்.விஜயா இவரின் சித்தியாம். சித்தியின் தாக்கத்தில் இவரும் பாடியிருக்கிறார். சீதாராமன் தொடரில் வந்த 'மீன் பிடிப்போமே, மீன் பிடிப்போமே' என்ற பாடல் இவரின் குரல்தானாம்.



'நான் வேணா பாடிக் காட்டவா?' என்று ஆரம்பித்தவரை 'உங்க குரல் ரொம்பவே நல்லாயிருக்கு' என்று பாராட்டிவிட்டு, கடி ஜோக் சொல்வீங்களாமே?''



— சௌபர்ணிகா சொல்கிறார்!

என்றதும்தான் தாமதம்.

இதற்காகவே காத்திருந்தது மாதிரி ஆரம்பித்தார்.

''மொட்டை மாடியில ரிஷி சாப்பிட்டுட்டு இருக்காரு. இதை ஒரே வார்த்தையில எப்படிச் சொல்வீங்க.'' என்று கேட்க, முழித்தோம்.

''அட இது தெரியலையா? அப்ரிஷியேட் (Appreciate). அப்-ரிஷி-யேட்.''

''இன்னொண்ணு சொல்றேன். ஒரு பையன் மொட்டை மாடியில உட்கார்ந்து படிக்கிறான். ஏன்?''

''பரீட்சையாயிருக்கும்.''

''ம்ஹூம்.. மேல் படிப்பு படிக்கிறான்..''

இன்னொண்ணு என்று அவர் கடிக்க ஆரம்பிக்க 'யம்மாடியோவ்' என்று எஸ்கேப் ஆனோம் அங்கிருந்து!

— அப்பு

படம் : ஜரிஷ்



ஆற்காடு ஸ்ரீசக்திவேல் டிராவல்ஸ்

புனித வடநாடு பயணங்கள்

"அமர்நாத் பனிலிங்க தரிசனம்"

28.7.2000 22 நாட்கள் 6 இடங்களே உள்ளன

ஆக்ரா, டெல்லி, அமிர்தசரஸ், பகல்காம், பஞ்சதரனி, அமர்நாத், ஸ்ரீநகர் (காஷ்மீர்) கட்ராவைஷ்ணவி, நவசக்தி பீடங்கள், சாமூண்டா ஜ்வலாமுகி, மணிகர்ன், குலு, மணாலி, பக்ரா டேம், ரிஷிகேஷ், பத்ரி, கேதார் 2வது வகுப்பு பெர்த், உணவு உள்பட **கட்டணம் ரூபாய் 6720/-**

29.10.2000 15 நாட்கள்

ரயில், பஸ் பயணம், பஞ்ச துவாரகைகள் 4 ஜோதிர்லிங்க தரிசனம், போர்பந்தர், கோமிதளம், மவுண்ட் அபு, அம்பாஜி, அஜ்மீர், புஷ்கர், காந்திநகர், சிங்கனாப்பூர், சனிஸ்தலம், கணேஷ் புரி, ஷீரடி பண்டரிபுரம், பம்பாய், உணவு உறங்க பொது ஹால் **கட்டணம் உள்பட ரூ. 4750/-**

30.10.2000 14 நாட்கள்

அலகாபாத், காசி, கயா, அயோத்தி, நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, ஜெய்பூர், டெல்லி, 2வது வகுப்பு பெர்த் உணவு உள்பட **கட்டணம் ரூ. 4500/-**

11.9.2000 30 நாட்கள்

விஜயவாடா, பூரி, கல்கத்தா, கயா, காட்மாண்டு(நேப்பாள்) காசி, அலகாபாத், அயோத்தி, ஹரித்துவார், பத்ரி, கேதார், அமிர்தசரஸ், டெல்லி, ஆக்ரா, ஜெய்பூர், புஷ்கர், பம்பாய், பண்டரிபுரம், (10 இடங்களே உள்ளன) டீலக்ஸ் பஸ், உணவு, தங்கும் செலவு உள்பட **கட்டணம் ரூபாய். 6450/-**

விபரங்களுக்கு

ஸ்ரீ சக்திவேல் டிராவல்ஸ்

பா. இராமகிருஷ்ணன்

79, புதிய வேலூர் ரோடு, ஆற்காடு – 632 503. போன்: (04172) 33496

மதிப்பு மிக்க வீட்டுமனை சென்னைக்கு அருகில் உங்கள் பட்ஜெட்டுக்கு மிக அருகில்


ஸ்ரீ ரங்கா நகர்

SRI RANGA NAGAR

(ஹிந்துஸ்தான் மோட்டார் அருகில்)

DTCP APPROVED HOUSING PLOTS (904/90)

திருவள்ளூர்



சிறப்பு அம்சங்கள்

- மாவட்ட தலைநகர் • தாராளமான பஸ் மற்றும் ரயில் வசதிகள் • அகலமான, வசதியான தார் ரோடு
- உடனடியாக வீடு கட்டலாம், அருகிலேயே வீடுகள் • சுவையான மிகுதியான நிலத்தடிநீர்
- வேகமாக வளர்ச்சியடையும் இடம் • திருவள்ளூர்-ஸ்ரீபெரும்புதூர் நெடுஞ்சாலையில் உள்ளது
- சுத்தமான பத்திரம் • நம்பகமான நிறுவனம்
- 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

FREE TRIPS FOR SITE DAILY AT 6.00 a.m., 11.00 a.m. & 3.00 p.m.

Tel : 435 7721 / 31 / 61 / 81. Telefax : 4353183 Cell : 98400 44018

BLB PLEDGED TO ETHICS

BLB Estates (P) Ltd.

S-3, "RAMANA FLATS", No.27, RATHNA NAGAR,
Off : ANNA SALAI, TEYNAMPET, CHENNAI - 600 018.
(Behind APOLLO CANCER HOSPITAL & PETROL BUNK)

வர்த்தகத்தில் நேர்மை ; பணியில் பொறுப்பு

ஏர் இந்தியாவை விற்பது சரிதானா?



உலகின் மூத்த ஏர்லைன்ஸ்களுள் ஒன்று என்ற பெருமை பெற்ற ஏர் இந்தியா, இன்று நஷ்டத்தின் விளிம்பில். இந்த மோசமான நிலைக்கு என்ன காரணம்?

"ஏர் இந்தியா வசம் உள்ள விமானங்கள் மிகப் பழையவை. நாலு போயிங் விமானங்களின் வயது இருபத்து மூன்று. ஏர் பஸ் வகையைச் சேர்ந்த மூன்று, பதினேழு வருட பழசு. இன்னும் இரண்டு, பதினோரு வருட பழசு. மொத்தத்தில் ஐந்து விமானங்கள்தான் ஓரளவுக்குப் புதுசு. (ஐந்து வருடமாய்ப் பறக்கின்றன)" என்று புள்ளி விவரம் தருகிறது நிர்வாகம்.

ஆனால், பழைய விமானங்கள் வைத்திருந்தால் நஷ்டம்தான் என்ற வாதமே தவறு என்கிறார்கள் வான் வழிப் போக்குவரத்து நிபுணர்கள். "பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஏழு கன்கார்டு விமானங்கள் வைத்திருக்கிறது. இவை அனைத்தும் இருபத்துமூன்று வருடங்களாய் நன்றாகவே ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த விமானங்களில் எந்த ஒன்றில் பயணம் செய்யும் பயணியும், பழைய விமானத்தில் அசௌகரியங்களுடன் பயணம் செய்வதாய் உணர்வது கிடையாது. ஜப்பான் ஏர்லைன்ஸ், லுப்தான்சா, போன்ற பிற பிரபல விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் பழைய விமானங்களை வைத்திருந்தாலும் நல்ல லாபம் ஈட்டுகின்றன. ஆனால், ஏர் இந்தியா விமானப் பயணம் நரகம் என்று குறைபடாதவர்கள் இல்லை. ஆக, கோளாறு, விமானங்களில் இல்லை. ஏர் இந்தியாவின் நிர்வாகத்தில்தான்'' என்பது இத்துறை நிபுணர்களின் கருத்து.

ஏர் இந்தியாவின் பழைய வரலாறு பெருமைப்பட வைக்கும் ஒன்று. 65-66ம் ஆண்டில் மலேசியா சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ஆரம்பித்த போது அனைத்து உதவிகளையும் வழங்கியது ஏர் இந்தியாதான். ஆனால் இன்று நிலைமை வேறு. ஏர் இந்தியாவின் நாற்பத்து ஒன்பது சதவீதப் பங்குகளை வாங்கி, அதன் நிர்வாகத்தை ஏற்கப் போவது ஏர் இந்தியா ஆலோசனையைப் பெற்று உருவான சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்! இந்த நிறுவனம் உலகின் டாப் விமானக் கம்பெனிகளுள் ஒன்று. லாபம் கொழிக்கும் இந்த ஏர்லைன்ஸ், எங்கெங்கு புதிய தொழில் முதலீட்டுக்கு வாய்ப்பு உள்ளதோ, அங்கெல்லாம் முதலீடு செய்வதில் முனைப்பாக உள்ளது. சிங்கப்பூர் ஏர்லைன்ஸுக்கு ரொம்ப நாட்களாகவே ஏர் இந்தியா மீது ஒரு கண். தக்க தருணத்தில் கன கச்சிதமாய்க் காரியத்தை முடித்து விட்டார்கள் என்கிறார்கள் சிவில் விமானத்துறை வட்டாரத்தினர்.

"நஷ்டத்தில் இயங்குவதைக் காரணம் காட்டி, அந்நிய ஏர்லைன்ஸுக்கு விற்பது சரியில்லை. இந்தியாவிலேயே தனியார் வசம் கொடுக்கலாம். மத்திய அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. அதனால், இந்தியாவில் யாருக்கும் ஓட்டலை நடத்தத் தெரியாது என்று சொல்லிவிடலாமா? மத்திய அரசு, நிர்வாகத்தைச் செப்பனிடுவதில் கவனம் செலுத்தாமல் ஏர் இந்தியாவையே விற்கலாம் என்பது தவறான முடிவு" என்றும் சொல்கிறார்கள் சில நிபுணர்கள்.


— கௌதம்

ஒரு ஸ்பூன் ஜெர்மனி; அரை ஸ்பூன் ஸ்விட்சர்லாந்து



கிட்டத்தட்ட முப்பதடி ஆழத்தில் அகழ்ந்த போது அது கிடைத்தது - ஆதி ரோமானிய (கி.மு. காலத்து) தரைச் சித்திரம் - மொசைக் சில்லுகள் போன்ற வண்ணக் கற்களை ஒட்டுப் போட்டு வரையப்பட்டிருந்தது என்னவென்று நினைக்கிறீர்கள்...? ரோமானிய தேவதைகள் மதுபானம் செய்து விட்டுத் தள்ளாடி நடக்கும் காட்சி! காலடியில் காலியான மது பாண்டத்துடன் இன்னமும் புதுக்கருக்கழியாமல் காட்சி தருகிறார் அந்தத் தேவதை!

பதுங்கு குழிக்காகத் தோண்டிய போது அகப்பட்ட சரித்திர சின்னத்தை அப்படியே விட்டுவிட்டு, தோண்டியவர்கள் வேறு இடத்தில் போய் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவால் நொறுக்கப்பட்டு பின்னர் பிழைத்தெழுந்து புத்துயிர் பெற்ற காலத்தில், கலோன் நகரில் கண்டெடுத்த இந்த ரோமானிய கால தரைச் சித்திரத்தைச் சுற்றியே நகரின் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டிருக்கிறது. கலோன் மியூசியமின் கண்ணாடி ஜன்னல் வழியே பார்த்தால்





• கோட்டைச் சுவர்கள்... (கோப்லன்ஸ்)

இன்றைக்கும் அச் சித்திரம் பளிச்சென்று தெரிகிறது - இன்றைய பியரகங்களின் கி.மு. கால முன்னோடி போல!

கலோன் நகர அல்ஸ்டாட் பகுதி, பண்டைய ரோம சாம்ராஜ்யத்தின் கடை வீதியாக இருந்ததாம்.

''அங்காடிகளுக்கிடையே குற்றவாளிகளை நிறுத்திவைத்துச் சாட்டையால் அடிக்கும் சடங்கில் பொதுமக்களும் பங்கேற்றிருக்கிறார்கள்! ஏழை எளிய மக்கள் இங்கேதான் பிச்சையெடுத்துத் திரிந்தார்கள். வீடுகளில் இருந்தது போன்ற கழிப்பறைகள் அவர்களுக்கு ஏது...? வீதியோரம்தான்... இந்த இடம் எத்தனை நாற்றம் அடித்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்...''

கலோனைச் சுற்றிக் காட்டிய பெண்மணி (ஏகமாக ஹவும் ஷவும் கொண்ட அவர் பெயர் இறுதிவரை புரியவேயில்லை!) முகத்தைச் சுளித்தபடி விவரித்தார்.



சீதா ரவி

கி.மு. காலத்துப் பாதாளச் சாக்கடை அமைப்பு பிரமாதமாக இருந்ததற்குச் சான்றுகள் இன்னும் இருக்கின்றன. நகரின் பிரதான வீதி ஒன்றில், ரோமானிய சாக்கடையின் ஒரு வளைவை மட்டும் பெயர்த்தெடுத்து, கம்பிக் கிராதிக்குப் பின்னால் காட்சிப் பொருளாக்கி வைத்திருக்கிறார்கள்!

''இப்போதைய கழிவுகளெல்லாம் எங்கே போகின்றன...?'' என்று கேட்ட நம்மைச் சற்று அதிர்ந்து பார்த்தார் 'கைட்'.

''ரைன் நதிக்குள்தான் - ஆனால் நன்றாகச் சுத்திகரித்துத்தான் அனுப்புவோம்'' என்றார்.

• ஹார்த்

ஐரோப்பிய கலை மறுமலர்ச்சிக் காலத்தில் (Renaissance) பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கட்டடக் கலை துரித மாற்றங்களுக்கு உள்ளாயிற்று. நேர் சுவர்களும் கோபுரங்களும் வட்ட வடிவ கும்பங்களுக்கும் வளைவுகளுக்கும் வழி விட்டிருக்கின்றன. ஏனைய நாடுகளின் வேகத்தில் ஜெர்மானிய கட்டடக் கலை மாறவில்லை

3





• கலோன் சதுக்கம் - கசையடி இப்போது இல்லை!



• கன்டெய்னர்களுடன் விசைப்படகு...



என்கிறார்கள்.

ஆனால், ஆட்சி மாற்றத்துக்கு ஏற்ப பல சில்மிஷங்களை, கட்டடங்களின் புற அலங்காரத்தில் புகுத்தியிருக்கிறார்கள். கலோன் கம்யூனிடி ஹால் முகப்பில் ஒரு காலகட்டத்தில் ஆர்ச் பிஷப்பின் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாதிரியார்கள் சர்ச்சை மட்டுமின்றி நகரையும் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டதை எதிர்த்துப் புரட்சி செய்து, அவர்களை வெளியேற்றி, 'மேயராட்சி' மலரச் செய்திருக்கிறார்கள் மக்கள். அதன் பிறகு கம்யூனிடி ஹால் முகப்பைச் செப்பனிட்ட சமயம், ஆர்ச் பிஷப்பை வரிந்து கட்டிக் கொண்டு அவமானப்படுத்தியிருக்கிறார்கள் - அவர் பாதத்தில், பின்புறத்தைக் காட்டிய நிலையில் ஒரு அவதூறான குட்டிப்பிசாசு உருவத்தைச் சமைத்து அமர்த்தியிருக்கிறார்கள்! காழ்ப்புணர்ச்சிக்கு சாட்சி சொல்லும் அச் சிற்பம் ஒரு கார்ட்டூன் போல இன்றும் இருக்கிறது.

மேயர்கள் மட்டும் சாச்வதமா என்ன...? பங்களா பால்கனியில் இருந்தபடி மக்களுக்குத் தரிசனம் தரும் கலாசாரத்துக்கு அன்றே வித்திட்ட ஆட்சியாளர்கள் அவர்கள். பங்களாவும் பால்கனியும் இந்த மக்களாட்சிக் காலத்திலும் பொலிவுடன் இருக்கின்றன.

மேயர்களும் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட, மன்னராட்சி, அமைச்சராட்சி, ஹிட்லராட்சி என்று முன்னேறி இரண்டாம் உலகப் போர் காலகட்டம் வந்தது.

ஹிட்லரையும் ஜெர்மனியையும் உயிருக்குயிராக வெறுத்த அமெரிக்க ராணுவ ஜெனரல் பாட்டன், ஜெர்மனிக்குப் படையெடுத்து வந்தார். ஹிட்லர் அகப்படவில்லை என்ற ஆத்திரமோ என்னவோ, சிவனே என்று குதிரை மேல் உட்கார்ந்திருந்த மன்னன் முதலாம் வில்லியமின் சிலையை உடைத்து, நொறுக்கி ரைன் நதிக்குள் தூக்கிப் போட்டுவிட்டார்!

- இது நடந்தது மற்றொரு ரைன் கரையோர நகரமான கோப்லன்ஸ் என்ற ஊரில். போர் முடிந்து அமைதி திரும்பியதும் உள்ளூர் ஹீரோவான அவருக்குப் புதுச் சிலை செய்து வைத்தார்கள் மக்கள்.

இறக்கை முளைத்த குதிரை மேல் அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருக்கும் வில்லியமுக்கு அருகேயே இன்னொரு சரித்திரச் சின்னமும் இருக்கிறது. கிழக்கு - மேற்கு ஜெர்மனிகளின் ஒருங்கிணைப்பின் போது உடைத்து தகர்க்கப்பட்ட பெர்லின் சுவரின் சில துண்டுகளை வட்டமாக நட்டு வைத்து உருவாக்கியிருக்கும் நினைவுச் சின்னம்.

அதன் அருகே நின்று கொண்டு ரைன் நதியைக் கடந்து நோக்கியபோது, பிரஷ்ய மேலாதிக்கத்தின் போது அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான கோட்டைச் சுவர்களும் அரண்மனை முகப்புகளும் மலைச் சரிவில் தெரிந்தன.

பல நூறு வருட வரலாதின் அடையாளங்களுக்கிடையே கோப்லன்ஸில் தற்கால வாழ்க்கை ரைன் நதி போல் ஆர்ப்பாட்டமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது.

நீண்ட காலத்துக்கு ஜெர்மனியுடன் ஜன்மப் பகை கொண்டாடிய பிரான்ஸிலிருந்து ஓடிவரும் மொஸல் நதி, ரைனைக் கள்ளத் திருமணம் செய்து கொள்வது இந்த கோப்லன்ஸ் நகரில்தான்.

அந்தச் சங்கமத்தைக் காண அழகான விசைப் படகுகளில் அழைத்துப் போனார்

கள். வானம் கோபத்தில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கறுத்துக் கிடந்தது. பக்க மலைச் சரிவுகளிலிருந்து தவழ்ந்து வந்த காற்று, நதி நீரின் குளுமையை உறிஞ்சி வீச, காது மடல்கள் சில்லிட்டு உணர்விழக்க ஆரம்பித்தன. மழைத் துளிகள் ஓசையின்றி நதியிடம் நாகரிகமாய்க் கிசுகிசுத்தன. படகின் மேல் தளத்தில்





• கோப்லன்ஸில் பாதுகாக்கப்படும் பழைய சர்ச்

விதானத்தினடியில் நின்றபடி ஜெர்மன் காற்றையும் மழையையும் முகத்தில் வாங்கிக் கொள்ள விரும்பாத பயணிகள் அடித்தளத்தில் காப்பியோ, ஐஸ்க்ரீமோ அல்லது கோப்லன்ஸ் பியரோ சாப்பிட்டார்கள். படகைச் செலுத்த ஒருவர், அவரது உதவியாளர், சுத்தம் செய்யவும் பரிமாறவும் ஒருவர் என மூன்றே மூன்று பேர் அந்தப் படகையும் ஆலாய்ப் பறந்த கூட்டத்தையும் இலகுவாகச் சமாளித்தார்கள்.

மேல்தளத்தில் நின்ற தைரியசாலிகள், மஃப்ளர்களால் சுற்றியது போக மீதம் தெரிந்த முகத்தில் சிரிப்பைப் பொருத்திக் கொண்டு காமெராவுக்குப் போஸ் கொடுத்தார்கள்.

நதியில் ஒரு வளைவு திரும்பிய போது தூரத்துக் கரையில் வண்ணக் குடைபிடித்துக் கொண்டு நடந்து போன குழந்தையின் அசைவில் குளிருக்குப் பழகிப் போன உல்லாசம் தெரிந்தது. பச்சைப் பசேலென்று புல் படர்ந்த கரையோரத்தில் ஒரு வாத்து குடும்பம் சுவாதீனமாய் மழையில் நனைந்தது.

“நாளைக்கு என்ன ப்ரோகிராம் தீபா...?” - ஒரு சிறு குழு டூர் மானேஜரை சூழ்ந்து கொண்டு குளிரை மறக்க முயன்றது.

த்ரூபா கண்காட்சிக்காக சுமார் எழுநூறு பேரை பல்வேறு இந்திய நகரங்களிலிருந்து அள்ளிப் போட்டுக் கொண்டு போன ஆர்பிட் டூர்ஸ் நிறுவனப் பிரதிநிதி தீபா காலே. த்ரூபாவிலும் அதைத் தொடர்ந்த சுற்றுலா விஜயங்களிலும் கூடவே வந்து பயணிகளின் இன்ப துன்பங்களையும் கோப தாபங்களையும் சமச்சீர் நோக்குடன் தாங்கிக் கொண்டவர்.

ஆட்டு மந்தையைப் பத்துவது போல் எட்டாம் நம்பர் டூரின் பயணிகளை உரிய நேரத்தில் பஸ்ஸுக்குள் அடைப்பதற்கே அவர் வாங்கிய சம்பளம் ஈடாகிப் போயிருக்கும்! ஊர் சுற்றிப் பார்த்த போது, ஒவ்வொரு முறையும் கெடு வைப்பதும், 'அதற்குள் வராவிட்டால் தலைகளை எண்ணாமல் புறப்பட்டு விடுவோம்' என்று அச்சுறுத்துவதும் பின்னர் தவறாமல் தலைகளை எண்ணிப் பார்ப்பதுடன், 'காணாமல் போனவர்களைத் தேடி இழுத்து வருவதுமாக இமாலய பொறுமை - அல்ல! ஆல்ப்ஸ் நிகர் பொறுமை காட்டியவர்.

போதாக்குறைக்கு, ஜெர்மனியைச் சுற்றிக் காட்ட பெல்ஜியத்திலிருந்து பேருந்து எடுத்து வந்திருந்த ஓட்டுனர் ஹார்த்தை ஒவ்வொரு தாமதத்தின் போதும் தாஜா பண்ணித் தணிய வைக்க வேண்டிய வேலையும் தீபாவுடையது!

தீபாவைப் போல் சுமார் ஒரு டஜன் இளம் இந்தியர்கள் ஆர்பிட்டின் பல்வேறு டூர்களில் இந்தப் பணிகளைக் குரல் உயர்த்தாமல் செய்தார்கள்.

ஆர்பிட் ஒரு டிராவல் ஏஜென்ஸியாக உருவான கதையே வேடிக்கைதான். மும்பையில் ஒரு சிறிய அச்சுத் தொழில் பிஸினஸ் நடத்தும் ஓம் பிரகாஷ் என்பவர் முதன் முதலாக அறுபதுகளில் த்ரூபா பார்க்க வந்த போது மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார். தங்குமிடம், மொழி, உணவு யாவுமே என்ஜினியரிங் சீட் மாதிரி எட்டாக் கையாக இருக்கக் கண்டு 'செல்ஃப் பைனான்ஸிங்' கல்லூரி போல அவரே ஒரு டிராவல்ஸ் ஆரம்பித்து விட்டார். பணத்தை மட்டும் கட்டி விட்டால் பச்சைக் குழந்தை



கேம்ப் கிரண்

ஜீ ரா. இது சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பஞ்சாபி சேனல். இதில் ஆரம்பத்திலேயே சூப்பர் ஹிட் ஆகிவிட்ட ஒரு நிகழ்ச்சி 'கேம்ப் கிரண்'. இதனை நடத்துபவர் அதிரடி ஐ.பி.எஸ். ஆபிசரான கிரண்பேடி. ''மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் இளைஞர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும்தான் இந்த நிகழ்ச்சியை நடத்துகிறேன். நான் பிறந்து வளர்ந்தது பஞ்சாபில்; தாய் மொழி பஞ்சாபி. எனவேதான், பஞ்சாபி சேனலுக்காக இந்த பஞ்சாபி நிகழ்ச்சி'' என்கிறார் கிரண் பேடி.

– எம்.


போல் நம்மை அழைத்துப் போய் காட்டி திரும்பி விமானம் ஏற்றிவிடுகிறார்கள்.

கையிலே காசு; வாயிலே தோசை என்பார்களே, அந்த சித்தாந்தம்தான்! ஆனால் ஆர்பிட்டைப் பொறுத்தவரை வாயிலே தோசை கிடைக்காது. வகை வகையான வட இந்திய உணவு (இரவில் மட்டும்) வக்கணையாய் வழங்கப்படும். இதற்கென்றே நாற்பது சமையற்காரர்களையும், கஸ்டம்ஸில் மன்றாடி அனுமதி பெற்று, ஐந்து டன் உணவுப் பண்டங்களையும் இந்தியாவிலிருந்து தருவித்து, ஜெர்மனியிலும் சுவிட்சர்லாந்திலும் ஆங்காங்கே உள்ள ஹோட்டல்களுக்கு அனுப்பி சமைக்கச் செய்து... மொத்தத்தில் ஊர் திரும்பினால் வீட்டுச் சமையல் அந்நியமாகிவிடக்கூடிய அபாயத்தில் இறுத்தி விட்டார்கள்!

திருப்பா விருந்தினர்களுக்கென்று ஆர்பிட் ஏற்பாடு செய்திருந்தவற்றுள் முக்கியமானது ஹைடல்பர்க் தொழிற்சாலை விஜயம். மேற்கு ஜெர்மனியின் பெருமை மிகு நகரங்களுள் ஒன்றான ஹைடல்பர்க்கின் புராதன அரண்மனைக்கும் அதன் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகத்துக்கும் ஈடான பெருமையுடன் விளங்குவது ஹைடல்பார்க் அச்சு இயந்திரத் தொழிற்சாலை. வெய்ஸ்லாக் என்ற உள்ளூர்க்காரரால் ஒரு சாதாரண பட்டறையாக ஆரம்பிக்கப்பட்டு அச்சு இயந்திர உற்பத்திக்கு மாறி மூன்று தலைமுறைகளின் பிரமிப்பூட்டும் தொழில்நுட்ப வளர்ச்சியை உறிஞ்சிக் கொண்டு, கடந்த ஆண்டின் 'சுற்றுச்சூழல் பிரக்ஞை' விருதைப் பெற்று, பன்னிரண்டு நிமிடங்களுக்கு ஒரு அச்சு யூனிட்டை (பல யூனிட்கள் கொண்டது ஓர் இயந்திரம்) உற்பத்தி செய்யும் ஸ்திதியில் கொடிகட்டிப் பறக்கிறது. ஹைடல் பர்கின் ஷீட் ஃபெட் ரக இயந்திரங்கள் மட்டுமே விற்பனையில் நான்கு லட்சத்தைத் தாண்டியிருக்கின்றன. இயந்திரங்களுக்கான அத்தனை பாகங்களையும் இவர்களே உற்பத்தி செய்கிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் அடுக்கும் 'லாஜிஸ்டிக் சென்டர்' மட்டுமே நான்கு ஃபுட்பால் கிரவுண்ட் பரப்பளவுக்கு இருக்கிறது! அதில் 1,30,000 உதிரி பாகங்களை உயரவாக்கில் தரை தொடங்கி கூரை வரை ரகவாரியாக அடுக்கி வைத்திருக்கிறார்கள்.

ஒன்றரை மணி நேரம் தாமதமாகப் போன போதும் சிரிப்புடன் வரவேற்று, "நோ ஃபோட்டோஸ் ப்ளீஸ்" என்று எச்சரித்து முதன் முதலில் நம்மை அழைத்துப் போனது லாஜிஸ்டிக் சென்டருக்குத்தான். அங்கே வீடியோ காட்சியுடன் ஆரம்பமான ஹைடல்பார்க் நிறுவன அறிமுகமும் தொழிற்சாலை டூரும் அச்சுத் தொழிலுடன் தொடர்பில்லாதவர்களுக்குக் கூட மிக சுவாரஸ்யமான அனுபவம்.

(தொடரும்)



''டாக்டர் எனக்குக் கொஞ்ச நாளா காது சரியா கேட்க மாட்டேங்குது...''

''பரவாயில்லை, எவ்வளவு பீஸ்ங்கிறதை எழுதிக் காண்பிச்சுடறேன்!''

– பா. ஜெயக்குமார்





2000 ஜூலை 2
விக்ரம ஆனி 18
மலர் : 58
இதழ் : 49

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



புலிகள் ஆதரவு மாநாடா?

ஈரோடில் ஜூலை 1, 2 தேதிகளில் நடக்கவுள்ள மாநாட்டைத் தாம் மிக ஆவலுடன் எதிர்பார்ப்பதாகக் கட்சித் தொண்டர்களிடம் கூறியிருக்கிறார் வைகோ. தமிழக முதல்வரும் பங்கேற்க இருக்கும் இந்த மாநாட்டுக்கு அத்வானியும், சந்திரபாபு நாயுடுவும் கூட அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவும் இலங்கையும் கூட மிகுந்த எதிர்பார்ப்புடன் மாநாட்டை நோக்குகின்றன.

இலங்கையில் வடகிழக்கு மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தரும் ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த இடைக்கால கவுன்சில் அமைக்க மும்முரமான முயற்சிகளை சந்திரிகா எடுத்து வருகிற காலகட்டத்தில், ஈழப் பிரச்னை குறித்து மிக அதிகமாகக் குரலுயர்த்தி வருவோரும் ஈரோடில் கூடிப் பேசவிருக்கிறார்கள். ஈழப் பிரச்னை குறித்து ஈரோடில் பேச்சு இருக்காது என்ற வைகோவின் உறுதிமொழியை மீறி, மாநாடு குறித்த கவர் வாசகங்கள் ஏற்கெனவே சென்னையில் பேசிக் கொண்டிருக்கின்றன.

ம.தி.மு.க.வின் வெளிப்படையான புலிகள் ஆதரவு நிலையும் அதற்குத் தி.மு.க.வின் மறைமுக வழிமொழிதலும் இன்று உலகறிந்த விஷயங்கள். அதனாலேயே ஈரோடு மாநாடு, விடுதலைப் புலிகள் ஆதரவு மாநாடாகவும் 'தமிழர் உரிமை' என்ற போர்வையில் புலிகளின் பயங்கரவாதத்தைத் தூண்டி நியாயப்படுத்தக்கூடிய மாநாடாகவும் அமைந்து விட வாய்ப்பு



இருக்கிறது.

அவ்வாறு ஈரோடு மாநாடு மாறிப் போகாமல் காக்கும் பொறுப்பு வைகோ கையில்தான் இருக்கிறது.

இதுவரை ம.தி.மு.க. தலைவர் எடுத்துள்ள நிலையானது புலிகள் ஆதரவு நிலை மட்டுமல்ல; அது புலிகளை வீரர்களாகவும் இலங்கை அரசை விரோதியாகவும் சித்திரிக்கும் நிலையும் கூட. இதற்கு வைகோவின் ஜெனிவா உரையே சாட்சி (ஆதாரம் : எரிமலை, ஏப்ரல் 2000 இதழ்)

புலிகள் வன்முறையை மட்டும் கைவிட்டால் அவர்களும் பங்கேற்கக்கூடிய வடகிழக்கு மாகாண சுயாட்சி நோக்கி முதல் அடி எடுத்து வைக்கலாம் என்று இலங்கை அரசு தெளிவாகக் கூறிவிட்டது.

இதன் பிறகும் வன்முறையைத் தொடர்வதில்தான் விடுதலைப் புலிகள் குறியாக இருக்கிறார்கள்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளிடம் அண்டிப் பேசக்கூடிய தகுதியில் உள்ள ம.தி.மு.க.வின் பொறுப்பு மிக அதிகம்.

முதல் காரியமாக, இலங்கை அரசை விரோத மனப்பான்மையுடன் நோக்குகிற அணுகுமுறையை ம.தி.மு.க. கைவிடவேண்டும். ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் அதன் அதிபருக்கும் உரிய அங்கீகாரத்தை அளித்து, ஆயுதங்களைத் துறந்து அவ்வரசுடன் வந்து பேசுமாறு விடுதலைப் புலிகளை அழைக்க வேண்டும்.

பிரபாகரனுடைய அரசியல் ஆலோசகரைத் தருவித்து வெளிப்படையான பேச்சு வார்த்தை நடத்தியே முன்னேற்றம் காணலாம்.

சந்திரிகாவைச் சந்தித்துப் பேசி, ஈழப் பிரச்னைக்குப் படிப்படியானதொரு அமைதித்



தீர்வை வகுக்கத் துணை நின்று புலிகள் தரப்பிலான நிலையையும் எடுத்துச் சொல்லி உதவ வைகோ - கருணாநிதி கூட்டுக் குழுவினால் முடியும்.

இந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஈரோடு ம.தி.மு.க. மாநாடு மிகச் சரியான சந்தர்ப்பமாக அமைய முடியும். தமிழீழ மக்களிடம் மெய்யான அக்கறையும் இலங்கையில் அமைதி திரும்ப வேண்டும் என்ற நோக்கமும் இருப்பின், ஈழப் பிரச்னையை மாநாட்டி லிருந்து ஒதுக்காமல் ஈரோடு மேடையை வைகோ ஆக்கபூர்வமான முறையில் பயன் படுத்தியாக வேண்டும். மாறாக, புலிகளை மாவீரர்களாக வர்ணிக்கவும் இலங்கை அரசை வசைபாடவும் இலங்கை ராணுவ அக்கிரமங்களைப் பட்டியலிடவும் ம.தி.மு.க. மாநாடு நிலைக்களமாகுமானால் இன்றையச் சூழலில் மிக மோசமான விளைவுகளையே ஏற்படுத் தும். இலங்கைத் தமிழருக்கு இந்தப் போக்கினால் ஒரு பயனுமில்லை. துன்பம்தான் அதிகரிக்கும்.

இலங்கை வடகிழக்கில் அமைதி ஏற்படுவதைத் தாமதப்படுத்துவதுடன் மீண்டும் இருதரப்பினர் உணர்வுகளையும் தூண்டி விட்டு வன்மம் வளரவே வழிவகுக்கும்.

சந்திரிகா அரசு மீது எதிர்ப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்கள் எதுவும் இராது என்பதே ம.தி.மு.க. மாநாட்டின் முதல் தீர்மானமாக இருக்கட்டும். விடுதலைப் புலிகளை வன்முறை யைக் கைவிடச் செய்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பது இரண்டாவது தீர்மானமாக இருக்கட்டும்.

ஆரோக்கியமான ஈரோட்டுத் தீர்மானங்களுக்கு நிச்சயமாக இலங்கையில் எதிரொலி இருக்கும். அதுமட்டுமின்றி, நெருங்கி வந்துகொண்டிருக்கும் தேர்தலின் போது தமிழகத்தில் தலைநிமிர்ந்து வோட்டுக் கேட்கும் தகுதியையும் தி.மு.க. - ம.தி.மு.க. கூட்டணிக்கு அத் தீர்மானங்கள் அளிக்கும்.

“வேகத்தைக் காதலித்தேன்!”

“பயங்கர ஸ்பீடு... முன்னால இரண்டு கார் போகுது. ஓவர்டேக் செய்யணும். லேசா ரைட்ல ஓடிச்சு ஆக்ஸிலேட்டரை மிதிச்ச அடுத்த நொடி இரண்டு தடவை உருண்டு தலைகுப்புற கிடக்குது கார். அதுக்கு அடியில நான்! உடம்புல ரத்தம்! எனக்கு பக்குன்னது...”

- கார் ரேஸில் தாம் காயமடைந்த அனுபவத்தை இப்படி விவரிக்கிறார் பார்த்தீவா சுரேஸ்வரன்.

கடந்த மே மாதம் மலேஷியாவில் நடந்த பார்முலா ஏசியா 2000 - ரேஸில் முதல் ரவுண்டில் கலந்து கொண்டு இரண்டாவதாக வந்திருக்கும் இந்த சென்னைக்கார வாலிபருக்குக் குறும்பு கொப்பளிக்கும் வயது! ஆமாம் ஸ்வீட் ட்வண்டி!

“இதுதான் இன்டர்நேஷனல் லெவல்ல நான் கலந்துகிட்ட முதல் ரேஸ். கடைசி வரை முதல்ல வந்திடுவேன்னு நம்பிக்கிட்டிருந்த இறுதி நொடி, சின்ன கவனக்குறைவால இரண்டாவது இடம்தான் கிடைச்சது” என்று வருத்தப்படுகிறார்.

சின்ன வயதில் பாஸ்கட் பால் ஆடிக் கொண்டிருந்த பார்த்தீவாவுக்குத் திடீரென்று கார் ரேஸ் மீது காதல் வந்த கதை சுவாரஸ்யமானது.

“டீ.வி.யில கார் ரேஸ் பாத்திட்டிருந்தேன். பின்னால போற காரை ம்... முந்து முந்துங்கற மாதிரியான மனநிலை வந்தது. அப்புறம் வேகம் மனசுல பதிஞ்சுட்டுது. வேகமா போற கார், டுவீலரைக் கண்டால் ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கும். கொஞ்ச நாள் கழிச்சு ஃப்ரண்ட் ஒருத்தன் கார் கொண்டு வந்தான். அவன் கார்ல டிரைவிங் படிச்சேன். அப்போ என் வயசு என்ன தெரியுமா?” என்று கேள்வி கேட்டுவிட்டு மெதுவாக புன்னகைக்கிறார்.

“வெறும் பதிமூன்றுதான்! பிறகு வீட்ல வந்து எனக்கு கார் வேணும்னு சொன்னேன். இப்பவே ஏன் உனக்குக் கார்னு சொல்லிட்டு பிறகு வாங்கிக் கொடுத்தாங்க. இதுக்கு இடையில கார் ரேஸ்ல பங்குபெறுகிற விக்கி சந்தோஷை சோழவரத்துல பார்க்கப் போனேன். அவர் நிறைய சொல்லித் தந்தார். இங்க ரோட்ல காரை வேகமா ஓட்டி முட்டி மோதி நிறைய ஆக்ஸிடெண்ட்! அதனால விக்கி சந்தோஷ் தான், ஏன் ரோட்ல ஓட்டற? ட்ராக்ல ஓட்டுனு கூட்டிட்டுப் போனார். அப்புறம் ஒருநாள் திடீர்னு நீ கார் ரேஸ்ல கலந்துக்கன்னு சொல்லி ஆல் இந்தியா கிராண்ட் ப்ரீ போட்டியில இறக்கி விட்டுட்டார். இது தான் முதல் போட்டி. இதுல நான் இரண்டாவது வந்தேன். முதல் போட்டியிலேயே இரண்டாவது வந்துட்டதால எனக்கே என் மீது நம்பிக்கை வந்தது. முதல்



போட்டியிலேயே செகண்ட்னா, பார்ஸ்டா வர முடியும்ங்கற நம்பிக்கை! அப்புறம் முழுவதும் இதுல இறங்கிட்டேன்" என்று கார் ரேஸிற்குத் தாம் வந்த கதையைச் சொன்னார் பார்த்தீவ்.

இதற்காகவே இங்கிலாந்தில் உள்ள சில்வர்ஸ்டோன் ரேஸ் ஸ்கூலில் ட்ரெயினிங் எடுத்தாராம். அப்பா சுரேஷ்வரனும், அம்மா ரமாவும் கிரானைட் பிஸினஸில் இருப்பதால் ட்ரெயினிங்கிற்கானப் பணப் பிரச்னை இவருக்கு இல்லை.

கார் ரேஸின் போது இரண்டு மூன்று முறை விழுந்து எழுந்து அடிபட்ட கதையை



யும் சொன்னார் பார்த்தீவ்.

"ரொம்ப ரிஸ்க்கானதுதான் இது. சின்னச் சின்ன ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கு. அதுக்காக அதை விட்டுட முடியாது. நாம ரோட்ல நிக்கறது, நடக்கறது எல்லாமே ரிஸ்க்கான வேலைதானே. எப்ப எது நடக்கும்னு சொல்ல முடியாதே. அதனால அதைப் பெரிசா எடுத்துக்கலை."

சர்வதேச அளவில் ரேஸில் கலக்கிக் கொண்டிருக்கும் நம்மூர் நரேன் கார்த்திக்கேயனை ஏகத்துக்குப் புகழ்கிறார் பார்த்தீவ். 'நல்ல டைப், எனக்கு நிறைய ஹெல்ப் பண்ணார்' என்றவர், "இன்டர்நேஷனல் லெவலில் கடந்த ஆண்டு நடந்த ஃபார்முலா யு.கே.வில் பத்தாவது இடமாக வந்தேன். இதில் இன்னும் நன்றாக வரமுடியும். ஆனால் அதிக செலவு இருக்குது. இதற்கு ஸ்பான்சர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஜூலை 8-ம் தேதி கோலாலம்பூரில் நடக்கிற ஃபார்முலா ஏசியா 2000 - இரண்டாவது சுற்றுல கலந்துக்கறதுக்காக இப்போ தயாராகிட்டு வர்றேன்" என்கிறார்.

"இந்திய மோட்டார் ரேஸிங் நல்லா முன்னேறிக்கிட்டு வருது. இப்ப நிறைய போட்டிகள் நடக்குது. அதிகமானவர்கள் பங்கேற்கிறாங்க. இதெல்லாம் நல்ல விஷயம்தானே''என்று சொல்லும் இவர், தமக்கான ரோல் மாடலாக ஜெர்மனியின் மைக்கேல் ஷுமேக்கரைச் சொல்கிறார். இவரும் கார் ரேஸ் ஜாம்பவான்தான்!

இவரின் இன்னொரு ஹீரோ, நடிகர் ரஜினிகாந்த்! "தமிழ் சுமாராத்தான் பேசுவேன். ஆனா தமிழ்ல ரஜினி படம் பார்ப்பேன். அவர் பேச்சு எனக்கு நல்லா புரியுது(?)" என்கிறார் ஸ்டைலாகத் தலையைக் கோதியபடி!

"புட்டபர்த்தி சாய்பாபா ஸ்கூல்ல தான் பார்த்தீவ் படிச்சிட்டிருந்தான். எங்க, எப்படி டிரைவிங் படிச்சான்னே தெரியலை, கார் வேணும்னு கேட்டான், வாங்கிக் கொடுத்தோம். ரேஸ்ல நிறைய ஜெயிச்சுருக்கான். அவனுக்கு நல்ல வருங்காலம் இருக்குன்னு நம்பறோம்''



என்கிறார் பார்த்தீவின் அம்மா ரமா சுரேஷ்வரன்.

இவருக்குச் சின்னக் கவலையும் இருக்கிறது. அதாவது சேத்துபட்டு கிறிஸ்டியன் காலேஜ் ஸ்கூலில் ப்ளஸ் டூ படித்ததோடு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு முழு நேரமும் கார் ரேஸில் இறங்கி விட்டாராம் பார்த்தீவ். கல்லூரி வரை படித்திருக்கலாம் என்கிறார். நியாயமான கவலைதானே!

— செ. ஏக்நாத்

அட்டை வண்ணப்படம் : **ஜரிஸ்**

— பார்த்தீவா சுரேஸ்வரன் பேட்டி

கண் தானத்தை விடச் சிறந்த கல்வி தானம்!

கண் தானத்தை விடச் சிறந்த ஒன்று உண்டென்றால் அது கல்விதானமாகத்தான் இருக்க முடியும். கண் இருந்தும் படிப்பைத் தொடர முடியாமலிருப்பது பார்வை இழப்பை விடக் கொடியது அல்லவா? எனவேதான் நன்கு படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு உதவுமாறு வாசகர்களை கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை அன்புடன் அழைக்கிறது.



• முத்துவேல்



• நித்யா.



• வசந்த் பொன்

இதோ சில உதாரணங்கள் :

● பத்தாம் வகுப்பில் 500க்கு 463 மதிப்பெண் பெற்று தற்போது ஸ்காட் கிறிஸ்துவ மேல்நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வருகிறேன். என் தந்தை கூலி வேலை செய்பவர். சில நாட்களுக்கு முன் அவர் உடலில் இரண்டு அறுவைச் சிகிச்சைகள் செய்ய நேர்ந்ததால் சரியாக வேலை செய்ய முடியாமல், குறைவான வருமானம் மேலும் குறைந்து போயிற்று. எனவே என் படிப்புக்கு உதவுமாறு வேண்டுகிறேன்.

வெட்டூரணிமடம் - 629 003.
ஈ.எஸ். வசந்த் பொன்

● என் தந்தை வேலை பார்த்த நிறுவனம் மூடப்பட்டதால் தற்போது வருமானம் இல்லை. என் தாயாரும் வேலைக்குச் செல்லவில்லை. மெட்ரிக்கில் நான் 1100க்கு 858 மதிப்பெண்கள் பெற்று 11ம் வகுப்பில் படித்து வருகிறேன். தயவுசெய்து எனக்கு தங்கள் அறக்கட்டளையின் உதவி கிடைக்கச் செய்யவும்.

சென்னை - 26. பி. நித்யா.

● திரு.வி.க. அரசினர் கலைக் கல்லூரியில் இயற்பியல் முதலாண்டு படிக்கிறேன். மேல்நிலைப் பள்ளி பொதுத் தேர்வில் 881 மதிப்பெண்கள் பெற்றேன். எனக்குப் பெற்றோர் இல்லாத நிலையில் பெரியம்மாவுடன் இருந்து கல்வி பெற்று வருகிறேன். அவரும் ஒரு விதவை என்பதால் எனது கஷ்டத்தைப் போக்க தங்கள் அறக்கட்டளையின் உதவித் தொகை கோருகிறேன்.

கொத்தங்குடி - 610 211.
எம். முத்துவேல்

இம்மாதிரி ஆயிரக்கணக்கான விண்ணப்பக் கடிதங்கள் ஆண்டுதோறும் வருகின்றன. முதல்வர் சான்றிதழுடன் வருகின்ற விண்ணப்பங்களை அறங்காவலர்கள் பரிசீலித்து தகுதி உடைய மாணவர்களைத் தேர்ந்தெடுத்து உதவித் தொகைகளை வழங்குகிறார்கள். ரூ. 10,000 விநியோகத்தில் ஆரம்பித்த இந்த நற்பணி வளர்ந்து இந்த ஆண்டு ரூ. 1,50,000 பல மாணவர்களுக்கு விநியோகமாகிறது. சென்ற இதழில் இதுபற்றிய விரிவான அறிவிப்பைப் படித்தும் பார்த்திருப்பீர்கள்.

இந்த நற்பணிக்கு உதவ விரும்புவோர் **KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST** என்ற பெயரில் A/c Payee செக், டி.டி. அல்லது எம்.ஓ. மூலம் தங்களால் இயன்ற தொகை அனுப்பலாம். ரூ. 1000 அல்லது அதற்கு மேற்பட்ட நன்கொடைகள் அரசு பத்திரங்களில் முதலீடாகி நிரந்தரப் பயன்தரும். அதாவது ஆண்டுதோறும் உங்கள் உதவி மாணவர் சமுதாயத்துக்குப் போய்ச் சேரும். நன்கொடைகளுக்கு 80.G வருமான வரி விலக்கு உண்டு.

நன்கொடைகளை அனுப்ப விலாசம் :

கி.ராஜேந்திரன்,
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
நெ.1, ஐந்தாவது தெரு,
ஏரி வட்டம்,
சென்னை - 600 034.

சத்யராஜ் ஜல்ஸா பண்ணும் பேர்வழி. வடிவேலு-1 ஒரு பிராத்தல் புரோக்கர். வடிவேலு-2 பிராத்தல் ஒழிப்பை தமது லட்சியமாகக் கொண்ட இன்ஸ்பெக்டர். நிஜமான பிராத்தல்கள் கைதாகும் ஸீன்கள் போதாது என்று குடும்பப் பெண்கள் 'பிராத்தல்'கள் என்று தவறாகக் கைது செய்யப்படும் ஸீன்கள் வேறு! மொத்தத்தில் ஒரு 'பிராத்தல் ஸ்பெஷல்' ஆக தயாராகி இருக்கிறது இந்தப்படம்!

'சத்யராஜ் இன்னும் ஹீரோவா?' என்று யாரும் பெருமூச்சு விட்டு விடாதபடி நம் எல்லோருடைய மூக்கையும் அவரின் 'டிரிம்' ஆன உடம்பும் 'பிரிஸ்க்'ஆன நடிப்பும் அடைத்து விடுகின்றன.

சோகமயமான ரோல்களில் இந்த 'ரேட்' இல் ஸ்பெஷலைஸ் பண்ணிக் கொண்டு போனால் 'க்ரை பேபி தேவயானி' என்று டைட்டிலில் போட வேண்டியதுதான்!

காமெடி ஸீன்களும் கோர்வையாக வரவேண்டும் என்று டைரக்டர் நினைத்திருப்பது வரவேற்க வேண்டிய ஒரு 'ஆட்டிட்யூடு'! வடிவேலு-ஜாப் வெல்டன்! வசனகர்த்தாவின் டயலாக் ஸ்டைல் ஃப்ரெஷ்ஷாக இருக்கிறதே?

ரஞ்சித் தமது வருங்கால மனைவிக்கு டி.வி., ஃப்ரிஜ் என்று சாமான்கள் வாங்கிச்



என்னம்மா கண்ணு

சேர்க்கும் விதத்தைப் பார்த்து சப்புக் 'கொட்டிக்கொண்டு தேவயானி அவரை காதலிக்கத் தொடங்குவது, பெண் இனத்தையே 'சீப்'ஆக ப்ரொஜெக்ட் பண்ணி விடுகிறது. பலன்- தேவயானி முதன்முதலாக சத்யராஜ் வீட்டிற்குள் நுழையும் போது ''தேவயானீசாச... சத்யராஜ் ஃப்ரிஜ் வச்சிருக்காரு... பேசாம இவரைக் கவுத்திரு...'' என்று தியேட்டரில் ஒரே கூச்சல், போங்கள்.

நட்புக்காகக் காதலை விட்டுக் கொடுக்கிறார் சத்யராஜ்- ஒன்றிற்கு இரண்டு தடவையாக. இது தான் கதை. முதல் தடவை-ஓ.கே. ஆனால் இரண்டாவது தடவை-நண்பன் எத்தனை கேவலமானவன் என்று தெரிய வந்தும் அவர் விட்டுக் கொடுப்பது-வெரி ஃபூலிஷ்!

சரி, விடுங்கள்! சுவாரஸ்யமான ப்ரெஸண்டேஷனுக்காகவும், இது தயாரிப்பு குழுவின் மெய்டன் முயற்சி என்பதாலும் மறப்போம் மன்னிப்போம்!

— கிருஷ்ணா சிதம்பரம்

சீர்திருத்த கல்யாணம் முதல் ஆன் லைன் திருமணம் வரை புரட்சிகள் பல நிகழ்ந்துவரும் காலத்திலும் பலர் மாப்பிள்ளையை காரில் அமர்த்தி ஊர்வலம் வருகிறார்கள். கார்களைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தோம்!

காருக்கும் காருக்கும்

அசோக் நகர் இருபத்து மூன்றாவது தெருவில் இரண்டு ஊர்வலக் கார்களை ஜோடியாக நிறுத்தி வைத்திருந்தார் பழனிவேலு. இவை



ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி தயாரித்த ஹெரால்டு வகை கார்கள். இன்றைய மாருதி கார் போன்று ஐம்பதுகளில் கலக்கிய கார்கள். ஒரு காரை கேரள மாநிலம் கோழிகோட்டிலிருந்தும், ஒன்றை சென்னையிலும் வாங்கினாராம். ஒரு காரின் விலை ரூபாய் பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு. இவர் செலவு செய்திருக்கும் தொகை ஐம்பதாயிரம்!

இரண்டும் ஒரே வகை கார் என்பதால் ஒன்றை இடையில் விற்று விட்டிருக்கிறார். ஆனால் விற்ற கார் அடிக்கடி கனவில் வந்து அழுததாம்! (வால்ட் டிஸ்னி கார்டூனில் வருவது மாதிரிதான்) உடனே விற்றவரிடம் போயிருக்கிறார். பழைய மாடல் கார்களை வாங்கிச் சேர்க்கும் அந்த பணக்கார ஆங்கிலோ - இந்தியன் தாத்தா, அந்தக் காரை கவனிக்காமல் மரத்தடியில் போட்டு வைத்திருக்கிறார். கார் காதலரான பழனிவேலு கொதித்துப் போய், ஒரு கோஷ்டியுடன் சென்று இரண்டாயிரம் ரூபாய் அதிகம் கொடுத்து திரும்பவும் வாங்கி வந்து விட்டாராம் அந்தக் காரை.

''இந்த டப்பாக் காரை எதுக்குய்யா மெனக்கெட்டு திரும்ப வாங்கிட்டு வர்றே?'' என்று நண்பர்கள் கின்



• மந்த்ரா

டலடிக்க...

"இன்னும் இரண்டே நாள்ல புதுப் பொண்ணு மாதிரி மாத்திக் காட்டறேன் பாரு" என்று இவர் சவால் விட...

"அப்படியே உன் பையனுக்கு அதைக் கல்யாணம் செய்து வெச்சுடு" என்று நண்பர்கள் திரும்பவும் நக்கல் செய்ய, பழனிவேலு மனத்தில் ஒரு ஜாலி எண்ணம் உதித்திருக்கிறது. உடனடியாக காருக்குப் பச்சை வண்ணத்தில் பெயிண்ட் அடித்து, கையோடு தம் நண்பர்களைக் கூப்பிட்டு அவர்கள் முன்னிலையிலேயே தனது இரண்டு ஹெரால்டு கார்களுக்கும் கல்யாணம் செய்து வைத்திருக்கிறார், 1995-ஆம் வருடத்து ஆயுத பூஜை அன்று! அதிலிருந்து ஊர்வலத்திற்குச் சென்று திரும்பி விட்டால் இரண்டு கார்களையும் ஜோடியாகத்தான் நிறுத்துவாராம்.

"மாதத்தில் பல நாட்கள், மாப்பிள்ளைகளை (சென்னையில் மணமக்கள் ஊர்வலம் மிகக் குறைவு) சுமந்து செல்லும் இந்தக் கார்கள் மட்டும் பேச்சிலராக இருந்தால் நன்றாக இருக்காது" என்றவரிடம், உங்கள் ஜோடிக் கார்களுக்கு பிள்ளை, குட்டி இல்லையா? என்றோம். 'மாரீஸ் மைனர்' என்ற, இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பழைய காரை பலத்த போட்டிக்கிடையில் வாங்கி, கடந்த ஆண்டு ஆயுத பூஜையின் போது தமது ஹெரால்டு ஜோடிக்கார்களுக்குத் தத்துக் கொடுத்து விட்டாராம்!

இதில் சிறப்பம்சம் என்னவென்றால், இங்கிலாந்தில் பிரபு குடும்பத்துச் சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கார்தான் இந்த 'மாரீஸ் மைனர்' கார் என்கிறார். "இந்தக் காரைப் பார்த்தாலே எனது மகன் ஜெயசங்கருக்கு உற்சாகம் பீறிட்டுக் கிளம்பும். இந்தக் கார்களை உயிருக்குயிராகப் பராமரிப்பது அவன்தான்" என்றார். சரியான கார் குடும்பம்.

"முஸ்லீம், கிறிஸ்தவர், இந்து என ஜாதிமத வேறுபாடு இல்லாமல் எல்லாரக மாப்பிள்ளைகளையும் சுமந்து போகும் இந்தக் கார்களுக்குத் 'தேசிய வாகன' அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்று தனது வெட்டரிவாள் மீசையை தடவியபடி கோரிக்கை வைத்தார். உங்கள் கோரிக்கையை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற வாஜ



• பழனிவேலு



• வினோத்



• தண்டபாணி

• கல்யாண ஜோடி



கல்யாணம்!

பாயிக்கு உடனே தெரிவிக்கிறோம்" என டபாய்த்து விட்டு, பாண்டிபஜார் அருகே உள்ள கிருஷ்ணா தெருவுக்கு வந்தோம்.

வரிசையாக ஐந்தாறு கார்கள் நிறுத்தப் பட்டிருந்தன. இந்தக் கார்களுக்கு யார் உரிமையாளர் என்று அருகிலிருந்த 'தேநீர் நிலையத்தில்' கேட்டதும், இப்போது சைக்கிளில் வருவார் என்றார்கள். கொஞ்ச நேரத்தில் வந்தவர், வினோத். இத்தனை கார்களுக்கு முதலாளியாக இருக்கும் நீங்கள் சைக்கிளில் வரலாமா என்றோம். இத்தனை கார்களையும், பழைய இரும்பு விலைக்குத் தான் விற்க முடியும்.. வாங்கி சவாரி செய்ய யாரும் முன்வர மாட்டார்கள் என்றார். கல்யாண சீசனில் மட்டும்தான் இதற்கு வேலை. ஒரு ஊர்வலத்திற்கு இருநூற்று ஐம்பது ரூபாய் கட்டணம். அதில் நூறு ரூபாய் டிரைவருக்குப் போய்விடும். இதை நம்பி வாழ முடியாது. எனவேதான் நான் டிரைவராக இருக்கிறேன் என்றார். அமீர் மஹால் ஆர்காடு இளவரசரிடமிருந்து ரூபாய் ஆறாயிரம் கொடுத்து ஒரு இம்பாலா காரை வாங்கினாராம். மற்றொரு ஹெரால்டு காரை வீணை பாலசந்தரிடமிருந்து வாங்கியிருக்கிறார். அவர் இறந்த பிறகு அவர் நினைவாக காரிலேயே அவர் வீணை வாசிப்பது மாதிரி ஒரு படம் வைத்திருக்கிறார். ஊர்வலக் காரில் அலங்காரமாகத் தொங்க விடப்படும் பூக்களை, ஊர்வலம் முடிந்ததும், கல்யாணமாகாத ஜெயின் பெண்கள் பிய்த்துத் தலையில் வைத்துக் கொள்வார்களாம்! (வாழ்க நம்பிக்கை - சாரி.. மூடநம்பிக்கை!)

அதே தெருவில் அடுத்து நாம் சந்தித்தது தண்டபாணி. தேனாம்பேட்டை குடிசைப் பகுதியில் வசித்து வரும் இவர் ஒரு கார் எலக்ட்ரீஷியன். எல்லா ரகக் கார்களுக்கும் ஒயரிங் செய்யும் இவருக்கு, நாமும் ஒரு பழைய மாடல் கார் வாங்கி ஊர்வலத்திற்கு விட்டால் என்ன என்று தோன்ற, பல சிரமங்களுக்கு இடையில் பணம் சேர்த்து ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறுக்கு ஒரு ஹெரால்டு காரைத் தேடிப்பிடித்து வாங்கியிருக்கிறார். (ஆஹா! இந்தியாவில் ஒரு ஏழைக் குடிமகனுக்கு கார் இருக்கிறதே!) வாங்கிய பிறகு மேலும் ஏழாயிரம் செலவு செய்திருக்கிறார். கார் வாங்கி இரண்டு ஆண்டுகள் ஆகியும், இன்னும் போட்ட பணத்தில் பாதியைக் கூட வருமானமாக எடுக்கமுடியவில்லையாம்.

சென்னையில் இதுபோன்ற ஊர்வலக் கார்கள் சுமார் நூற்றி ஐம்பது இருக்கின்றன என்றும், சமணர்கள் ஆண்டுதோறும் உண்ணா நோன்பிருந்து, உபவாசம் முடிந்ததும் கார்களில் ஊர்வலமாக வருவார்கள். அப்போது இந்தக் கார்களை ஒரே இடத்தில் பார்க்கலாம் என்றும் சொன்னவர், தமது காருக்கு மந்த்ரா என்று பெயர் வைத்திருக்கிறார். அது வேறு ஒன்றும் இல்லை. தேடினேன் வந்தது படத்தில் மந்த்ராவுடன் ஒரு பாடல் காட்சியில் தனது கார் நடித்திருக்கிறது என்கிறார் சட்டைக் காலரை தூக்கிவிட்டபடி!

— சக்கரத்தாழ்வார்

படங்கள் : **வெங்கடேஷ்**



கொரியாவிலும் கலக்கும் முத்து!

ஜப்பான் நாட்டில் சரித்திரம் படைத்த முத்து திரைப்படம் (175 நாட்கள்) தற்போது தென் கொரிய நாட்டில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. "முத்து மகாராஜா" (ஜப்பானிலும் இதே பெயர்தான்) என்ற பெயரில் வெளியான திரைப்படம், தென் கொரியாவில் வெளியிடப்படும் முதல் தென்னிந்திய திரைப்படம் என்ற பெருமையைப் பெறுகிறது. சியோலில் மூன்று தியேட்டர்களில் கொரிய மொழி சப்டைட்டிலுடன் திரையிடப்பட்டுள்ளது.

ஆதாரம் : எக்னாமிக் டைம்ஸ்

- கலா



74

மஹாலக்ஷ்மியின் தயைக்கு ராமாயணத்திலும் பிரமாணம் இருக்கிறது என்று சொன்னேன்.

ராமனோ தன்னை சரணாகதி பண்ணியவர்களைத்தான் ரக்ஷித்தான். ஒரு தடவை பண்ணி விட்டாலே ரக்ஷித்து விடுவான். பல தடவை பண்ணினால் அது சரணாகதி ஆகாதே! "ஒரே ஒரு தடவை மஹாவிச்வாசத்தோடு ஆத்ம சமர்ப்பணம் செய்ய வேண்டும். அப்படிப் பண்ணி விட்டால், பண்ணிய எல்லோரையும் ரக்ஷிக்கிறேன்'' என்றான்.

விபீஷணனை அழைத்து வர சுக்ரீவன் தடையாக நின்றபோது ராமன் என்ன சொன்னான்...? 'அந்த சுக்ரீவனையே விபீஷணனை அழைத்து வர அனுப்புங்கள்' என்றான்.

''ஹே சுக்ரீவா! போ... விபீஷணன் இல்லை என்று வைத்துக்கொள். ராவணனே வந்திருக்கிறான் என்று வைத்துக்கொள். அவனை அழைத்து வா...'' என்றான்.

ராவணனுக்கே அபயம் அளிக்கிறேன் என்று சொன்னவன் மற்றவர்களை விடுவானா...? யார் வந்து அடிபணிந்தாலும் ரக்ஷிப்பேன் என்கிறான்.

ஆனால், சீதா பிராட்டி என்ன பண்ணினாள் என்று பாருங்கள் – ஆஞ்சநேயன் வந்த போது ராக்ஷஸிகள் எல்லோரும் பக்கத்திலே இருக்கிறார்கள். எல்லோரும் அவளை மிரட்டிய ராக்ஷஸிகள் – ஏகாக்ஷி, ஏக கண்டி, லம்போதரி என்று ரொம்ப விகார ரூபம் கொண்டவர்கள் – இத்தனை நாளாகப் பிராட்டியை மிரட்டிக் கொண்டிருந்தவர்கள் அவர்கள்!

ஆஞ்சநேயருக்கு அவர்களைப் பார்த்தவுடனே கோபம் வந்து விட்டது. அவன் என்ன சொல்கிறான்...

"அம்மா! நீங்கள் ஆக்ஞாபித்தால் என்னுடைய முஷ்டியாலும் காலாலும் நசுக்கி உதைத்து விடுகிறேன் இவர்களை..."

சீதா பிராட்டி பார்த்தாள். "அப்பா! நீ போய் இப்படிப் பேசலாமா? இவர்களை அடிக்கிறேன் என்கிறாயே... நியாயமா?'' என்று கேட்டுவிட்டு ஒரு வாக்கியம் சொல்கிறாள் – ரொம்ப அழகான வாக்கியம்.

"பாபத்தையே பண்ணியவர்களாகட்டும், சுபமான காரியத்தையே பண்ணியவர்களாகட்டும், ஒருவரை தயையோடு ஆட்கொள்

குறையொன்றுமில்லை

வதுதான் சிறந்த தர்மம். ஏனென்று கேட்கிறாயா ஆஞ்சநேயா! உலகத்திலே தப்பே பண்ணாதவர்கள் கிடையாது. எல்லோருமே தப்பு பண்ணுகிறவர்கள்தான். ஆகையினாலே தயையோடு நாம் இருந்தால்தான் நல்லது. நமக்கு நல்லது பண்ணுகிறவர்களாகட்டும், கெட்டது பண்ணுகிறவர்களாகட்டும் எல்லோரிடமும் தயையோடு இருக்க வேண்டும்.''

இதைக் கேட்டவுடனே ஆஞ்சநேயனின் முகம் அப்படியே வெளுத்துப் போய் விட்டதாம். 'எல்லோருமே தப்பு பண்ணுகிறவர்கள்தான் என்று சொல்லி விட்டாளே! இவளோ ஹ்ருதயத்தில் ராமனைப் பிரதிஷ்டை பண்ணி வைத்துக் கொண்டிருக்கிறாள். அப்படியானால் சீதை சொல்கிற இந்த வாக்கிலே ராமனுமல்லவா அடிபட்டுப் போய்விடுகிறான்!....' என்று யோசித்தான் அவன்.

சீதை சொல்கிறாள்.... "என்ன பார்க்கிறாய்? ராமன் தப்பு பண்ணவில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா...? அவனும்தான் பண்ணியிருக்கிறான். என்ன தப்பு...? பத்து மாத காலம் நான் இந்த ராக்ஷஸ கிருஹத்திலே இருக்கும்படியாகி விட்டது. நான் இங்கே இருப்பது ஏற்கெனவே அவனுக்குத் தெரிந்து போய் விட்டது. தெரிந்து போனால், உடனே வந்து என்னைக் காப்பாற்ற வேண்டாமா...? அதுவும் ஒரு காமாதுரன் இருக்கிற இடம் இது... இங்கே இவ்வளவு நாள் என்னை விட்டு வைப்பது ராமன் பண்ணிய தப்பு இல்லையா...?''

உடனே ஆஞ்சநேயன், "ஆமாமாம்! இது ரொம்ப பெரிய தப்புதான். எனக்குத் தோன்றவேயில்லையே...'' என்று சொன்னான். அப்படிச் சொல்லும்போதே மறுபடியும் முகம் வெளுத்துப் போய்விட்டது அவனுக்கு.

உடனே கேட்டு விட்டான். "நீங்கள் என்ன தப்பு பண்ணினீர்களோ...? நானும் தப்பு பண்ணியவன்தானே...?" என்று.

"பர்த்தா – கணவன் – எப்படியிருந்தாலும் அவனை விமர்சித்து மற்றவர்களிடம் பேசக் கூடாது. இப்படிப் பண்ணினான், அப்படிப் பண்ணினான் என்று சொல்கிறவள் உத்தம பதிவ்ரதை ஆகமாட்டாள். இப்போது ராமன் என்னைப் பத்து மாதம் இங்கே விட்டு வைத்தான் என்று உன்னிடம் சொன்னேனே... அதுதான் பெரிய தப்பு!"

"ஆமாமாம்! இதுவும் தப்புதான்'' என்றான் ஆஞ்சநேயன்.

முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

எல்லாவற்றுக்கும் 'ஆமாம் ஆமாம்' என்கிறான் அவன்!

உடனே அடுத்து, "அடியேன் என்ன தப்பு பண்ணினேன்?" என்று கேட்கிறான்.

"இவர்களையெல்லாம் அடிக்கிறேன்,



உதைக்கிறேன் என்றாயே அதுதான் பெரிய தப்பு'' என்றான்!

''கூனியைக் காட்டிலுமா இவர்கள் கொடியவர்கள்? ராவண பரிபாலனத்தில் இப்படிப் பண்ணினார்கள். விபீஷண பரிபாலனத்தில் மாறிப் போய்விடப் போகிறார்கள். ராஜா இடும் ஆணையை நடத்தி வைக்கக்கூடியவர்கள் – அவ்வளவுதான். இவர்களைப் போய் அடிக்கிறேன் என்கிறாயே. இவர்களுக்கு அநுக்கிரஹம் பண்ண வேண்டாமா?'' என்கிறாள்.

என்ன உத்தமமான குணம் பாருங்கள் சீதைக்கு! அடிபணியாத, சரணாகதி பண்ணாத அத்தனை ராக்ஷஸிகளையும் ஆஞ்சநேயனிடத்திலிருந்து காப்பாற்றி விட்டாள். ராக்ஷஸிகளெல்லாம் என்ன சரணாகதியா பண்ணினார்கள்?!

ராமன் என்ன பண்ணுகிறான் என்பதையும் பார்த்து விடுவோம்... சரணாகதி பண்ணினால் ரக்ஷிக்கிறேன் என்கிறான். சீதையோ சரணாகதி பண்ணாமல் ஈரக்கை உலராமல் இருக்கக்கூடிய அத்தனை ராக்ஷஸிகளையும் ரக்ஷித்து விட்டாள். ஏன் அப்படிப் பண்ணினாள் என்று பார்த்தால் இவர்கள் அத்தனை பேரையும் – திரிஜடை இருக்கிறாளே – விபீஷணனுடைய பெண் – அவள் ஒருத்தி பண்ணிய சரணாகதியிலேயே அடக்கி விட்டாள். அவள் ஒருத்திக்காக இத்தனை பேரையும் ரக்ஷித்து விட்டாள்.

இதைத்தான் குணரத்ன கோஷம் என்கிற உயர்ந்த ஸ்தோத்திரத்திலே பராசர பட்டர் என்கிற ஆசார்யர் அழகான ஸ்லோகத்திலே சொல்கிறார்:

இரண்டு கோஷ்டி சொல்கிறார்:

சீதா கோஷ்டி ஒன்று; மற்றொன்று ராமா கோஷ்டி. ராமா கோஷ்டியைக் காட்டிலும் சீதா கோஷ்டிக்கு ஏற்றம் அதிகம் என்கிறார்.

ஏனென்றால் ராம கோஷ்டியில் காகாசுரன் ஓடிவந்து அடிபணிந்தான். எங்கெல்லாமோ சுற்றிவிட்டு கடைசியிலே ராமன் திருவடியிலே வந்து விழுந்தான். அப்படி வந்து விழுந்ததையே சரணாகதி என்று ரக்ஷித்து விட்டான் ராமன்.

ராமனுடைய பாதத்திலே இறக்கையை வைத்துக்கொண்டு விழுந்தான். அந்தக் காக்கை சீதையினுடைய மார்பிலே குத்தி ரத்தம் வந்திருக்கிறது. அவ்வளவு துஷ்டன்!

ஆனால் சீதை என்ன பண்ணுகிறாள்... ''ஐயோ பாவம்! குழந்தைக்குச் சேவிக்கக் கூட தெரியவில்லையே என்று தலையைத் திருப்பி வைத்தாளாம்!

ராமன் பார்த்தான்... 'இவ்வளவு காருண்யம் இவளுக்கு இருக்கிறதே!' என்று கொல்லத் தகுந்தக் குற்றம் அவன் பண்ணியிருந்தாலும் ஒரு கண்ணை மட்டும் போக்கி, விட்டு விட்டான்.

வந்து அடிபணிந்தவர்களை ரக்ஷித்தவன் ராமன். விபீஷணன் வந்து 'சர்வலோக சரண்யாய, ராகவாய மகாத்மனே' என்று அடிபணிந்த போது ரக்ஷித்தான். சீதையோ அடிபணியாதவர்களையும் ரக்ஷித்து விட்டாள். ஆகையினாலே சீதாபிராட்டியினுடைய உத்தம காருண்யம் வேறு எங்கு உண்டு? லக்ஷ்மி காருண்யமானது அந்யத்ருசம் – வேறு எங்கும் காண முடியாதது.

தயையே வடிவானவள் மஹாலக்ஷ்மி. இதரானைத் துன்புறுத்தவே தெரியாதவள். அப்படிப்பட்ட ஏற்றமுடையவள் என்பதை இதிஹாஸ சிரேஷ்டமான ராமாயணம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

அதனால்தான் ராமாயணத்திலே சிறையிருந்தாள் ஏற்றம் சொல்லப் பெற்றது; பாரதத்திலே தூது போனவன் ஏற்றம் சொல்லப்பட்டது என்று ஆசார்யர்கள் சொல்கிறார்கள்.

'சிறையிருந்தாள் ஏற்றம்' என்று சீதையின் ஏற்றம் சொல்லப்படுவதைக் கவனியுங்கள். சிறை வைக்கப்பட்டவனின் ஏற்றம் அல்ல.

சிறை வைக்கப்பட்டவள் என்றால் தூக்கிப் போய் அடைக்கப்பட்டவள் என்று பொருள். இங்கே சீதை நினைக்கவில்லை என்றால் ராவணனால் அவளைச் சிறை

அருள்வாக்கு

தாயார், தகப்பனார், ஸஹோதரர், பத்னி புத்ரர் இருந்தால் அவர்கள் ஆகியவர்களுக்குச் செய்ய வேண்டிய ட்யூட்டிகளைச் செய்யாமல் லோகத்துக்கு உபகாரம் செய்கிறேன் என்றால் அது 'ஹிபாக்ரிஸி' (போலி வேஷம்)தான். இப்படியெல்லாம் பண்ணி விட்டு மனுஷ்யாள் எடுத்துக் காட்டினால் கோபம் வருகிறது, எரிச்சல் வருகிறது என்றால் பரோபகாரத்தால் இவனுக்கு எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்றுதான் அர்த்தம். 'எல்லாரிடமும் அன்பாயிருக்கணும், மதுரமாய்ப் பழகணும்' என்பதுதான் தொண்டு செய்கிறவனுக்கு லக்ஷணம்.

பொதுத்தொண்டு என்பதற்காகவே வீட்டு மனுஷ்யர்களிடம் அன்பு போய், எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால் இவன் தொண்டு செய்து என்ன புண்யம்? இவனுக்கு என்ன சித்த சுத்தி ஏற்பட முடியும்? குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிற மாதிரி பண்ணிக் கொள்ளக் கூடாது.



தன் லிமிடேஷனை எவனும் எப்போதும் உணரவேண்டும். மனுஷ்யராய்ப் பிறந்து விட்டோம். அதனால் நாம் பல தினுஸில் கட்டுப்பட்டுத்தான் கிடக்கிறோம். ஆசைகள், பெரிசாய் இருக்கலாம். அவை நல்லதாகவும் இருக்கலாம். லோகத்துக்கு நல்லது பண்ணணும் என்றே ஆர்வமிருந்தாலும் நமக்கும், நம் குடும்பத்துக்கும் செய்தேயாக வேண்டும் என்ற நிர்பந்தம் இருப்பதை உணர்ந்து இந்த ட்யூட்டிக்கு ஹானியில்லாமல்தான் லோக ஸேவை செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

கொள்ள முடியுமா...? தானே சிறை இருக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள். நினைத்துச் சிறையிருந்தாள்! அதுதான் அவள் பெருமை!

ராமனுக்கு ரொம்ப வருத்தமாம். கோதாவரி தீரத்திலே இன்றைக்குக் கூட போய்த் தங்கிப் பார்த்தால் அங்கேயிருக்கிற மணலையெல்லாம் கையால் நெருடினால் ஹா சீதே! ஹா சீதே! என்று சத்துமாம். அப்படி கதறி கதறி அங்கே அழுதிருக்கிறான் ராமபிரான்!

இப்படி சீதையைப் பிரிந்து கதறிக் கதறி நான் அவஸ்தைப்பட்டிருக்கிறேன்... ஆனால் இந்த வால்மீகி கடைசியிலே சீதையினுடைய 'சரித்திரம் பெரிசு' என்று எழுதி விட்டுப் போய் விட்டாரே... என்று மனத்தில் வருத்தமாம்.

'ஏன் அப்படி எழுதினார் வால்மீகி...? ஒருவேளை, அவள் சிறையிருந்தாளே அதனால் – சிறையில் பெருமை ஏற்பட்டிருக்குமோ...?' என்று அடுத்த ஜன்மத்திலே சிறையிலே பிறந்து விட்டானாம் அவன்!

காராகிருஹத்திலேயே வந்து பிறந்தான் கிருஷ்ணன். அந்த அவதாரத்திலே பெருமை அவனுக்குத்தான்! மகாபாரதத்திலே தூது போனவனின் ஏற்றம்தானே சொல்லப்படுகிறது!

மஹாபாரதம் மொத்தம் வாசுதேவ பிரபாவம். ராமாயணம் மொத்தம் மஹாலக்ஷ்மி பிரபாவம். இந்த இரண்டு இதிஹாசமும் லக்ஷ்மி நாராயணத் தத்துவம். – இந்த த்வய மந்திரத்தினுடைய விவரணம் ராமாயணம்.

அந்த லக்ஷ்மிகடாக்ஷம் இருந்ததால்தான் வால்மீகிக்கே இவ்வளவு அழகாக எழுத முடிந்தது. நிறை கர்ப்பிணியான சீதா பிராட்டியை நிராதரவாகக் கொண்டு போய் வால்மீகி ஆச்ரமத்திலே விட்டுவிட்டு வரச் சொன்னானே, அந்த ராமன் ஒன்றும் கொடியவன் அல்ல.

லக்ஷ்மணன் விட்டுவிட்டுப் புறப்பட்டுப் போய் விட்டான். வால்மீகி அழைத்துக் கொண்டு போய் தனது ஆச்ரமத்தில் சீதையை வைத்துப் பராமரிக்கிறார். அங்கே குழந்தைகள் லவ-குசர் பிறக்கிறார்கள். சீதைக்கு விசேஷ பணிவிடையெல்லாம் பண்ணினார் வால்மீகி.

எதற்காக இப்படிப் பண்ணினான் பரமாத்மா...? சீதா கடாக்ஷம் – லக்ஷ்மி கடாக்ஷம் – வால்மீகிக்கு நிறைய ஏற்பட வேண்டும் என்பதற்காக!

இந்த ராமாயணத்தை அவர் எழுதப் போகிறார். எழுதுவதற்கு லக்ஷ்மி கடாக்ஷம் இருந்தால்தான் முடியும் என்று முதலிலேயே சீதையை அனுப்பி அவரை அனுக்கிரஹம் பண்ணும்படியாகச் செய்து விட்டான் பரமாத்மா.

வெளியிலே கதையைப் பார்த்தால் ராமனைக் குற்றம் சொல்லத் தோன்றும். ராமன் பண்ணியது தப்பு என்று கூடத் தோன்றும். ஆனால் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவன் இப்படிப் பண்ணினான்.

(அடுத்த இதழில் முடியும்)



ஒருவர்

தாத்தாவோடு பிறந்தவர்கள்
இரண்டு பேர்

ஒரே பாயில் உறங்கி
ஒரே தட்டில் கைகழுவியவர்கள்
குடும்பம் என்றாகி சொத்து பிரித்தபோது
பூஜைக்கு வைத்திருந்தப் பிள்ளையார்கூட
ஆளுக்கொன்று என முடித்ததாம்

மற்றவர்களுக்கெல்லாம் ஐந்தாறு
தாத்தாவிற்குப் பிறந்ததோ
ஒரே பிள்ளை

எந்தக் கணத்தில்
எவர் முதற்கல்லை எறிந்தனரோ

அண்டை கழிக்கும்போது,
தழைவெட்டும்போது
மூறைவைத்து தண்ணீர்
இறைக்கும்போது
வரப்பொதுக்கி மாடு
மேய்க்கும்போது என
எப்போதென்று சொல்ல
முடியாது-
சாக்குப் பேச்சில் தொடங்கி
ரத்தக் களறியில் முடியும்

பெரும்பாலும்
அடிபட்டுத் திரும்புவது
அப்பாதான்
அம்மாவின் இரவுகள்
அழுகைக்காகவே வந்தன

பட்டு நொந்த அப்பாவிற்கு
நாங்கள் ஐந்துபேர்

கோர்ட்-கேஸ் என
அலைந்ததற்கிடையிலும்
சவாலுக்காக
காரைவீடு கட்டினார்
எல்லாக் கிணற்றிலும் பம்ப்
செட் போட்டார்
ஆளுக்கொரு சைக்கிள்
வாங்கித்தந்து
ஹைஸ்கூலில்
படிக்கவைத்தார்

அப்பாவின் இரவுகள்
துரத்தித் துரத்தி அடிக்கிற மாதிரியான
கனவுக்காக வந்தன

நிழல் பழகின உடம்பு எங்களுக்கு
ஆளுக்கொரு மூலையாய்
அடித்து விரட்டியது
நிழல்

அப்பா மட்டும்
காயங்களோடு வருகிறார்
இப்போதும்
தன்னந்தனியாக

பச்சியப்பன்



கோபம் ஸ்டாக் ஏறுது!

கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வந்தாலே கோபப்படற மாதிரி ஏதாவது நடக்குது. கார்ல போகும்போது நமக்கே நல்லா தெரியும். கண் முன்னாடி ஒரு சைக்கிள்காரன் தேவையில்லாம 'கட்' அடிச்சி 'டர்ன்' பண்ணி நம்ம கார் மீது வந்து இடிப்பான். உடனே கூட்டம் கூடிடும். 'கார்காரரே.. பேச்செல்லாம் வாணாம்... ஒரு ஐந்நூறு ரூபாய் கொடுத்துட்டுப் போப்பா... பாவம் சைக்கிள்காரன் என்று தெருவில் கூடிய திடீர்ப் பஞ்சாயத்தில் தீர்ப்பாகும். பல அம்சங்களை யோசித்து கார்காரன் ஐந்நூறு ரூபாயை அழுதுட்டு வருவான். இது என்ன நியாயம்னே தெரியல்ல.

பஸ்ஸில போறவங்களுக்கு நல்லா தெரியும். டிரைவர் ஓட்டிக்கிட்டுப் போவார். ஆனா தேவையே இல்லாம டிரைவர் சீட்டுக்குப் பின்னால உட்கார்ந்திருக்கும் பயணி கை நீட்டி சிக்னல் கொடுப்பார். அதை நம்பி பின்னால வர்ற ஸ்கூட்டர்காரன் டர்ன் எடுப்பான். ஆனால் பஸ்ஸோ, கொடுக்கப்பட்ட சிக்னலுக்கு நேர்மாறா போய் நிற்கும். ஸ்கூட்டர்காரன் கதி? பஸ்ஸுக்கு உள்ளே, ஆபிஸ் போற அவசரத்தில் இருக்கிறவங்க ஏய் சாவு கிராக்கின்னு. பாவம் ஸ்கூட்டர்காரனுக்கு அர்ச்சனை செய்வாங்க. எங்க போய்ச் சொல்றது?

மைலாப்பூர் மாடவீதியைச் சுத்தப்படுத்தணும்னு திடீர்னு ஒரு நாள் காய்கறி கடைகளையெல்லாம் போலீஸ் பாதுகாப்போட கார்ப்பரேஷன்காரங்க வீராவேசத்தோடு 'கிளியர்' பண்ணாங்க. ரொம்ப நல்லதுன்னு நினைச்சா ரெண்டே நாள்ல அவ்வளவு கடையும் சித்திரைக்குளத்துக்குக் கிழே குடிபோயாச்சு- அவ்வளவுதான். அங்கேயிருந்து கபாலி கோயிலுக்கு வர்றதுக்குள்ளே 'போதுமடாசாமி'ன்னு ஆயிடும். போதாக்குறைக்குக் கபாலி கோயில் பக்கம் நடக்கவே முடியாத நெரிசல். இதில் டூரிஸ்ட் பஸ்கள் இப்போ அங்கதான் நிறுத்தப்பட்டிருக்கு. அதிலும் வெள்ளிக்கிழமைகள்ல சொல்லவே வேண்டாம். ஏதாவது ஒண்ணு செய்யறப்போ கொஞ்சம் முன்னே பின்னே யோசிக்க வேணாமா? இதையெல்லாம் நினைச்சா கோபம் பொங்குது. என்னைப் பொறுத்தவரைக்கும் என்னைப் பாதிக்குதோ இல்லையோ, என் கண்ல இது மாதிரி விஷயங்கள் பட்டா முடிஞ்சவரை போராடறேன். அவ்வளவுதான் செய்ய முடியுது. ஆனா கோபம் மட்டும் நிறைய ஸ்டாக் இருக்கு.

— ராணிமைந்தன்

● சென்னை மாவட்ட விநியோக அதிகாரியாக இருந்தபோது, அரசியல்வாதிகளிடம் இருந்து குறுக்கீடுகள் இருந்தன. அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்குத் தட்டுப்பாடில்லாமல் கிடைக்குமாறு பார்த்துக்கொள்வதும், பதுக்கல்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் விநியோக அதிகாரியின் வேலை. எனக்கு மேலதிகாரி கலெக்டர். அப்போது சென்னை கலெக்டராக இருந்தவர் சத்தியபாமா. அவர் ஓர் அதிரடி கலெக்டர். யாருக்கும் அஞ்சாதவர். கோடம்பாக்கத்தில் ஒரு ரேஷன் கடையில் இரண்டு மூட்டை சர்க்கரைக்கு பில் போடப்பட்டு விற்றது போல் கணக்கு காட்டப்பட்டு இருந்தது. ஆனால் மூட்டைகள் கடையிலேயே இருந்தன. 'அதிக விலைக்கு விற்க வேண்டும்' என்ற எண்ணத்தில் கடைக்காரர் செயல்பட்டிருந்தது புரிந்துவிட்டது. நான் அதைக் கண்டுபிடித்து லைசென்ஸை ரத்து செய்ய கலெக்டரிடம் சிபாரிசு செய்தேன். அந்தக் கடையை நடத்திக் கொண்டிருந்தவர் நாகர்கோயில்காரர். அவர் அந்த மாவட்ட அமைச்சரான லூர்தம்மாள் சைமன் மூலம் பிரஷர் கொடுத்தார். வருவாய் அமைச்சராக இருந்த ராமையா தரப்பிலிருந்தும் 'லைசென்ஸ் கேன்சல் செய்ய வேண்டாம்' என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் கலெக்டர் சத்தியபாமா, இந்த பிரஷர் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் லைசென்ஸை ரத்து செய்தார். அது மட்டுமல்லாமல் ஐநூறு ரூபாய் அபராதமும் விதித்தார்!

''அபராதம் எதற்கு'' என்று கேட்டபோது "பிரஷர் கொண்டு வர முயன்றீரல்லவா... அதற்குத் தான்'' என்று சிரித்தார் சத்தியபாமா!


• கே.ஏ. சுந்தரம்

ஐ.ஏ.எஸ் படித்துவிட்டு அரசுப் பணிக்கு வராவிட்டாலும் பணியின் இடையே ஐ.ஏ.எஸ் பட்டம் பெற்றவர் கே.ஏ. சுந்தரம் (conferred IAS). 'Memorable Moments' என்ற நூலைச் சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். அதிலிருந்து சில பகுதிகள்:

[illegible]

● தலைமைச் செயலகத்தில் பொதுத்துறை துணைச் செயலாளர் என்றால் மிகவும் பிஸியான ஒரு பொறுப்பு. சென்னைக்கு வரும் முக்கியப் பிரமுகர்களை வரவேற்க வேண்டிய வேலை அவருக்கு. நான் அந்தப் பொறுப்பில் இருந்தபோது பிரதமர் இந்திராகாந்தி முதல் பல முக்கிய வி.ஐ.பிக்களை வரவேற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஒருமுறை பஞ்சாப் முதல்வராக இருந்த ஜெயில்சிங்கை வரவேற்றேன். அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைக்க விரும்பினார் ஜெயில்சிங். அவரை அழைத்துக்கொண்டு அண்ணா சமாதிக்குச் சென்றேன். செல்லும் வழியில் அண்ணாவின் வாழ்க்கைச் சரிதத்தை முழுமையாக ஜெயில் சிங்குக்கு ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னேன். அவர் பதில் ஏதும் சொல்லாமல் தலையை ஆட்டி, ஆட்டி கேட்டுக் கொண்டு வந்தார். ஆனால் ''பின்னர் ஜெயில்சிங்குக்கு ஆங்கிலம் தெரியாது''



• கலைஞர்



• ஜெயில்சிங்



• ஸ்டாலின்

என்று கேள்விப்பட்ட போது நொந்து போனேன்!

● ஷேக் அப்துல்லாவை ஹோட்டலிலிருந்து முதல்வர்

நோ அட்மிஷன்!

வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது 'தி.மு.க.வின் கொள்கைகள்; திராவிட நாடு கொள்கையை கைவிட்டதன் பின்னணி ஆகியவற்றைத் தனது துருவலான கேள்விகள் மூலம் கேட்டுத் தெரிந்துகொண்டார். என்னிடம் பெற்ற பதிலில் திருப்தியடையாமல் முதல்வர் கருணாநிதியிடமும் விளக்கங்களைப் பெற்றார்!

● ஒருமுறை ரஷ்ய தூதர் கருணாநிதியைச் சந்தித்தார். "ரஷ்யா தமக்குப் பிடித்த நாடென்றும் அதன் தலைவர்களில் ஒருவரான ஸ்டாலின் தம்மை கவர்ந்தவர் என்றும், அதன் காரணமாகவே தம் மகன்களில் ஒருவருக்கு ஸ்டாலின் என்று பெயர் வைத்திருப்பதாகவும் அந்தத் தூதரிடம் சொன்னார் கருணாநிதி.

அந்த உரையாடலில் முதல்வர் சொன்ன மற்றொரு சம்பவம் எனக்குப் புதிதாக இருந்தது. ஸ்டாலின் என்ற பெயர் காரணமாக சென்னை லயோலா கல்லூரியில் அட்மிஷன் கொடுக்க முதலில் மறுத்து விட்டார்களாம். அதன் பின் மிகவும் போராடி அட்மிஷன் பெற்றாராம்!

— கௌசி

பருவமழை பொய்க்கிறது; கிருஷ்ணா ஏமாற்றுகிறது; சென்னை தவிக்கிறது; மெட்ரோ வாட்டர் என்னதான் செய்கிறது...? அதன் எம்.டி. சி.பி.சிங்கை முற்றுகையிட்டுக் கேட்டோம்...

கண்டலேறு அணையிலிருந்து பெறப்பட்ட கிருஷ்ணா தண்ணீர், இன்னும் சில நாட்களுக்கே போதாது என்ற நிலை வந்து விட்டது. மழைக்காலம் வரும் வரை இடைப்பட்ட இரண்டரை மாத காலத்திற்குச் சென்னையின் கதி?

ரெட்ஹில்ஸ் ஏரிக்குத் தண்ணீர் வந்த பிறகு அதை விநியோகிப்பது ஒன்றுதான் மெட்ரோ வாட்டரின் வேலை. பொதுப்பணித்துறைக்குத்தான் இது குறித்து தெரியும். இருந்தாலும் ஏரிகளில் இப்போதிருக்கும் நீர் அளவுகளைக் கொண்டு செப்டெம்பர் வரை வழங்க முடியும். இது தவிர நிலத்தடிநீரை ஐம்பத்தைந்து மில்லியன் லிட்டர் வரை இப்போது போர்வெல் மூலம் எடுக்கிறோம். இதை நூறு மில்லியன் லிட்டராக உயர்த்தினால் ஓரளவு சமாளித்து விடலாம் என்று நம்புகிறோம். இது தவிர செம்பரம்பாக்கம் ஏரி நீரை முதல் முறையாக குடிநீருக்காக இப்போதுதான் பயன்படுத்துகிறோம். அதற்குள் மழையும் வந்து விடலாம்.

மெட்ரோவாட்டரின் முக்கிய பணி குடிநீர் விநியோகம் மட்டும்தானா? திட்டமிடல் பற்றி உங்களுக்குக் கவலை இல்லையா?

திட்டமிடாமல் எப்படி குடிநீரை விநியோகம் செய்ய முடியும். நிரந்தரத் தீர்வுக்கான திட்டமிடலில், அரசுக்கும், பொதுப்பணித் துறைக்கும்தான் முக்கிய பங்கு இருக்கிறது. மற்றபடி மெட்ரோ வாட்டரின் முதல் பணி குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல்தான். அதே நேரம் விரிந்து வரும் மாநகர் வளர்ச்சி, பெருகிவரும் மக்கள் தொகை இரண்டையும் கருத்தில் கொண்டு குடிநீர் சேவையை விரிவாக்க திட்டமிட்டுத்தானே ஆகவேண்டும்.



• சி.பி. சிங்

மாநகர எல்லைக்குள் பல பகுதிகளில், இன்று தண்ணீர் விநியோகம் இல்லை. அப்படியிருக்க புறநகர்களுக்கும் சேவையை விரிவாக்குகிறோம் என்பது மக்களை ஏமாற்றுவதுதானே? மீண்டும் மீண்டும் சென்னையில் தண்ணீர் கஷ்டம் வருவது ஏன்?

மினரல் வாட்டர் விற்பதா மெட்ரோ வாட்டரின் வேலை..?

மக்களை ஏமாற்றுவதற்கு என்ன இருக்கிறது. சென்னையைப் பொருத்தவரை தண்ணீர் போதவில்லை என்பது உண்மை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. இருபது வருடங்களுக்கு முன்பு இருந்த சென்னையின் அளவு வேறு. இன்றைய சென்னையின் அளவு வேறு. எழுபதுகள்



வரையிலும் சென்னைக்குக் குடிநீர் வழங்குவதில் எந்த தலைவலியும் இல்லை. அதன் பிறகுதான் பிரச்னையே. தென்னக மாநிலங்களின் முக்கிய கேந்திரமாக சென்னை மாறியதால், இங்கே வந்து குவியத் தொடங்கிய மக்களை எப்படி நொந்து கொள்ள முடியும்?

இதைக் கருத்தில் கொண்டு நீண்ட கால அடிப்படையில் சென்னைக் குடிநீருக்கான நிரந்தரத் தீர்வு வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லையே?

நிரந்தரத் தீர்வுக்காகத்தான் 1978ல் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தனியொரு அமைப்பாகத் தொடங்கப்பட்டது. அப்போதே அடுத்த இருபது ஆண்டுகளுக்கான 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும், நிதிப்பற்றாக்குறையால் அதை முழுவதுமாக செயல்படுத்த முடியவில்லை. அடுத்து 1991-ல் மீண்டும் மாற்றியமைக்கப்பட்ட திட்டம் தயாரானது. இதில் வரும் 2021-ஆம் ஆண்டு வரையிலான சென்னையின் மக்கள் தொகைப் பெருக்கம், நகர்மயம் இரண்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூபாய் இரண்டாயிரம் கோடியில் அதைச் செயல்படுத்தும் களப்பணி நடந்து வருகிறது. இதில் ரூபாய் ஆயிரத்து இருநூறு கோடி குடிநீருக்கும், ரூபாய் எண்ணூறு கோடி கழிவுநீர் அகற்றவும் செலவாகும். திட்டத் தொகையில் இதுவரை ரூபாய் அறுநூறு கோடி செலவிடப்பட்டிருக்கிறது. ரூபாய் நானூறு கோடிக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதில் முக்கியமானது செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம். இந்தத் திட்டம் 2003ல் நிறைவடையும் பொழுது அடுத்த இருபது ஆண்டுகளுக்குக் குடிநீருக்கான முதலீடு எதுவும் நமக்குத் தேவைப்படாது.

இப்போதிருக்கும் குடிநீர் ஏரிகள் மழைக்காலத்தில் நிரம்பி வழிகின்றன. வீணாக கடலில் கலக்கும் தண்ணீரைச் சேமிக்க, ஏன் புதிய ஏரிகளை உருவாக்கக் கூடாது?

பொழியும் மழையின் அளவு சில நேரங்களில் மாறுபடுகிறது. அப்போதுதான் தண்ணீர் வீணாகிறது. எப்படியாயினும் புதிய ஏரிகளை உருவாக்குவது நல்லது. இதை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம்.

மெட்ரோ வாட்டரைக் கொண்டு மினரல் வாட்டர் தயார் செய்து விற்பது, இது ஒரு சேவை நிறுவனம் என்ற அடிப்படை நோக்கத்தையே களங்கப்படுத்துவதாக இல்லையா?

இது தவறாகப் பரப்பப்படும் கருத்து. இன்று சந்தையில் விற்கப்படும் மினரல் வாட்டரைச் சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதிலும் தரம் ஒரு கேள்விக்குறிதான். குறிப்பாக ஒரு லிட்டர் பாட்டில் ரூபாய் பதினைந்துக்கு விற்கிறார்கள். உறுதிசெய்யப்பட்ட தரத்துடன் ஒரு லிட்டர் பாட்டில் ரூபாய் எட்டுக்கு நாங்கள் விற்கிறோம். எங்கள் விலையைக் கண்டு மற்றவர்களும் லிட்டர் பத்து ரூபாய்க்கு குறைத்து விட்டார்கள். பாட்டில் விற்பனையைப் பொறுத்தவரை எங்களுக்கு லாபமில்லை. இதில் சேவைதான்

பிரதானம். ஒரு நாளைக்கு இருபத்தைந்து கோடி லிட்டர் தண்ணீரை சென்னைக்கு விநியோகம் செய்கிறோம். இதில் முப்பத்தைந்தாயிரம் லிட்டர் மினரல் வாட்டருக்குப் பயன்படுத்தப்படுகிறது.

மும்பை-டெல்லி மாநகர்களைப் போல ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மெட்ரோ வாட்டர் வருவதில்லையே ஏன்?

முக்கிய காரணம் 1870-ல் போடப்பட்ட பழைமையான ரேடியோ பைப் லைன் சிஸ்டம். ஒரு மையத்திலிருந்து அனுப்பப்படும் தண்ணீர் சென்னையின் எல்லா பாகங்களுக்கும் செல்வதால் இந்த கால தாமதம். கீழ்ப்பாக்கத்தில் திறந்து விடப்படும் தண்ணீர் அடையாறு சென்று அடையும்போது கால தாமதம் ஆகிவிடுகிறது. மற்றொன்று தண்ணீரின் அளவு. குறைந்தத் தண்ணீருக்கு எவ்வளவு அழுத்தம் கொடுத்தாலும் விரைவில் சென்று அடைவதில்லை. எனவே தான் சென்னையைப் பதினாறு மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனித்தனி விநியோக நிலையங்களை உருவாக்கி வருகிறோம். வரும் 2001-ல் மூன்று மாடி உயரத்திற்குத் தண்ணீர் வரும். அதன் பிறகு இந்தப் பிரச்னைக்கு வாய்ப்பே இல்லை.

அழுத்தம், மற்றும் தண்ணீர் குறைவு பிரச்னையால், பாதிக்கப்படும் பகுதிகளுக்கு லாரியில் விநியோகம் என்பது எந்த அளவுக்குச் சாத்தியம்?

ஒரு நாளைக்கு இரண்டரை கோடி லிட்டர் தண்ணீர் லாரி மூலம் விநியோகம் நடக்கிறது. குறிப்பாக வேளச்சேரி, கொளத்தூர், சாலிகிராமம், விருகம்பாக்கம், பெரியார் நகர், பட்டினம்பாக்கம், எம்.கே.பி. நகர், குடிசைப்பகுதிகள், ரயில்வே ஓரக் குடிசைப் பகுதிகள் என லாரி மூலம் மாற்று ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுதவிர ஐயாயிரம் அடி பம்புகள் போடப்பட்டுள்ளன. அப்படியும் புகார் வரும் பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கிறோம்.

அடிப்படைத் தேவையான குடிநீருக்காக குடத்தைத் தூக்கிக் கொண்டு அலைய வேண்டியிருக்கிறது. லாரி வருவதற்காகத் தவம் கிடக்க வேண்டியிருக்கிறது. வேலை நேரத்தில் இப்படி இரண்டு மணி நேரம் செலவழித்தால், எவ்வளவு நஷ்டம்! பலரது தனி நபர் வருமானத்தில் இழப்பு ஏற்படாதா? சென்னை குடிநீர் பிரச்னைக்கான நிரந்தர தீர்வு குறித்து யாரும் கவலைப்படுவதாக தெரியவில்லையே?

தனிப்பட்ட முறையில் சொல்வதென்றால் குடிநீருக்காகத் தவிப்பது கொடுமை தான். சென்னை குடிநீர் பிரச்னைக்கு கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் நிரந்தரத் தீர்வாக அமையும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண்போகாது. சென்னையில் இருக்கும் அறுபது லட்சம் மக்கள் தொகையில் ஒருவருக்கு ஒரு நாளைக்கு நூறு லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்வதாக வைத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு பன்னிரண்டு மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதை இப்போதிருக்கும் ஏரிகள் கொண்டு பூர்த்தி செய்ய முடியும். என்றாலும் ஆண்டுக்கு நான்கு டி.எம்.சி. கிருஷ்ணா தண்ணீர் கிடைத்தால் பருவ மழை பொய்த்தாலும் பிரச்னையே இருக்காது. இந்த ஆண்டு அங்கும் வறட்சி ஏற்பட்டதால்தான் இந்த நிலை. இதே நிலை நீடிக்காது என்று நம்புவோம்.

சந்திப்பு: **ஆர்.சி.ஜெயந்தன்**

படம்: **ஸ்ரீஹரி**



லியோ சர்ட்!

சமீபகாலமாக இங்கிலாந்தில் வாழ்த்து அட்டைகள், பெல்ட், சட்டை மற்றும் டீ-ஷர்ட், பொம்மைகள், குழந்தைகளுக்கான துணிமணிகள், இன்னபிற ஐட்டங்கள் என்று பல சமாசாரங்கள், லியோ என்ற பெயர் தாங்கி, விற்பனைக்கு வந்து, சக்கைப்போடு போடுகின்றன. 'லியோ' என்பது, அண்மையில் இங்கிலாந்தில் பிறந்த ஒரு குழந்தையின் பெயர். சாதாரண குழந்தையின் பெயரையா இப்படி வைத்திருக்கிறார்கள் என்று முழிக்காதீர்கள். லியோவின் அப்பா பிரிட்டிஷ் பிரதமர் டோனிப்ளேயர்!

– எம்.



பொன்னியின் செல்வன்

பதினொன்றாம் அத்தியாயம்

மண்டபம் விழுந்தது!

மின்னல் வெளிச்சத்தில், அங்கே நின்று பேசியவர்கள் இருவருடைய தோற்றங்களையும் பழுவேட்டரையர் ஒருகணம் பார்த்துத் தெரிந்து கொண்டார். அவர்களில் ஒருவனாகிய ரவிதாஸனை இரண்டொரு தடவை அவர் தமது அரண்மனையிலேயே பார்த்ததுண்டு. அவன் மந்திர வித்தைகளில் தேர்ந்தவன் என்று நந்தினி கூறியதுண்டு. அவருடைய சகோதரன் காலாந்தக கண்டன் இந்த மந்திரவாதியைப் பற்றியே தான் சந்தேகப்பட்டு அவரை எச்சரித்திருக்கிறான். இன்னொருவன், கடம்பூர் அரண்மனையில் வேலனாட்டம் ஆடிய தேவராளன். அவனைத் தாம் பார்த்தது அதுதானா முதல் தடவை? அவனுடைய உண்மைப் பெயர் என்ன...? அப்படியும் ஒருவேளை இருக்க முடியுமா...? நெடுங்காலத்துக்கு முன்பு அவரால் அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்ட பரமேச்சுவரனா அவன்...?

இருக்கட்டும்; இவர்கள் மேலும் என்ன பேசுகிறார்கள் கேட்கலாம்.

"ரவிதாஸா! நீ இப்படித்தான் வெகு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாய். 'நாள் நெருங்கி விட்டது' 'யமன்

அமரர் கல்கி

நெருங்கி விட்டான்' என்றெல்லாம் பிதற்றுகிறாய்! யமன் வந்து யார் யாரையோ கொண்டு போகிறான்! ஆனால் மூன்று வருஷங்களாகப் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் சுந்தர சோழனைக் கொண்டு போவதாக இல்லை. அவனுடைய குமாரர்களையோ யமன் நெருங்குவதற்கே அஞ்சுகிறான். ஈழ நாட்டில் நாம் இரண்டு பேரும் எத்தனையோ முயன்று பார்த்தோமே...?"

"அதனால் குற்றமில்லை, அப்பனே! யமதர்மராஜன் உன்னையும் என்னையும் விடப் புத்திசாலி! மூன்று பேரையும் ஒரே தினத்தில் கொண்டு போவதற்காக இத்தனை காலமும் காத்துக்கொண்டிருந்தான். அந்தத் தினம் நாளைக்கு வரப் போகிறது. நல்லவேளையாக, நீயும் இங்கே வந்து சேர்ந்தாய்! சரியான யமதூதன் நீ! ஏன் இப்படி நடுங்குகிறாய்? கொள்ளிட வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டாயா? படகு கொண்டு வந்து வைத்திருக்கிறாய் அல்லவா?"

"வைத்திருக்கிறேன். ஆனால் படகை வெள்ளமும் காற்றும் அடித்துக்கொண்டு போகாமல் காப்பாற்றுவது பெரும்பாடாய்ப் போய்விட்டது! உன்னை எத்தனை 'நேரம் எங்கெல்லாம் தேடுவது...? ரவிதாஸா! ஏன் என் உடம்பு நடுங்குகிறது என்று கேட்டாய் அல்லவா? சற்று முன்னால், யமதர்ம ராஜனை நான் நேருக்கு நேர் பார்த்தேன். இல்லை, இல்லை; யமனுக்கு அண்ணனைப் பார்த்தேன். அதனால் சற்று உண்மையிலேயே பயந்து போய்விட்டேன்..."

"பரமேச்சுரா! என்ன உளறுகிறாய்? யமனாவது, அவன் அண்ணனாவது? அவர்களைக் கண்டு உனக்கு என்ன பயம்? அவர்கள் அல்லவோ உன்னைக் கண்டு அஞ்ச வேண்டும்?"

ரவிதாஸன் மற்றவனைப் 'பரமேச்சுவரன்' என்று அழைத்ததும் பழுவேட்டரையர் துணுக்குற்றார். தாம் சந்தேகப்பட்டது உண்மையாயிற்று! யமதர்மனுடைய அண்ணன் என்று அவன் குறிப்பிட்டது தம்மைத்தான் என்பதையும் அறிந்து கொண்டார். அவனை உடனே நெருங்கிச் சென்று கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொல்ல வேணுமென்று அவர் உள்ளமும், கைகளும் துடித்தன. மேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க வேணும் என்ற ஆவலினால் பொறுமையாக இருந்தார். நந்தினியைப் பற்றி அவர்கள் இன்னும் பேச்சு எடுக்கவில்லை. சுந்தரசோழரின் குடும்பத்துக்கே நாளை யமன் வரப் போகிறான் என்று மந்திரவாதி கூறியதன் கருத்து என்ன? உண்மையிலேயே ஜோதிடம் பார்த்துச் சொல்லுகிறானோ? இவனுடைய மந்திர சக்தியைப் பற்றி நந்தினி கூறியதெல்லாம் உண்மைதானோ? ஒருவேளை இவன் கூறுகிறபடி தெய்வாதீனமாக நடந்து விட்டால்...? தம்முடைய நோக்கம் நிறைவேறுவது எளிதாகப் போய்விடும்! சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கிடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது! ஆனால் இந்தப் பரமேச்சுவரன்...? இவனுக்கு என்ன இந்த விஷயத்தில் கவலை? ஆம்; ஆம்; இருபது வருஷங்களுக்கு முன்னால் சோழ குலத்தையே அழித்து விடப் போகிறேன்' என்று சபதம் செய்து விட்டுப் போனவன் அல்லவா இவன்...? ஆகா! தம்மைப் பற்றித்தான் அவன் ஏதோ பேசுகிறான்! என்ன சொல்லுகிறான் என்று கேட்கலாம்!

"நீ என்னிடம் சொல்லியிருந்தபடி இன்று காலையே இங்கு நான் வந்தேன். ஆனால் உன்னைக் காணவில்லை. காற்றிலும் மழையிலும் அடிபட்டு எங்கேயாவது சமீபத்தில் ஒதுங்கி இருக்கிறாயா என்று சுற்றுப்புறமெல்லாம் தேடி அலைந்தேன். கொள்ளிடத்து உடைப்புக்கு அருகில் ஒரு சிறிய கோவில் இருக்கிறது. அதில் யாரோ படுத்திருப்பது போலத் தோன்றியது. ஒருவேளை நீதான் அசந்து தூங்குகிறாயோ என்று அருகில் போய்ப் பார்த்தேன்... யாரைப் பார்த்தேன் என்று நினைக்கிறாய்? சாக்ஷாத் பெரிய பழுவேட்டரையனைத்தான்...!

மந்திரவாதி ஹாஹாஹா என்று உரத்துச் சிரித்தான். அதைக் கேட்ட வனத்தில் வாழும் பற

வைகள் 'கிறீச்' 'கிறீச்' என்று சத்த மிட்டன. ஊமைக் கோட்டான்கள் உறுமின.

"பழுவேட்டரையனைப் பார்த்தாயா? அல்லது அவனுடைய பிசாசைப் பார்த் தாயா?" என்று ரவிதாஸன் கேட்டான்.

"இல்லை; பிசாசு இல்லை. குப்புறப் படுத்திருந்தவனைத் தொட்டுப் புரட்டிப் போட்டு முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தேன். ரவிதாஸா! யமனுக்கு அண் ணன்கள் இரண்டு பேர் இருக்க முடி யுமா? பழுவேட்டரையனைப் போலவே, அதே முகம், அதே மீசை, அதே காய வடுக்கள் - இவற்றுடன் இன்னொரு மனிதன் இருக்க முடியுமா?"

"நீ பார்த்தவன் பழுவேட்டரை



யன்தான்! சந்தேகமில்லை. நேற்று மாலை பழுவேட்டரையன் படகில் ஏறிக் கொள்ளிடத்தைத் தாண்டிக்கொண்டிருந்தான். கரையருகில் வந்தபோது படகு காற்றினால் கவிழ்ந்துவிட்டது. அவனுடைய பரிவாரங்களில் தப்பிப் பிழைத்துக் கரையேறினவர்கள் இப்போது கூடக் கொள்ளிடக் கரையோரமாகப் பழுவேட்டரையனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவன் வெள்ளத்தில் மூழ்கிச் செத்துப் போயிருக்கலாம் என்று சந்தேகப்படுகிறார்கள். உடைப்பு வரையில் போய்ப் பார்த்துவிட்டு அவர்கள் திரும்பி வரும்போது பேசியதை நான் கேட்டேன். ஆகையால், நீ பார்த்தவன் பழுவேட்டரையனாகவே இருக்கக்கூடும். ஒருவேளை அவனுடைய பிரேதத்தைப் பார்த்தாயோ, என்னமோ!''

''இல்லை, இல்லை. செத்துப் போயிருந்தால் கண் விழிகள் தெரியுமா? நான் புரட்டிப் பார்த்தவனுடைய கண்கள் நன்றாக மூடியிருந்தன. களைத்துப் போய்த் தூங்கிக்கொண்டிருந்தான் போலிருக்கிறது...''

''முட்டாளே! நீ என்ன செய்தாய்! அவனைச் சும்மா விட்டு விட்டு வந்தாயா? தலையிலே ஒரு கல்லைத் தூக்கிப் போட்டிருக்கக் கூடாதா...?''

''பழுவேட்டரையன் தலையைப் பற்றி உனக்குத் தெரியாது. அவன் தலையிலே கல்லைப் போட்டால், கல்தான் உடைந்து தூள் தூளாகும்!''

''அப்படியானால், கொள்ளிடத்து உடைப்பு வெள்ளத்திலாவது அவனை இழுத்து விட்டிருக்கலாமே?''

''நான்தான் சொன்னேனே? அவனைக் கண்டதும் எனக்கு யமனுடைய அண்ணனைக் கண்டதுபோல் ஆகிவிட்டது. கடம்பூரில் அவன் முன்னால் வேலனாட்டம் ஆடியபோது கூட என் நெஞ்சு திக், திக் என்று அடித்துக் கொண்டுதானிருந்தது. என்னை அவன் அடையாளங் கண்டு கொண்டானானால்...''

''அதை நினைத்து இப்போது எதற்கு நடுங்குகிறாய்?''

''அவன் உயிரோடிருக்கும் வரையில் எனக்குக் கொஞ்சம் திகிலாய்த்தானிருக்கும். நீ சொன்னபடி செய்யாமற் போனோமே. அவனை வெள்ளத்தில் புரட்டித் தள்ளாமல் வந்து விட்டோமே என்று கவலையாயிருக்கிறது...''

''ஒரு கவலையும் வேண்டாம். ஒரு விதத்தில் பெரிய பழுவேட்டரையன் உயிரோடிருப்பதே நல்லது. அப்போதுதான், சுந்தர சோழனும் அவனுடைய பிள்ளைகளும் இறந்து ஒழிந்த பிறகு சோழ நாட்டுச் சிற்றரசர்கள் இரு பிரிவாய்ப் பிரிந்து நின்று சண்டையிடுவார்கள். பழுவேட்டரையர்களும் சம்புவரையர்களும் ஒரு பக்கத்திலும் கொடும்பாளூர் வேளானும் திருக்கோவலூர் மலையமானும் இன்னொரு பக்கத்திலும் இருந்து சண்டையிடுவார்கள். அது நம்முடைய நோக்கத்துக்கு மிக்க அநுகூலமாயிருக்கும். அவர்கள் தங்களுக்குள் சண்டையிடும்போது நாம் பாண்டிய நாட்டில் இரகசியமாகப் படை திரட்டிச் சேர்க்கலாம்...''

''ரவிதாஸா! 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா' என்ற கதையாகப் பேசுகிறாய்! சுந்தர சோழனுக்கும் அவனுடைய இரு புதல்வர்களுக்கும் நாளைக்கு இறுதி நேர்ந்தால் அல்லவா நீ சொன்னபடி சோழ நாட்டுத் தலைவர்கள் சண்டை போட்டுக் கொள்வார்கள்? மூன்று பேருக்கும் நாளைக்கே முடிவு வரும் என்பது என்ன நிச்சயம்? உனக்கு ஒரு செய்தி தெரியுமா...?''

''எதைச் சொல்லுகிறாய்?''

''நாகைப்பட்டினத்தில் அருள்மொழிவர்மன் உயிரோடிருக்கிறானாம்! மக்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு அவனே சோழ நாட்டின் சக்கரவர்த்தி ஆக வேண்டும் என்று ஆர்ப்பரிக்கிறார்களாம்! நீ கேள்விப்பட்டாயா?''

ரவிதாஸன் மறுபடியும் சிரித்துவிட்டு ''நான் கேள்விப்படவில்லை. எனக்கே அது தெரியும். அருள்மொழிவர்மனைப் புத்த விஹாரத்திலிருந்து வெளிப்படுத்தியது யார் என்று நினைக்கிறாய்? நம் ரேவதாஸக் கிரமவித்தனுடைய மகள் ராக்கம்மாள்தான்!



அவள்தான் படகோட்டி முருகய்யனுடைய மனைவி!'' என்றான்.

''அதனால் என்ன? அருள்மொழிவர்மன் வெளிப்பட்டதனால் என்ன லாபம்? அவனை இனி எப்போதும் லட்சக்கணக்கான ஜனங்கள் அல்லவா சூழ்ந்துகொண்டிருப்பார்கள்? ஈழ நாட்டில் அவன் இரண்டு மூன்று பேருடன் இருந்தபோதே நம்முடைய முயற்சி பலிக்கவில்லையே?'' என்றான் தேவராளன்.

''அதுவும் நல்லதுதான் என்று சொன்னேனே? மூன்று பேருக்கும் ஒரே நாளில் யமன் வருவதற்கு இருக்கும் போது...''

''ரவிதாஸா! லட்சம் பேருக்கு மத்தியில் உள்ள இளவரசனிடம் யமன் எப்படி நெருங்குவான்? அதை நீ சொல்லவில்லையே?''

''நெருங்குவான், அப்பனே, நெருங்குவான்! யானைப் பாகனுடைய அங்குசத்தின் நுனியில் யமன் உட்கார்ந்திருப்பான்! சரியான சமயத்தில் இளவரசனுடைய உயிரை வாங்குவான்! பரமேச்சுவரா! சோழ நாட்டு மக்கள் இளவரசனை யானை மீது ஏற்றி வைத்து ஊர்வலம் விட்டுக்கொண்டு தஞ்சையை நோக்கி வருவார்கள். அந்த யானையை ஓட்டும் பாகனுக்கு வழியில் ஏதாவது ஆபத்து வந்துவிடும். அவனுடைய இடத்தில் நம் ரேவதாஸக் கிரமவித்தன் யானைப் பாகனாக அமருவான்! அப்புறம் என்ன நடக்கும் என்பதை நீயே ஒருவாறு ஊகித்துக்கொள்!''

''ரவிதாஸா! உன் புத்திக் கூர்மைக்கு இணை இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். கிரமவித்தன் எடுத்த காரியத்தை முடிப்பான் என்று நாம் நம்பியிருக்கலாம். சுந்தர சோழன் விஷயம் என்ன? அவனுக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?'' என்றான் தேவராளன்.

''பழுவேட்டரையனுடைய கருவூல நிலவறையில் சோமன் சாம்பவனை விட்டு விட்டு வந்திருக்கிறேன். கையில் வேலாயுதத்துடன் விட்டு வந்திருக்கிறேன். அங்கேயிருந்து சுந்தரசோழன் அரண்மனைக்குச் சுரங்கப்பாதை போகிறது. சுந்தர சோழன் படுத்திருக்கும் இடத்தையே சோமன் சாம்பவனுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இரண்டு கண்ணும் தெரியாத குருடன்கூட நான் குறிப்பிட்ட இடத்தில் நின்று வேலை எறிந்து சுந்தரசோழனைக் கொன்று விடலாம். சோமன் சாம்பவனை 'அவசரப்படாதே! நாளை வரையில் பொறுத்துக் கொண்டிரு!' என்று எச்சரித்து விட்டு வந்திருக்கிறேன்...''

''அது எதற்காக? சமயம் நேரும்போது காரியத்தை முடிப்பதல்லவா நல்லது?''

''முட்டாளே! சுந்தர சோழன் முன்னதாகக் கொலையுண்டால், அந்தச் செய்தி கேட்டதும் அவன் குமாரர்கள் ஜாக்கிரதையாகிவிட மாட்டார்களா? அந்த நோயாளிக் கிழவன் இறந்துதான் என்ன உபயோகம்? அது இருக்கட்டும்; நீ என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறாய்? கடம்பூர் மாளிகையில் எல்லாரும் எப்படியிருக்கிறார்கள்? அங்கே நாளை இரவு நடக்கப் போகிற காரியம் அல்லவா எல்லாவற்றையும் விட முக்கியமானது?''

''கடம்பூரில் எல்லாம் கோலாகலமாகத்தான் இருந்து வருகிறது. கலியாணப் பேச்சும் காதல் நாடகங்களுமாயிருக்கின்றன. நீ என்னமோ அந்தப் பழுவூர் ராணியை நம்பியிருப்பது எனக்குப் பிடிக்கவே இல்லை...''

''பழுவூர் ராணியா அவள்? பாண்டிமா தேவி என்று சொல்! வீர பாண்டியர் இறப்பதற்கு இரண்டு நாளைக்கு முன்னால் அவளைத் தம் பட்டமகிஷியாக்கிக் கொண்டதை மறந்து விட்டாயா? வீர பாண்டியர் மரணத்துக்குப் பழிக்குப் பழி வாங்க அவள் சபதம் செய்திருப்பதை மறந்து விட்டாயா? ஒரு வாரத்துக்கு முன்னால் இதே இடத்தில் அவள் பாண்டிய குமாரன் கையிலிருந்து பாண்டிய குலத்து வீரவாளைப் பெற்றுக் கொள்ளவில்லையா...?

''ஆமாம், ஆமாம்! ஆனால் நேற்று மாலை உன் பாண்டிமாதேவி வீர நாராயண ஏரியில் உல்லாஸப் படகு யாத்திரை செய்து விட்டுத் திரும்பி வந்ததை நீ பார்த்திருக்க வேண்டும்...''

"உல்லாஸமாயிராமல் பின் எப்படியிருக்க வேண்டும் என்கிறாய்? மனத்தில் உள்ளதை மறைத்து வைக்கும் வித்தையை நந்தினியைப் போல் கற்றிருப்பவர் யாரும் கிடையாது. இல்லாவிட்டால், பழுவேட்டரையனின் அரண்மனையில் மூன்று வருஷம் காலந் தள்ள முடியுமா? அங்கே இருந்தபடி நம்முடைய காரியங்களுக்கு இவ்வளவு உதவிதான் செய்திருக்க முடியுமா? ஆமாம், பழுவேட்டரையனை நீ சற்றுமுன் கொள்ளிடக் கரைத் துர்க்கையம்மன் கோவிலில் பார்த்தாகக் கூறினாயே! அவனை ஏற்றி வந்த படகு கவிழ்ந்ததைப் பற்றி நானும் கேள்விப்பட்டேன். பழுவேட்டரையன் எப்போது கடம்பூரிலிருந்து புறப்பட்டான்? ஏன்...?

"ஏன் என்று எனக்கு உறுதியாகத் தெரியாது. மதுராந்தகத் தேவனைக் கடம்பூருக்கு அழைத்து வரப் புறப்பட்டதாகச் சொன்னார்கள். நேற்றுக் காலை பழுவேட்டரையன் கிளம்பிச் சென்றான். அவன் சென்ற பிறகு இளவரசர்கள் வேட்டையாடச் சென்றார்கள். இளவரசிமார்கள் வீர நாராயண ஏரிக்கு ஜலக்கிரீடை செய்யச் சென்றார்கள். இளவரசர்களும் இளவரசிகளும் திரும்பி வந்த குதூகலமான காட்சியை நீ பார்த்திருந்தாயானால் இவ்வளவு நம்பிக்கையோடு பேச மாட்டாய்...!

"அதைப் பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். பழுவேட்டரையனைத் தஞ்சைக்கு அனுப்பி வைத்ததிலிருந்தே பாண்டிமா தேவியின் மனத்தை அறிந்து கொள்ளலாமே...?"

"பெண்களின் மனத்தை யாரால் அறிய முடியும்? அந்தக் கிழவனை ஊருக்கு அனுப்பியது பழி வாங்கும் நோக்கத்துக்காகவும் இருக்கலாம். காதல் நாடகம் நடத்துவதற்காகவும் இருக்கலாம்..."

"என்ன உளறுகிறாய், பரமேச்சுரா! நந்தினி அந்தப் பழைய கதையை அடியோடு மறந்துவிட்டாள். கரிகாலனை அவள் இப்போது விஷம் போலத் துவேஷிக்கிறாள்?"

"கரிகாலனைப் பற்றி நான் சொல்லவில்லை. அவனுடைய தூதன் வந்தியத்தேவனைப் பற்றிச் சொல்லுகிறேன். இரண்டு மூன்று தடவை நந்தினி அவனைத் தப்பிச் செல்லும்படி விட்டதை நீ மறந்து விட்டாயா?"

மந்திரவாதி கலகலவென்று சிரித்து விட்டு, "ஆமாம்; வந்தியத்தேவன் எதற்காகப் பிழைத்திருக்கிறான் என்பது சிக்கிரத்திலேயே தெரியும். அது தெரியும்போது நீ மட்டுந்தான் ஆச்சரியப்படுவாய் என்று எண்ணாதே! இன்னும் ரொம்பப் பேர் ஆச்சரியப்படுவார்கள்! முக்கியமாக, சுந்தர சோழரின் செல்வக் குமாரி குந்தவை ஆச்சரியப்படுவாள். அவள் எந்தச் சுகுமார வாலிபனுக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்கிறாளோ, அவனே அவளுடைய தமையன் ஆதித்த கரிகாலனைக் கொன்றவன் என்று அறிந்தால் ஆச்சரியப்பட மாட்டாளா?" என்றான்.

"என்ன சொல்கிறாய், ரவிதாஸா! உண்மையாகவே வந்தியத்தேவனா கரிகாலனைக் கொல்லப்போகிறான்? அவன் நம்மோடு சேர்ந்து விட்டானா, என்ன?"

"அதெல்லாம் இப்போது கேட்காதே! கரிகாலனைக் கொல்லும் கை யாருடைய கையாக இருந்தால் என்ன? பாண்டிய குலத்து மீன் சின்னம் பொறித்த வீர வாள் அவனைக் கொல்லப் போகிறது. அவனைக் கொன்ற பழி வந்தியத்தேவன் தலை மீது விழப்போகிறது! நம்முடைய ராணியின் சாமர்த்தியத்தைப் பற்றி இப்போது என்ன சொல்லுகிறாய்?"

"நீ சொன்னபடி எல்லாம் நடக்கட்டும். பிற்பாடு கேள். சொல்லுகிறேன்."

"வேறு எது நடந்தாலும் நடக்காவிட்டாலும், கரிகாலனுடைய ஆவி நாளை இரவுக்குள் பிரிவது நிச்சயம். நந்தினி அவள் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றியே திருவாள். நம்முடைய பொறுப்பையும் நாம் நிறைவேற்ற வேண்டும்..."

"நம்முடைய பொறுப்பு என்ன?"

"நாளை இரவு கடம்பூர் மாளிகையிலிருந்து வெளியேறும் சுரங்கப்

பாதையில் ஆயத்தமாகக் காத்திருக்க வேண்டும். காரியம் முடிந்ததும் நந்தினி அதன் வழியாக வருவாள். அவளை அழைத்துக்கொண்டு இரவுக்கிரவே கொல்லி மலையை அடைந்து விட வேண்டும். அங்கே இருந்துகொண்டு, சோழ நாட்டில் நடைபெறும் அல்லோலகல்லோகலத்தைப் பார்த்துக்கொண்டிருப்போம். ஒருவேளை சௌகரியப் பட்டால்...''

"சௌகரியப்பட்டால், என்ன?"

''பழுவேட்டரையனின் கருவூல நிலவறையில் சேர்த்து வைத்திருக்கும் பொருள்களையெல்லாம் சுரங்கப்பாதை வழியாகக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். சோழ நாட்டுப் பொக்கிஷத்திலிருந்து கொண்டு போன பொருள்களைக் கொண்டே சோழ நாட்டின் மீது போர் தொடுக்கப் படை திரட்டுவது எவ்வளவு பொருத்தமாயிருக்கும்?''

இவ்விதம் கூறிவிட்டு மறுபடியும் ரவிதாஸன் சிரித்தான்.

தேவராளனாக நடித்த பரமேசுவரன், "சரி, சரி! ஆகாசக் கோட்டையை ரொம்பப் பெரிதாகக் கட்டி விடாதே! முதலில் கொள்ளிடத்தைத் தாண்டி அக்கரையை அடைந்து கடம்பூர் போய்ச் சேரலாம். கடம்பூரில் நீ சொன்னபடி எல்லாம் நடக்கட்டும்! பிறகு, பழுவேட்டரையனுடைய பொக்கிஷத்தைக் கொள்ளையடிப்பது பற்றி யோசிக்கலாம். என்ன சொல்லுகிறாய்? இப்போதே கிளம்பலாமா? இரவே கொள்ளிடத்தைத் தாண்டி விடுவோமா?'' என்றான்.

"வேண்டாம், வேண்டாம்! பொழுது விடிந்ததும் படகில் ஏறினால் போதும். அதற்குள் காற்றும் நன்றாக அடங்கி விடும். ஆற்று வெள்ளமும் கொஞ்சம் குறைந்து விடும்."

"அப்படியானால், இன்றிரவு இந்தப் பள்ளிப்படை மண்டபத்திலேயே படுத்திருக்கலாமா?"

ரவிதாஸன் சற்று யோசித்தான். அப்போது சற்றுத் தூரத்தில் நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டது. ரவிதாஸனுடைய உடல் நடுங்கிற்று.

''ரவிதாஸா! கேவலம் நரிகளின் குரலைக் கேட்டு ஏன் இப்படி நடுங்குகிறாய்?'' என்றான் தேவராளன்.

''அப்பனே! கோடிக்கரைப் புதை சேற்றில் கழுத்து வரையில் நீ புதை பட்டிருந்து, சுற்றிலும் நூறு நரிகள் நின்று உன்னை தின்பதற்காகக் காத்திருக்கும்





பயங்கரத்தை நீ அனுபவித்திருந்தால், அப்படிச் சொல்ல மாட்டாய்! சிங்கத்தின் கர்ஜனையையும் மத யானையின் ஓலத்தையும் கேட்டு, எனக்குப் பயம் உண்டாவதில்லை. நரியின் ஊளையைக் கேட்டால் குலை நடுங்குகிறது. வா! வா! இந்தச் சுடுகாட்டில் இராத் தங்க வேண்டாம். வேறு எங்கேயாவது கிராமத்துக்குப் பக்கமாயுள்ள கோவில் அல்லது சத்திரத்தில் தங்குவோம். இல்லாவிட்டால், கொள்ளிடக் கரையிலுள்ள துர்க்கை கோவிலைப் பற்றிச் சொன்னாயே? அங்கே போவோம். இன்னமும் அந்தக் கிழவன் அங்கே படுத்திருந்தால், வெள்ளத்தில் அவனை இழுத்து விட்டு விடலாம். அதுவே அவனுக்கு நாம் செய்யும் பேருதவியாயிருக்கும். நாளைக்கு மறுநாள் வரையில் அவன் உயிரோடிருந்தால், ரொம்பவும் மனத் துயரத்துக்கு ஆளாக நேரிடும்!"

மேற்கூறிய சம்பாஷணையை ஏறக்குறைய ஒன்றும் விடாமல் பெரிய பழுவேட்டரையர் கேட்டுக்கொண்டிருந்தார். அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவருடைய செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருந்தது. அவருடைய நெஞ்சு ஒரு பெரிய எரிமலையின் கர்ப்பத்தைப் போல் தீக் குழம்பாகிக் கொதித்தது. தாம் காதலித்துக் கலியாணம் செய்து கொண்ட பெண், வீரபாண்டியன் மரணத்துக்காகச் சோழ குலத்தின் மீது பழி வாங்க வந்தவள் என்பதும், மூன்று வருஷங்களாக அவள் தம்மை ஏமாற்றி வருகிறாள் என்பதும் சொல்ல முடியாத வேதனையையும் அவமானத்தையும் அவருக்கு உண்டாக்கின.

ஆறு தலைமுறையாகச் சோழர் குலத்துக்கும் பழுவூர் வம்சத்துக்கும் நிலை பெற்று வளர்ந்து வரும் உறவுகளை அச் சமயம் பழுவேட்டரையர் நினைத்துக்கொண்டார். பார்க்கப் போனால், சுந்தர சோழனும் அவனுடைய மக்களும் யார்? சுந்தர சோழனுடைய, பாட்டி பழுவூர் வம்சத்தைச் சேர்ந்தவள் அல்லவா? சுந்தர சோழனுடைய மக்கள் மீது தமக்கு ஏற்பட்ட கோபமெல்லாம் சமீப காலத்தது அல்லவா? ஆதித்த கரிகாலன் ஏதோ சிறு பிள்ளைத்தனமாக நடந்துகொண்டான் என்பதற்காகவும் மலையமானை நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காகவும், எவ்வளவு பயங்கரமான சதிச் செயல்களுக்கு இடங் கொடுத்து விட்டோம்? சோழர் குலத்தின் தீராப் பகைவர்களான பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் நம்முடைய அரண்மனையிலிருந்து கொண்டு, நம்முடைய நிலவறைப் பொக்கிஷத்திலிருந்து திருடிப் போன பொருளைக் கொண்டு, சோழ குலத்துக்கு விரோதமாகச் சதிகாரச் செயல்களைச் செய்ய அல்லவா இடம் கொடுத்து விட்டோம்? ஆகா! இந்தச் சண்டாளர்கள் சொன்னபடி நாளை இரவுக்குள் மூன்று இடங்களில் மூன்று பயங்கரமான கொலைகள் நடக்கப் போகின்றனவா? நம்முடைய உடலில் மூச்சு இருக்கும் வரையில் முயன்று அவற்றைத் தடுத்தேயாக வேண்டும். இன்னும் அறுபது நாழிகை நேரம் இருக்கிறது. அதற்குள் எவ்வளவோ காரியங்கள் செய்து விடலாம். இரவுக்கிரவே குடந்தை சென்று தஞ்சைக்கும் நாகைப்பட்டினத்துக்கும் செய்தி அனுப்பிவிட்டுக் கடம்பூருக்குக் கிளம்ப வேண்டும். இந்தப் பாதகர்கள் அங்கே போய்ச் சேர்வதற்குள் நாம் போய்விட வேண்டும்...

இவர்களைக் கடம்பூருக்கு வரும்படி விடுவதா? இந்த இடத்திலே இவர்களைக் கொன்று போட்டு விட்டுப் போய் விடுவது நல்லதல்லவா? நம்மிடம் ஆயுதம் ஒன்றுமில்லை. இல்லாவிட்டால் என்ன? வஜ்ராயுதத்தை நிகர்த்த நம் கைகள் இருக்கும்போது வேறு ஆயுதம் எதற்கு? ஆனால் இவர்கள் ஒருவேளை சிறிய கத்திகள் இடையில் செருகி வைத்திருக்கக் கூடும். அவற்றை எடுப்பதற்கே இடங் கொடுக்காமல் இரண்டு பேருடைய கழுத்தையும் இறுக்கிப் பிடித்து

நெறித்துக் கொன்றுவிட வேண்டும்...

ஆனால் அவ்வாறு இவர்களுடன் இந்த இடத்தில் சண்டை பிடிப்பது உசிதமா?

இவர்களிடம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொண்டாகி விட்டது. நாம் வழிபடும் குல தெய்வமாகிய துர்க்கா பரமேசுவரியே படகு கவிழச் செய்து, நம்மை அவளுடைய திருக்கோவிலில் படுத் திருக்கச் செய்து, இந்தப் பயங்கர ரக சியங்களைத் தெரிந்து கொள்ளும் படியும் செய்திருக்கிறாள். சக்கர வர்த்திக்கும் அவருடைய குமாரர் களுக்கும் விபத்து நேரிடாமல் பாது காப்பதல்லவா நம்முடைய முக்கியமான கடமை? அதிலும் கடம்பூரில் கரி காலனுக்கு எதுவும் நேராமல் தடுப்பது மிக மிக முக்கியமானது. அப்படி ஏதா வது நேர்ந்துவிட்டால், நமக்கும் நமது குலத்துக்கும் அழியாத பழிச்சொல் ஏற்பட்டு விடும். ஆறு தலைமுறையாகச் சோழ குலத்துக்குப் பழுவூர் வம்சத் தினர் செய்திருக்கும் உதவிகள் எல்லாம் மறைந்து மண்ணாகி விடும். பெண் என்று 'எண்ணி நமது அரண்மனையில் கொண்டு வந்து வைத்திருந்த அரக்கி யினால் கரிகாலன் கொல்லப் பட்டால், அதைக் காட்டிலும் நமக்கு நேரக்கூடிய அவக்கேடு வேறு ஒன்றுமேயில்லை.

ஆகா! அத்தகைய அழகிய வடிவத் துக்குள்ளே அவ்வளவு பயங்கரமான ஆலகால விஷம் நிறைந்திருக்க முடி யுமா? மூன்று உலகத்தையும் மயக்கக் கூடிய மோகனப் புன்னகைக்குப் பின்னால் இவ்வளவு வஞ்சகம் மறைந் திருக்க முடியுமா? இந்தச் சண்டாளர் கள் சற்று முன்னால் சொன்னதெல் லாம் உண்மையாக இருக்க முடியுமா...?

பழுவேட்டரையருடைய உள்ளத் தில் கோபத் தீ கொழுந்துவிட்டு எரியும்படி செய்த அந்தச் சதி காரர்களின் வார்த்தைகள் ஒருவிதத்தில் அவருக்குச் சிறிது திருப்தியையும் அளித்திருந்தன. நந்தினி சதிகாரியாக இருக்கலாம்; தம்மிடம் அன்பு கொண்ட தாக நடித்து வஞ்சித்து ஏமாற்றி வந் திருக்கலாம். ஆனால் அவள் கரிகாலன் மீதோ கந்தமாறன் அல்லது வந்தியத் தேவன் மீதோ மோகம் கொண்ட காரணத்தினால் தம்மை வஞ்சிக்க வில்லை! அந்த மௌடீகச் சிறுவர்களை அவள் பொருட்படுத்தவில்லை. அவளு டைய அந்தரங்க நோக்கத்துக்கு அவர் களையும் உபயோகப்படுத்துவதற் காகவே அவர்களிடம் சுமுகமாகப் பேசிப் பழகி வருகிறாள்!

இந்தச் செய்தி பழுவேட்டரையரின் அந்தரங்கத்தின் அந்தரத்துக்குள்ளே அவரையும் அறியாமல் சிறிது திருப் தியை அளித்தது. கரிகாலன் கொல்லப் படாமல் தடுக்க வேண்டியது, தம் குல கௌரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் தமக்கு என்றென்றைக்கும் அழியாத அபகீர்த்தி நேராமல் தடுத்துக் கொள் ளவும் மட்டும் அல்ல; நந்தினியை அத் தகைய கோரமான பாவ காரியத் திலிருந்து தப்புவிப்பதற்காகவுந்தான். ஒருவேளை அவளுடைய மனத்தையே மாற்றி விடுதல் கூடச் சாத்தியமாகலாம். இந்தச் சண்டாளச் சதிகாரர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் அவள் வேறு வழியின்றி இவர்களுக்கு உடந் தையாயிருக்கலாம் அல்லவா? இவர் களை இங்கேயே கொன்று ஒழித்து விட்டால் நந்தினிக்கு விடுதலை கிடைக்கலாம் அல்லவா...?

இவ்வாறு எண்ணி அந்த வீரக் கிழவர் தம்மையறியாமல் தொண் டையைக் கனைத்துக்கொண்டார். சிம்ம கர்ஜனை போன்ற அந்தச் சத்தம் சதி காரர்கள் இருவரையும் திடுக்கிடச் செய்தது.

''யார் அங்கே?'' என்றான் தேவ ராளனாகிய பரமேச்சுவரன்.

அதற்கு மேல் தாம் மறைந்திருப்பது சாத்தியம் இல்லை. உசிதமும் ஆகாது என்று கருதிப் பெரிய பழுவேட்டரை யர் வெளிப்பட்டு வந்தார்.

மழைக்கால இருட்டில் திடீ ரென்று தோன்றிய அந்த நெடிய பெரிய உருவத்தைக் கண்டு

சதிகாரர்கள் இருவரும் திகைத்து நின்ற போது, "நான்தான் யமனுக்கு அண்ணன்!" என்று கூறி விட்டுப் பழுவேட்டரையர் சிரித்தார்.

அந்தக் கம்பீரமான சிரிப்பின் ஒலி அவ்வனப் பிரதேசம் முழுவதையும் நடு நடுங்கச் செய்தது.

வந்தவர் பழுவேட்டரையர் என்று அறிந்ததும் ரவிதாஸன், தேவராளன் இருவரும் தப்பி ஓடப் பார்த்தார்கள்! ஆனால் பழுவேட்டரையர் அதற்கு இடங் கொடுக்கவில்லை. தம் நீண்ட கரங்கள் இரண்டையும் நீட்டி இருவரையும் பிடித்து நிறுத்தினார். அவருடைய வலது கை ரவிதாஸனுடைய கழுத்தைப் பற்றியது. இடது கை தேவராளனுடைய ஒரு புஜத்தைப் பற்றியது. வஜ்ராயுதத்தைக் காட்டிலும் வலிமை பொருந்திய அந்தக் கரங்களின் பிடிகள் அவ்விருவரையும் திக்குமுக்காடச் செய்தன.

எவ்வளவுதான் கையில் வலிவு இருந்தாலும் இருவரையும் ஏக காலத்தில் சமாளிக்க முடியாது என்று எண்ணிப் பழுவேட்டரையர் தேவராளனைத் தலைகுப்புற விழும்படி கீழே தள்ளினார். கீழே விழுந்தவன் முதுகில் ஒரு காலை ஊன்றி வைத்துக்கொண்டு ரவிதாஸனுடைய கழுத்தை இரண்டு கைகளாலும் நெறிக்கத் தொடங்கினார்.

ஆனால் தேவராளன் சும்மா இருக்கவில்லை. அவனுடைய இடுப்பில் செருகியிருந்த கத்தியைச் சிரமப்பட்டு எடுத்துத் தன்னை மிதித்துக் கொண்டிருந்த காலில் குத்தப் பார்த்தான். பழுவேட்டரையர் அதை அறிந்துகொண்டார். இன்னொரு காலினால் அவனுடைய கை மணிக்கட்டை நோக்கி ஒரு பலமான உதை கொடுத்தார். கத்தி வெகு தூரத்தில் போய் விழுந்தது. தேவராளனுடைய ஒரு கையும் அற்று விழுந்துவிட்டது போல் ஜீவனற்றதாயிற்று. ஆனால் அதே சமயத்தில் அவனை மிதித்திருந்த கால் சிறிது நழுவியது. தேவராளன் சட்டென்று நெளிந்து கொடுத்து வெளியே வந்து குதித்து எழுந்தான். உதை படாத கையின் முஷ்டியினால் பழுவேட்டரையரை நோக்கிக் குத்தத் தொடங்கினான். அந்தக் குத்துக்கள் கருங்கல் பாறைச் சுவர் மீது விழுவன போலாயின. குத்திய தேவராளனுடைய கைதான் வலித்தது. அதுவும் இன்னொரு கையைப் போல் ஆகிவிடுமோ என்று தோன்றியது.

இதற்கிடையில் ரவிதாஸன் தன் கழுத்திலிருந்து பழுவேட்டரையருடைய கரங்களை விலக்கப் பெருமுயற்சி செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை. கிழவருடைய இரும்புப் பிடி சிறிதும் தளரவில்லை. ரவிதாஸனுடைய விழிகள் பிதுங்கத் தொடங்கின. உளறிக் குளறிக் கொண்டே "தேவராளா! சீக்கிரம்! சீக்கிரம்! கோவில் மேலே ஏறு! மண்டபத்தைக் கீழே தள்ளு!" என்றான்.

தேவராளன் உடனே பாய்ந்து சென்று பள்ளிப்படைக் கோயிலின் மேல் மண்டபத்தின் மீது ஏறினான். அங்கே மண்டபத்தின் ஒரு பகுதியில் பிளவு ஏற்பட்டு இனிச் சிறிது நகர்ந்தாலும் கீழே விழக்கூடிய நிலையில் இருந்தது. அதை முன்னமே அவர்கள் கவனித்திருந்தார்கள். ரவிதாஸன் அதைத்தான் குறிப்பிடுகிறான் என்று தேவராளன் தெரிந்துகொண்டான். மண்டபத்தின் இடிந்த பகுதியைத் தன் மிச்சமிருந்த வலிவையெல்லாம் பிரயோகித்து நகர்த்தித் தள்ளினான். அது விழும்போது அதனுடனிருந்த மரம் ஒன்றையும் சேர்த்துத் தள்ளிக்கொண்டு விழுந்தது.

பழுவேட்டரையர், மேலேயிருந்து மண்டபம் நகர்ந்து விழப் போவதைத் தெரிந்துகொண்டார். ஒரு கையை ரவிதாஸனுடைய கழுத்திலிருந்து எடுத்து மேலேயிருந்து விழும் மண்டபத்தைத் தாங்கிக் கொள்ள முயன்றார்.


ரவிதாஸன் அப்போது ஒரு பெரு முயற்சி செய்து அவருடைய பிடியிலிருந்து தப்பி அப்பால் நகர்ந்தான்.

மரமும் மண்டபமும் பழுவேட்டரையர் பேரில் விழுந்தன. பழுவேட்டரையர் தரையில் விழுந்து நினைவு இழந்தார்.

(தொடரும்)

வெற்றிக்கு வழி

ஆம்! அதிர்ஷ்டமான பெயர் அமைத்தால் நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம். பணம், பதவி, யாவும் கிட்டும். வெற்றிமேல் வெற்றிகளைக் குவிப்பீர்கள். இவ்வுலகில் அனுபவிக்கத்தக்க அனைத்து சுகபோகங்களையும் அனுபவிக்கலாம் என்று ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார் கோவை மாவட்டம் அன்னூர் பு.புளியம்பட்டி அருகில் உள்ள கணுவக்கரையில் வசிக்கும் ஜோதிட விஞ்ஞானி கே.ஆர். பிரபாகர்ராஜ் அவர்கள். இவரது கருத்துக்கள் பின்வருமாறு:-



ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் மூலகாரணமாக இருப்பது பெயரும், கையெழுத்துமே ஆகும். ஒருவருடைய பெயரை முழுவதுமாக மாற்றத் தேவை இல்லை. சிறு திருத்தம் மட்டும் செய்தால் போதும். அதிர்ஷ்டப் பெயரால் மனித வாழ்வில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிக நல்ல முறையில் தீர்வுகாண முடியும்.

அதிர்ஷ்டப் பெயர் அமைக்க நியூமராலஜி, நேமாலஜி, சைன், தொழில் வசியம், சிக்னேச்சராலஜி பெயர் வசியம், ஆர்க்கோலஜி, கிராபாலஜி, ப்யூசராலஜி போன்ற 9 வகையான காரணிகளையும் 12 வகையான இயக்கங்களையும் ஆதாரமாக வைத்து பெயர் சூட்டினால் பிரபலம் உண்டாகும். இது பூரணமாக விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சாஸ்திரமாகும். அதிர்ஷ்டப் பெயர் எண் சாஸ்திரப்படி முறையாகப் பெயரை மாற்றினால் உடனே அதிர்ஷ்டம் உண்டாகும்.

அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டால் அன்பான மனைவி (நல்ல மனைவி) அறிவுள்ள குழந்தைகள் வசதிமிக்க வீடு, வளமான தொழில், குறைவில்லாச் செல்வம் ஆரோக்கியமான உடல், இன்பகரமான வாழ்வு போன்ற அனைத்து அதிர்ஷ்டங்களையும் அள்ளித் தரும். தொழில் முடக்கம் வியாபார மந்தம் உத்தியோகத்தில் இடையூறு, கணவன் மனைவியர்க்கிடையே ஒற்றுமை இல்லாமை, செக்ஸ் கோளாறு, மனக்குழப்பம், போதைப் பொருளுக்கு அடிமை ஆகுதல், செய்வினை மாந்திரீக பாதிப்பு, தீய சக்தியால் பாதிப்பு திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இல்லாமை, முன்னேற்ற தடை, புகழ் இல்லாமை, மனநோய் போன்ற எண்ணற்ற வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் இக்கலையின் மூலம் நிரந்தரத் தீர்வு காண முடியும்.

பெயர் மாற்றத்தால் பெருஞ்செல்வர் ஆகலாம். பெயரை எந்த வயதிலும் அதிர்ஷ்டமாக மாற்றி வெற்றிகளைப் பெறலாம். முறையாகப் பெயர் அமைத்தால் முன்னேற்றம் உண்டாகும். தாங்களே பெயர் மாற்றி குழம்பி வாழ்வில் பெருந்துன்பத்தை அடைந்தவர்கள் ஏராளம். RAJINI KANT (ரஜினிகாந்த்) என்ற பெயரையோRAMBA (ரம்பா) என்ற பெயரையோ எல்லோருக்கும் வைக்க முடியாது. இது பொருந்தி வருபவர்களுக்கு மட்டுமே வைக்க வேண்டும். அப்போதுதான் அதிர்ஷ்டம் தரும்.




AJITH(அஜீத்) என்ற பெயரையும் SIMRAN(சிம்ரன்) என்ற பெயரையும் ஆய்வு செய்தால் இதில் வசியம் இருக்கும். யாருக்கு எந்தப் பெயர் பொருந்தும் என்று நன்கு ஆய்வு செய்து பெயர் அமைத்தால் அதிர்ஷ்டம் உண்டாகும். செய்கின்ற தொழில் எதுவாக இருந்தாலும் அத் தொழிலில் வசியம் இருக்க வேண்டும். அப்படி தொழில் வசியம் இருந்தால்தான் தொழிலில் பெரும் பணம் சம்பாதிக்க முடியும்.

ஒரு மனிதனுக்கு விடாமுயற்சி, அயராத உழைப்பு, தர்ம குணம், தன்னம்பிக்கை போன்ற குணங்கள் இருந்தும் வாழ்வில் வெற்றி பெற முடியவில்லையெனில் அதிர்ஷ்டம் இல்லை என்பது நன்கு தெரிகிறது. இல்லாத அதிர்ஷ்டத்தை பெற இக்கலை வழிகாட்டும்.

வெற்றிபெற துடிப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாகும். இதை பயன்படுத்துபவர்கள் அனைவரும் வெற்றியுடன் வாழலாம். என்னால் சவால்விட்டு நிரூபிக்க முடியும். இக்கலையின் மூலம் எம்மிடம் அதிர்ஷ்டப் பெயர் அமைத்தவர்கள் அனைவரும் இன்று வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். உடலின் காந்த சக்தி உயிர்ப்பு சக்திக்கு தக்கவாறு பெயரையும் கையெழுத்தையும் அமைத்தால் அபரிமிதமான அதிர்ஷ்டங்கள் கிட்டும்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ரஜினி காந்த், பாக்கியராஜ், விஜய், சூர்யா, குஷ்பு, ரம்பா, சிம்ரன், ரோஜா, விஜயகாந்த் போன்ற சினிமா துறையினர்களும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும். பெயரில் வசியம் கோபுராம்சம் இருக்க வேண்டும்.



அரசியலில் வெற்றி, சினிமாவில் புகழ், விளையாட்டில் சாதனை, தொழிலில் மேன்மைகிட்டும். அந்த கால இராஜ ராஜ சோழன், அக்பர், புத்தர், மகாவீரர், அசோகர், பொற்கை பாண்டியன், நெப்போலியன், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், இந்திராகாந்தி, வீரமாமுனிவர், செங்வேல் சேரன், ஆதிசங்கரர், காஞ்சி பெரியவர் போன்றோரும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும்.

அதிர்ஷ்டப் பெயர் சாதாரண மனிதனையும் பெரிய சாதனையாளராக ஆக்கக் கூடியது. கையெழுத்தால் தலை எழுத்தை வெல்லலாம்.

ஆண்-பெண் எந்த தேதியில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்த நாளின் கூட்டு எண், திருமணத் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் எண் 2,4,5,7,8 வரும் நாளில் கண்டிப்பாக திருமணம் செய்யக் கூடாது. அப்படி செய்தால் சோதனைகளும், போராட்டங்களும் நடக்கும். இதிலிருந்து விடுபட மறு மாங்கல்ய பூஜை அதிர்ஷ்ட நாளில் செய்து கொண்டால் குடும்ப வாழ்க்கை சந்தோஷமுடனும், வெற்றியுடனும் இருக்கும்.

அதிர்ஷ்டப் பெயர், எண் சாஸ்திரம் எக்காலத்திலும் மாறாத சக்தி கொண்டது. பெயரையும் இடும் கையெழுத்தையும் வளமாக்கிக் கொண்டால் என்றென்றும் வெற்றிகள்தான். இக்கலையின் மூலம் நான் சவால்விட்டு நிரூபித்துக் காட்டிய அறிவியல் விஞ்ஞான சாஸ்திரமாகும்.

இவர் எழுதிய (உலகின் No:1 நியூமராலஜி நூல்)

"அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம்"

என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். எல்லா ஊர் புத்தக கடைகளிலும் கிடைக்கும். (தபால் மூலம் பெற ரூ. 300/- M.O. செய்யுங்கள். வெளிநாட்டினர் ரூ.1000/- அனுப்புங்கள்.)

உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்

ஜோதிட மாமேதை கே.ஆர். பிரபாகர்ராஜ்

நியூமராலஜி-நேமாலஜி-சைன்-தொழில் வசியம்

அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடர்

கே.ஆர். பிரபாகர்ராஜ் எம்.ஏ.,

நல்லாந்தோட்டம், கணுவக்கரை (அஞ்சல்),

புஞ்சைபுளியம்பட்டி (வழி) - 638 459.


கோவை மாவட்டம்.

போன்: (04254) 87258.

விடுமுறை: செவ்வாய், வியாழன்

நீங்களும் அதிர்ஷ்டம், புகழ், வெற்றி பெறலாம்.

சூரிய சக்தி



ஒலிம்பிக் திருவிழா செப்டம்பர் மாதம் சிட்னியில் தொடங்க இருக்கிறது. இந்த விளையாட்டு விழாவுக்காக சிட்னி அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்க, அது பற்றிய தம்மாத்துண்டு முன்னோட்டம் நம் வாசகர்களுக்காக!

🍷 வௌவால் மாதிரி பறந்து நிற்கும் அழகழகான கட்டடங்களும், ஜொலிக்கும் கண்ணாடிகள், வியக்கும் தூண்களுமாய் எழுந்து மிரட்டும் ஸ்டேடியங்களும் சிட்னியின் அழகுக்கு அழகு செய்ய, உள்ளூர் வாசிகள் இதை வேடிக்கைப் பார்க்கவே கூட்டம் கூட்டமாய் வந்து மூக்கின் மேல் விரல் வைத்துச் சொல்கிறார்கள்.

🍷 சிட்னிக்கு வழக்கமாக மூன்று மில்லியன் டூரிஸ்டுகள் வருடத்திற்கு வருகிறார்கள். ஆனால் பதினாறு நாட்கள் நடக்கும் இந்தப் போட்டிக்காக ஒன்றரை மில்லியன் பார்வையாளர்கள் வருவார்கள் என்கிறார்கள். அதாவது ஒரு வருடத்தில் வருபவர்களில் பாதிபேர் இந்தப் பதினாறு நாட்களிலேயே வருகிறார்களாம்!

🍷 ஒலிம்பிக் போட்டிகளுக்காக ஸ்டேடியம் உள்ளிட்ட கட்டடங்கள் கட்ட ஒதுக்கப் பட்டிருக்கும் மொத்த தொகை 1.8 பில்லியன் டாலர்!

🍷 கன்ஸ்ட்ரக்ஷன் வேலைகளை உள்ளூர் ஆட்களைக் கொண்டு முடித்த ஒலிம்பிக் கமிட்டி ஸ்டேடியங்களின் புற அழகை மட்டும் அமெரிக்க ஆர்க்கிடெக்டுகளைக் கொண்டு அமைத்திருக்கிறார்கள்.

🍷 ஆஸி.யின் ஜாம்பவான் ஆர்க்கிடெக்டுகளைக் கொண்டு ஒலிம்பிக் கிராமம் அமைக்கப்பட்டிருக்கிறது. கிராமமா? என்று வாய் பிளக்காதீர்கள். இந்தக் கிராமம் பிரம்மாண்டத்தின் மறுவடிவம்! வசதிகளின் இருப்பிடம். இதில் பதினைந்தாயிரத்து முன்னூறு அத்லெடிக் வீரர்கள் தங்க இருக்கிறார்கள். வசதிகள் அனைத்தும் சூரிய சக்தியில் இயங்கப் போகின்றன. உலகிலேயே மிகப் பெரிய அளவில் சூரிய சக்தி பயன்படுத்தப் படப்போவது இங்குதானாம்.

🍷 மெயின் ஸ்டேடியம் சிட்னியிலிருந்து 15 கி.மீ. தூரத்திலுள்ள ஹோம் புஷ் (Home bush) நகரில் கட்டப்பட்டிருக்கிறது. இது ஒரு மெகா ஸ்டேடியம்! ஆமாம், ஒலிம்பிக் வரலாற்றிலேயே இதுதான் பெரிய ஸ்டேடியமாம். ஒரு லட்சத்து பத்தாயிரம் பேர் இதில் அமர்ந்து பார்க்க முடியும். இந்த ஸ்டேடியம் 1996ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கட்டத் தொடங்கி ஜூன் 1999ல் முடிவடைந்திருக்கிறது. திட்டமிட்ட





கிராமம்!

மூன்று மாதங்களுக்கு முன்பே கட்டி முடிக்கப்பட்டு விட்டதாம்! இதற்கான செலவு எவ்வளவு தெரியுமா? 690 மில்லியன் அமெரிக்க டாலர்.

🏆 இங்கு வந்து குவியும் ஆறாயிரம் பத்திரிகையாளர்கள் மற்றும் டீ.வி. காரர்களுக்குத் தனியாக 50 ஹெக்டேர் பரப்பில் ஏரியா ஒன்றை நிறுவியிருக்கிறார்கள்.

🏆 ஒலிம்பிக் ஏரியாவுக்குள் கார் பார்க் கிங்கிற்கெல்லாம் வழி இல்லை. ஏனென்றால் ஒலிம்பிக்கிற்கென்றே புதிதாக ஒரு ரயில் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ரயிலைத்தான் வருபவர்கள் பயன்படுத்த வேண்டும். ஒரு மணி நேரத்தில் ஐம்பதாயிரம் பயணிகளைக் கொண்டு செல்ல முடியுமாம். பஸ்களிலும் ஏகப்பட்ட வசதிகள். தரையிலிருந்து இடுப்பு உயரத்திற்கு இருக்கும் பஸ் படிக்கட்டுகளில் ஏறுவதற்குள் படாதபாடுபட்டு நொந்து போவதற்குப் பதிலாக படிகளே தரையிறங்குமாறு வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.


🏆 ஏற்கெனவே பெரிதாக இருக்கும் சிட்னி ஏர்போர்ட் 600 மில்லியன் டாலரில் ஒலிம்பிக்கிற்காக புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் 43 மில்லியன் டாலர் செலவில் புதிய 'பாக்கேஜ்' சிஸ்டம் ஒன்றும் ரெடியாகி இருக்கிறது.

🏆 ஒலிம்பிக்கிற்கான 9.6 மில்லியன் டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன. இதில் ஐந்து மில்லியன் டிக்கெட்டுகளை ஆஸ்திரேலியர்கள் ரிசர்வ் செய்திருக்கிறார்கள்.

🏆 பார்வையாளர்கள் உணவு மற்றும் ட்ரிங்ஸ் சமாசாரங்களை ஸ்டேடியத்துக்குள் எடுத்து வர முதலில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இப்போது உணவுக்கு வரவேற்பையும் ட்ரிங்ஸ்க்கு மட்டும் தடையும் விதித்திருக்கிறார்கள்.

🏆 கிரீஸ் நாட்டில் மே 10ம் தேதி ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டிருக்கிறது. இந்த ஒலிம்பிக்கிற்கு மட்டும்தான் 27 ஆயிரம் கிலோ மீட்டர்கள் சுற்றி வருகிறது ஒலிம்பிக் ஜோதி! பதினோறாயிரம் பேர் இதைத் தூக்கி வருகிறார்கள்.

- ஏக்ஜி, ரவி



ராமனின் அப்பா அம்மாவின் கண்டிப்பான பேச்சு பெண்ணின் தந்தையான விசுவத்துக்கு அதிர்ச்சியாக இருந்ததோ இல்லையோ, எனக்கு ரொம்ப சங்கடமாக இருந்தது. கூப்பிட்டானே என்று சும்மா மாப்பிள்ளைத் தோழனாகத்தான் நான் அவனுடன் பெண் பார்க்கப் போனேன்.

பெண் வித்யா அழகாக அடக்கமாக இருந்தாள். போஸ்டல் டிபார்ட்மெண்டில் வேலை. ஏற்கெனவே இரண்டு பெண்களை கரையேத்தியவர் விசுவம். மூன்றாவது பெண்ணான வித்யாவுக்கு கல்யாணம் செய்ய ரொம்ப சிரமப்படுவார் போல் தோன்றியது. பெண் பிடித்து லௌகீகம் என்று பேச்சு வரும்போதுதான் விவகாரம் கிளம்பியது.

''முப்பது பவுன் நகை, இரண்டரை கிலோ வெள்ளி... கையிலே பத்தாயிரம் கொடுத்துடுங்கோ.. தவிர தலைதீபாவளிக்கு வைர மோதிரம், கார்த்திகைக்கு ஜோடியா வெள்ளிக் குத்துவிளக்கு. அப்புறம்... கிரைண்டர், மிக்ஸி, வாஷிங்மெஷின், ப்ரிஜ் எல்லாம் கொடுக்கறதுதான் இப்ப ஃபேஷனா போயிடுத்தே'' ராமனின் அப்பா பேசப் பேச விசுவம் திணறுவது தெரிந்தது.

''அது... வந்து... வித்யா கல்யாணத்துக்காக நான் ஒதுக்கி வெச்சது ரெண்டு லட்சம் தான். கல்யாணத்துக்கே ஒரு லட்சம் ஆயிடும். வந்து..

மனுஷங்க!

பவுன்... வெள்ளியிலே... கொறைச்சிண்டா தேவலை..." தயக்கமாகப் பேசினார்.

எனக்குப் பாவமாக இருந்தது.

ராமனின் அப்பா எழுந்து விட்டார்.

''மன்னிக்கணும். என் பிள்ளை இன்ஜினியர். மாசம் முப்பதாயிரம் சம்பா திக்கறான். இதுவே நாங்க கேட்டது குறைச் சல். முடிஞ்சா பாருங்கோ. இல்லாட்டா விட்டுடலாம்."

ராமனை ஆபீஸில் பார்த்துக் கேட்டேன்.

"ஏண்டா! உங்க அப்பா அம்மா இப்படி கண்டிஷன் போடறது நல்லா இருக்கா? நீயாவது எடுத்துச் சொல்லக் கூடாதா? இது என்ன கல்யாணமா? வியாபாரமா?"

"ஏன்? எங்கப்பா கேட்டதிலே என்ன தப்பு? என் படிப்புக்கும் வேலைக்கும் இந்த அளவாவது செய்ய வேண்டாமா? இல்லாட்டா கேவலமா போயிடாதா எனக்கு?''

எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. வித்யாவின் களங்கமில்லாத அழகு முகம் என் மனக்கண்ணில் தோன்றி வேதனைப்பட வைத்தது.

எனக்கு ஏற்கெனவே திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. இல்லாவிட்டால் ஒரு பைசா வரதட்சணை வேண்டாம் என்று வித்யாவை நானே கூட கல்யாணம் பண் ணிக் கொள்ளலாமே என்று அசட்டுத் தனமாகத் தோன்றியது.

அடுத்த வாரம் காரைக்கால் போயி ருந்த போது சுப்பு பெரியப்பா கேட்டார்.

''ஏண்டா? நம்ம ரகுவுக்கு நல்ல பெண்ணா இருந்தாப் பாரேன். பேங்க்லே வேலை பார்க்கிறான் இல்லையா? சென்னைக்கு மாத்தலாயிடுத்து. வேலை பார்க்கிற பெண் வேணுமாம். மெட்ராஸ் பெண்ணா இருந்தா தேவலை."

ரகு பெரியப்பாவின் பிள்ளைதான். உடனே எனக்கு வித்யாவின் நினைவு வந்தது.

"ஏன் பெரியப்பா, வரதட்சணை, சீர்னு எவ்வளவு எதிர்பார்க்கறீங்க?"

பெரியப்பா சிரித்தார்.

"என்னடா புதுசா கேட்கறே? பெரிய வனுக்கு நான் வரதட்சணை வாங்கியா பண்ணினேன்? பெண் வீட்டிலே செய்யற தைச் செய்யட்டும். நான் எதுவும் டிமாண்ட் பண்ணலை."

''அப்படீன்னா பெண் ரெடி. நான் மெட்ராஸ் போனதும் போன் பண்றேன். நீங்க பெண் பார்க்க வாங்கோ" உற்சாக மாகச் சொன்னேன்.

பானுமதி ராஜகோபாலன்



காரைக்காலில் வேலை முடிந்து கிளம்ப பத்து நாள் ஆகிவிட்டது. சென்னை வந்ததும் வராததுமாக பெட்டியைத் தூக்கிப் போட்டு விட்டு அவசர அவசரமாக வித்யாவின் வீட்டுக்கு பஸ் ஏறினேன்.

உறவினர் கும்பலுடன் அவர்களின் வீடு கலகலப்பாக இருந்தது.

விசுவம் என்னைப் பார்த்ததும் ஒரு விநாடி யோசித்து, "அட... நீங்க ராமன் பெண் பார்க்க வந்தப்போ கூட வந்த ஃபிரண்ட்தானே?" என்று வரவேற்றவர் காப்பி கொடுத்தார்.

விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று தயக்கமாக இருந்தது.

"வந்து... ராமன் வீட்டிலே ரொம்ப டிமாண்ட் பண்ணிட்டாங்க அன்னிக்கு. எனக்கே கூடச் சங்கடமா போயிடுத்து."

"அதுக்கென்ன பண்றது? இன்ஜினியர், டாக்டர், அத்தனை கேட்கத்தான் கேட்கறா."

"தப்பில்லையா சார்?"

"தப்புன்னு சொல்ல முடியுமா? முடிஞ்சா கேட்கறதை செய்யத்தான் வேணும். எனக்கே அப்போ முடியாமல்தான் இருந்தது. ஆனா இப்ப அந்தக் கஷ்டம் இல்லை. கொஞ்சம் வசதி வந்திருக்கு."

எனக்குப் புரியவில்லை.

"என்ன சொல்றீங்க?"

"அதாவது.. கிராமத்திலே ரொம்ப நாளா ஒரு சொத்துத் தகராறு கோர்ட்லே இழுபறியா இருந்தது. உங்க பிரண்ட் ராமன் பெண் பார்த்துட்டு போன வேளை பாருங்கோ, கேஸ் என் பக்கம் ஜெயிச்சு மூணு லட்சம் கிடைச்சிருக்கு. இனிமே என்ன? அவா கேட்டபடியே சீர்வரிசை தாராளமா செய்யலாமே. அந்தப் பையனையே முடிச்சுடலாம்னு தீர்மானம் பண்ணிட்டேன்."

எனக்கு வெறுத்துப் போனது.

அவரே தொடர்ந்தார்.

"கைநிறைய சம்பாதிக்கறான். இன்ஜினியர். ஒரே பிள்ளை வேறே. அப்புறம் என்ன? இன்னிக்குத்தான் நிச்சயதார்த்தம். வேன் வரணும்னு காத்திண்டு இருக்கோம். நீங்களும் வாங்களேன். உங்க நண்பர் உங்களைக் கூப்பிடலையா? பரவாயில்லை. எங்களோட வாங்கோ..." சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தார் விசுவம்.

"இல்லை.. எனக்கு வேறே வேலை இருக்கு. கிளம்பறேன்..."

வெளியே வந்தேன். எனக்கு ராமனையும் பிடிக்கவில்லை. விசுவத்தையும் பிடிக்கவில்லை. ○



● தபன் சிக்தர்

'பாஸ்' ஆன தாஸ்!

'**தொ**லை தகவல் தொடர்புத் துறையின் இணை அமைச்சர் தபன் சிக்தர். இவருக்குப் பெரும்பிரச்னை கொடுத்துக் கொண்டிருப்பவர் மிருணாள் தாஸ்! இவர் வேறுயாருமில்லை அமைச்சரின் பிரைவேட் செகரட்டரிதான்!

என்ன பிரச்னை?

அமைச்சரையே அதிகாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார் அவரது செகரட்டரி! அண்மையில் கல்கத்தாவில் ஒரு விழாவில் மத்திய அமைச்சர் அஜித் பாஞ்சாவும், தபன் சிக்தரும் கலந்து கொள்ளுவதாக ஏற்பாடு! பாஞ்சா வருவதற்கு அரைமணி தாமதம் ஆனது. அதற்குள், "நேரத்தை வீணாக்காதீர்கள். நாம் புறப்படலாம்" என்று சிக்தரை நச்சரித்துவிட்டார் செகரட்டரி!

அதுபோலவே, அமைச்சர் கலந்து கொண்ட டின்னரில் அவர், பி.ஜே.பி.யைச் சேர்ந்த சில வி.ஐ.பி.களுடன் பேசியபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். செகரட்டரியோ, அமைச்சரிடம் வந்து, "அனாவசியமாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம், சீக்கிரமாய்ச் சாப்பிட்டுவிட்டுப் புறப்படுங்கள்" என்று கட்டளை இட, அமைச்சருக்கு வந்ததே கோபம்..! இப்போது மிருணாள் தாஸைக் கழற்றிவிட்டு விட்டுப் புதிய செயலாளர் நியமித்துக் கொள்ளலாமா என அமைச்சர் யோசிக்கிறார்.

— எம்.

அருள்வழி காண! ஓம் நமசிவாய! திரு அருணாசலத்தை நாடு!

தெய்வீகம் பொங்கும் திருஅண்ணாமலையில் மாதாமாதம் பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்! ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் அருளைப் பெறுவோம் பாருங்கள்!

பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் ஸ்ரீ அருணாசலேஸ்வரரிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

● உலகத்திலேயே மிகப்பெரிய சுயம்பு சிவலிங்க மூர்த்தியாக விளங்குகின்ற திருஅண்ணாமலையில் பௌர்ணமி அன்று சந்திர பகவான் பதினாறு கலைகளுடன் பரிபூர்ணமாகப் பிரகாசிக்கிறான். அந்த அபூர்வ சக்திவாய்ந்த கிரகணங்களைத் தங்களின் உடலில் ஏற்று கிரிவலம் வரும் இறைஅடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண்பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அன்னதானம் செய்யப்படுகிறது. இந்தப்புனித இறைபணியில் பங்குகொண்டு தாங்களும், தங்கள் சந்ததியினரும் எல்லாம்வல்ல ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளைப் பெற வேண்டுகிறோம்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

✧ பிறந்தநாள் ✧ திருமணநாள் ✧ முன்னோர்கள் திதி நாள் ✧ வாழ்க்கையில் உயர்வு ✧ தொழிலில் முன்னேற்றம் பெற ✧ நிரந்தர வேலை பெற ✧ புதிதாக தொழில் தொடங்க ✧ புதிதாக வீடு / மனை பெற ✧ வாகன யோகம் பெற ✧ நல்ல சிந்தனை பெற ✧ சிந்தனை வளம் பெருக ✧ உடல் ஆரோக்கியம் பெற ✧ நீண்ட ஆயுள் பெற ✧ தெய்வசக்தியுடன் திகழ ✧ குடும்ப ஒற்றுமை பெற ✧ உலக ஒற்றுமை பெற ✧ சமுதாய ஒற்றுமை பெற ✧ தேச ஒற்றுமை பெற ✧ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, **ஆன்மீகம்** மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, **ஆன்மீகம்** மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.2000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, **ஆன்மீகம்** மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, **ஆன்மீகம்** மாத இதழ் ஆயுள் முழுவதும் அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து வாழ்நாள் முழுவதும் (Life Long) பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **ஸ்ரீமத் பகவத்கீதை** புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

● நன்கொடை அனுப்புபவர்கள் *(Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4)* என்ற பெயரில் *Cheque/ D.D/M.O.* மூலம் அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.


ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEGA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, (Opp. Kapaleeswarar Koil) Mylapore, Chennai - 600 004. Ph : + 4958086 / 495932 Fax: + 91 - 044 - 4616311


ஸ்ரீ உண்ணாமுலையம்மன்


ஒரு மகானின் வயிற்றுக்கு இடும் நல் உணவு ஏழேழு பிறவிகளுக்கும் நல்வழி காட்டும்!

மாணவிகளுக்கென தனி கோடவுன் இருந்தது போலவே ஆசிரியைகளுக்கும் ஸ்டாஃப் ரூம் தனியாகத்தான் இருந்தது. என்றால் சரிதான். எல்லாமே மரபிலிருந்து வருகின்றன. ஒரு பெரிய வீட்டின் சமைய லறை போல அந்த அறை இருந்தது. ஓய்வு வகுப்பு நேரத்தில் நாற்காலிக்கு முன்னுள்ள டேபிள்களில் ஹேர் பின்கள் கிடந்தன. பள்ளி வளாகத்தில் நுழைந்த அறுபத் தெட்டாவது மீட்டரில் வடக்குப் பார்த்து இருந்த அந்த அறை சிமை ஓடு வேயப்பட்டிருந்தது. பகலில் அதன் மீது வேப்ப மர நிழல் பல்வேறு பரப் பளவில் மடிந்து கொண்டிருக்கும். பார்த்தி பனும் பிரகாஷும் உள்ளே நுழைந்த போது ராஜவேணி டீச்சரும் அமலா டீச்சரும் இருந் தார்கள். காந்தாமணி டீச்சர் இல்லை யென்பது ஆசுவசமாய் இருந்தது. ராஜ வேணியிடம் பார்த்திபன்,

"டீச்சர் திங்கட்கிழமை ஸ்டிரைக்" என் றான். டீச்சர் தன் வாழ்வில் இத்தரு புதிரான சம்பவத்தை எதிர்பார்க்கவில்லை என்பது போலப் பார்த்துவிட்டு "ம்" என்றார். அப் போது ஸ்டாஃப் ரூமுக்குள் நுழைந்த ராமுத் தாய் டீச்சர் பார்த்திபனின் முதுகில் செல்ல மாய்த் தட்டி,

"மகனே! ஸ்டிரைக் பண்றியாமா?" என்றார். ராமுத் தாய் டீச்சர் பார்த்திபன் ஏழாவது எட் டாவது வகுப்பு களுக்கு பாடங் கள் எடுத்தார். அப்புறம் பள்ளியில் தினமும் தட்டுப் படு வதுதான். போன

② காணல் தெரு





ஆண்டு அவரது மகனோடு ஒரு நாள் சினிமாவுக்குப் போய்க் கொண்டிருந்த நேரத்தில் எதிர்ப்பட்டவர்,

"மகனே! நீயுமாடா சினிமாவுக்கு?" என்று கேட்டார். அதற்குப் பிறகெல்லாம் எப்போதும் விளிப்பது மகனே! என்றுதான். சொல்லுக்கு எட்டாத அரிய தன்மைகளை அந்த அழைப்பு தாங்கிக் கொண்டிருந்தது.

"ஆமாங்க டீச்சர்."

"எதுக்கு ஸ்டிரைக்?" அமலா டீச்சர் அமெரிக்காவில் நடந்த ஏதோ தீ விபத்தை விசாரிப்பது போன்ற தொனியில் கேட்டார். தெளிவான பதில்கள் இல்லை. பதில்கள் யாவும் மோகனின் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டு லோகநாதனால் வாசிக்கப்பட இருக்கின்றன. திங்கட் கிழமை பங்களா மேட்டில் வைத்து லோகு அதை வாசிப்பான்.

க.சீ. சிவகுமார்

"காரணம் நிறைய இருக்குங்க டீச்சர். ஒரு பேப்பர்ல எழுதி வச்சிருக்கம். அதை அப்புறம் காட்டறோம்."

"ஹோம் ஒர்க் எழுதச் சொன்னா ஒழுங்கா எழுத மாட்டானுக" என்று ராமுத்தாய், ராஜவேணி பதிலுக்குப் புன்னகைத்து விட்டு,

"நியாயம்னு பட்டா செய்யுங்கப்பா. டீச்சர்ஸ் கிட்ட, கிளாஸ் லீடர்ஸ் கிட்ட எல்லாம் சொல்லிட்டீங்களா?" என்று கேட்டார்.

"எல்லாம் இனிமேல்தானுங்க டீச்சர். முதல்ல உங்ககிட்ட சொல்லலாம்னு வந்தேன்" பார்த்திபன் இதைச் சொல்லவும் ராஜவேணி,

"அடடா... முதல் பத்திரிகை வைக்கிற மாதிரியா... போங்க போங்க பிரேயர் பெல் அடிக்கப் போவுது" என மலர்ந்து சிரித்தார்.

பிரகாஷும் பார்த்திபனும் வெளியில் வந்தார்கள். முதல் பத்திரிகை என்ற சொல் பார்த்திபனைக் கலக்கி விட்டது. எங்கோ ஒரு பிணைப்புச் சரடு ஓடிக் கொண்டே இருக்கிறது. ராஜவேணி டீச்சர் அவனுக்கு பாடம் நடத்த வருவதில்லை. அவர் ஆர்ட்ஸ் குருப்புக்கு வரலாறு நடத்த வருகிறவர். புதுசாய் வந்தவர்தான். வந்த முதல் நாள் அவரை பார்த்திபன் பார்க்கவில்லை. "புது டீச்சர் வந்திருக்காங்க" என்பது தலைப்புச் செய்தியாய் பள்ளியில் உலவியது. தேடலின் தீப்பந்தத்தைத் தூக்கிக் கொண்டு பார்த்திபனின் மனம் அலைந்தது. அடுத்த நாள் அவர்களை எதிரில் கடந்தபோது கண்களைப் பார்த்தான். பின் இரண்டு நாள் கழித்து உயிரியல் லேப்பின் முன்னுள்ள வான்கொன்றை மரத்தின் கீழ் பார்த்தபோது தனது பெரியம்மா மகனான அண்ணன் மகேந்திரனுக்குத் திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என நினைத்தான். ராஜவேணிக்

குத் திருமணம் ஆகவில்லை. அவர் பார்த்தி பனுக்கு அண்ணியாக வந்தால் மிகவும் மகிழ்ந்து விடுவான்.

மதிய உணவு இடைவேளைகள், ரீஸஸ் பீரியட்கள் வியாழன் வெள்ளியில் பரபரப் பாயிருந்தது. பார்த்திபன் சகாக்கள் மூன்று நான்கு குழுக்களாய்ப் பிரிந்து ஸ்டிரைக்குக்கு ஆதரவு தேடினார்கள். லோகநாதனோடும் சுற்ற வேண்டியிருந்தது. அவன்தான் எஸ்.பி.எல். இதைச் சொல்வதற்கு வக்கீல் போல இருந்தாலும் 'ஸ்கூல் பீப்பிள் லீடர்' என்பதன் சுருக்கமாய் அப்படி அழைக்கப் பட்டான். பள்ளி மாணவர் தலைவன் என் பதன் ஆங்கிலச் சுருக்கம். "ப.மா.த. என்று அழையுங்கள் அவனை'' என தமிழாசிரியர்



''எங்க ஆபீஸ் ஸ்டோர்ரும் ரொம்ப ராசியானது!''
''அப்படியா!''
''அங்கே நான் கண்ட எல்லா கனவு களுமே பலிச்சிருக்குன்னா பாரேன்!''
– மிஸ்டர் எக்ஸ்

சிலகாலம் வற்புறுத்தினார். பின் அரசியல் காரணங்களால் அந்த வற்புறுத்தலைக் கைவிட்டார். இது தவிர, லோகு பி.பி.எல். என்றும் அழைக்கப்பட்டான். அது மண் ணும் மரபும் சார்ந்த பெயர். பெரியமதியாக் கூடலூர் பழனிச்சாமி லோகநாதன் என்ப தாக பி.பி.எல். ஆனான். இது நிறுவனம் போன்ற தன்மையை பெயரில் ஒலிக்கக் கூடியது. உள்ளது போலவே பலவித அடை யாளங்களும், முகங்களும் உடையவனாக அவனைத் தெரிந்து கொள்ள ஒரு திங்கட் கிழமை வரவேண்டியிருந்தது.

ஸ்டிரைக் முடிந்த பிறகு பெரும்பான்மை வகுப்புத் தலைவர்கள் மாற்றப்படுவதற்கு ஆதரவு திரட்டும் குழுவினர் உறுதி தந்து கொண்டிருந்தனர். ஆறு, ஏழு எட்டு படிக் கிற பையன்கள் உடனடியாக ஒப்புக் கொண் டார்கள். வகுப்புத் தலைவர்களான பையன் கள் துடியற்று இருந்தார்கள். ஒன்றாய்ப் படிக்கிறவர்களாகவும் சதுரங்க ஆட்டத்தில் வருகிற அரசன் போல செயல் திறனத்
நாற்போலவும் இருந்தார்கள். வேறு சில பையன்கள் திடகாத்திரமாயும் ஆளுமை மிக்கவர்களாயும் ஏதாவது ஒரு வருடத்தில் ஃபெயில் ஆகிறவர்களாயும் எறிபந்து விளை யாட்டில் முதுகை வீங்கச் செய்கிறவர் களாயும் இருந்தனர். அவர்கள் வகுப்பில் ஆசிரியர்கள் தவிர மாணவர்கள், பெஞ்சு கள் அனைத்தையும் ஆட்டியும் ஆடவும் வைக்க வல்லமை பெற்றிருந்தனர். ஒரு ஃபெயிலான மாணவன் அங்கீகாரபூர்வ மாக வகுப்புத் தலைவனாய் இருந்தது பள்ளி களின் சரித்திரத்தில் இல்லை. அவர்களை இனி மேல்பட்டு தலைவன் ஆக்குவதாக லோகு துணிந்து உறுதி சொல்லி ஆதரவு திரட்டி னான். ஃபெயிலாகிறவர்களை நம்பி தேசம் இயங்க வேண்டிய காலம் கனிந்து விட்டது.

ஸ்டிரைக்குக்கு ஆதரவாக மாணவிகளை வென்றெடுக்கும் பொறுப்பு பார்த்திபனுக் கும் மோகனுக்கும் வந்து சேர்ந்தது. வெள்ளிக்கிழமை மதிய உணவு இடை வேளையின்போது மாணவிகளின் கோடவுன் பக்கம் செல்ல ஆயத்தமானார் கள். அந்த இடம் பெண்களுக்கென வகுக் கப்பட்டபின் ஆண் பாதம் அறியா அருந் தரைப் பரப்பாக இருந்து வந்தது. பெரும் தயக்கம் சூழ்ந்து இருவருக்கும் பாதங்கள் பின்னிழுத்தன.

மோகன், "அதுககிட்டே சொல்லாட்டி என்ன?" என்றான்.

''சொல்லாட்டி என்னவா? பாவி. ஸ்கூல்ல இருந்து புறப்பட்டு பங்களா மேடு வரைக்கும் ஊர்வலம் போகணும்டா. அவங்களும் கூட வரணும்." அவர்களும் கூட வருவார்கள் என்றால் ஊர்வலத்தை ஏன் பங்களா மேட்டுடன் நிறுத்த வேண்டும் கிழக்கே எலவனூர் வரையோ... கரூர் வரையிலோ... ஏன் திங்கட்கிழமை முழுக் கவுமே நடந்து கொண்டிருக்கலாமே.

"சரி... ஆமாமா.வா" என மோகன் உற் சாகமாய் நடந்தான். பார்த்திபன் கிளாஸ் மேட்டான பெண்களிடம் கூட முக்கால் வாசிப் பேருடன் பேசியதில்லை. அனிதா, ஜோதி, காயத்ரி, பங்கஜவல்லி, ராணிமுத்து, கிருபா என மிகச் சில எண்ணிக்கையின ரோடு பேசியிருக்கிறான். அவ்வளவுதான்.

ஆசிரியர்களின் நடமாட்டம் கண்படாத ஒரு நேரத்தில் சடாரென இருவரும் உள்ளே நுழைந்தனர். யாராவது பார்த்து, "அங்கே என்னடா வேலை. இங்கே வாங்கடா'' என்று கூப்பிட்டுவிட்டால் சர்வநாசம். மோகனும் பார்த்திபனும் உள்ளே நுழைந்த

அந்த நிகழ்ச்சி ஒரு ராட்சத வரவு போலவோ கந்தர்வ வரவு போலவோ தோன்றியிருக்க வேண் டும் அங்கு.

அனிதா, "ஐ... பார்த்தி" என்றாள்.

சில பெண்கள் சாப்பிட்டு முடித் திருக்க பலபேர் சாப்பிட்டுக் கொண் டிருந்தார்கள். பையன்கள் முன்னால் சாப்பிடுவது பாவச் செயல் போல தொண்டையடைத்து விக்கினாற் போல அமர்ந்திருந்தனர். பார்த்தி பனுக்கு இந்த நேரத்தில் வந்தோமே எனச் சங்கடமாக இருந்தது. அத் தனை பெண்களையும் ஒரு சேரப் பார்க்கும் சந்தர்ப்பம் இதுதான். வேறு வழி இல்லை. இனி நேரமும் இல்லை. நல்ல வெயிலில் சூரிய காந்திக் காட்டுக்குள் நிற்பது போலவும் இருந்தது இருவருக்கும்.

படடா! அப்பாடா!

இது ஜப்பானிய பொம்மை தயாரிக்கும் கம்பெனி ஒன்றால் உருவாக்கப்பட்ட ரோபோ முயல். பெயர்: படடா. இது செயற்கை புத்திசாலித்தனம் (ஆர்டிபிஷியல் இன்டலிஜென்ஸ்) கொண்ட பொம்மை என்பதால், குரல் ஒலியைக் கேட்டே கண்களை உருட்டும். காதுகளை ஆட்டும்; உடலை அசைத்து நடக்கும். இந்த பொம்மை விரைவில் விற்பனைக்கு வரப்போகிறது.



-எம்.

'என்ன' என்பது போல ஒரு இரண்டடுக்கு டிஃபன் பாக்ஸ் - புளியோதரை- விழியுயர்த்திப் பார்த் தான். எல்லாப் பெண்களும் ஊதா மற்றும் வெள்ளை நிற யூனிஃபார் மில் ஒன்று போலவே இருந்ததால் பார்த்தி பனின் மனம் டிஃபன் பாக்ஸை முன் வைத்து சாம்பார், தயிர், புளியோதரை எனப் பிரித்துக் கொண்டிருந்தது.

மோகன் பார்த்திபனிடம், "நாம சாப்பிட் டுட்டு வந்திருக்கலாம்" என்றான்.

ஜோதி சாம்பார் சாதத்தை உருட்டி எடுத்து ''கையை நீட்டுங்க'' என்றாள் மோகனிடம். கையைக் கழுவிக் கொண்டு வந்து கையை நீட்டினால் இந்தப் பொன் னான வாய்ப்பு பறிபோய் விடுமே என்பது போல உடனே வலது கையை மோகன் நீட்டினான். அமுத சுரபியையே பெற்றுக் கொள்வது போல அதைப் பெற்றுக் கொண் டவன், வாயில் போட்டுக் கொண்ட அதே நேரம் பார்த்திபனைப் பார்த்தான். சூழலில் மீறின கனிதுள்ளி காலம் குளிருறைந்து நின் றது. உறைபனிப் படர்விலிருந்து புதிதாய் ஓரிரு கரங்கள் எழுந்தன கைச் சோறுடன்.

பார்த்திபன் ஏக்கமாய், ''எனக்கூ'' என்ற போது அனிதா கவளத்தை நீட்டினாள்.

"ஆ" என்றான் பார்த்திபன்.

"திமிரப் பாரு" என்ற அனிதாவின் குரல் 'ஆசயப் பாரு!' என்ற தொனியை உள்ள டக்கி இருந்தது. அவளது வலது கையி லிருந்து தனது வலது கைக்கு கவளத்தை வாங்கி வாய்க்குள் போட்டுக் கொண்டான்.

"கேர்ள்ஸ் ரூம்ல பையன்க சாப்பிடறாங் களாமா?" என்றொரு பூதம் நாளை உலவி வரலாம். கையில் பிரம்புடன் வந்தாலும் வரலாம்.

அறைக்கு வெளியே பக்கெட்டில் தண்ணீர் இருந்தது. மூன்று படிக்கட்டுகளில் அது மேலானதான படிக்கட்டில் இருந்தது. கழுவும் பாத்திரங்களை படிக்கட்டுகளில் குப்புறவும் மல்லாக்காகவும் வைத்தார்கள் பெண்கள்.

பக்கெட்டில் எவர்சில்வர் டம்ளர் ஒன்று முக்குளித்துக் கொண்டும் நீந்திக் கொண்டும் இருந்தது. சில மாணவிகள் ஒரே டம்ளரில் முழு டிபன் பாக்ஸைக் கழுவி முடித்தார்கள். நினைத்தால் ஒரு டம்ளரில் உலகையே கழுவிவிடலாம். டிஃபன் பாக்ஸை மூடிய பின் அதைச் சுற்றி ஒரு டம்ளர் நீர்பெய் தார்கள். அது பாலீஷ் போல.

பார்த்திபனுக்கும் மோகனுக்கும் கை அலம்ப வேண்டியிருந்தது. கை அலம்புகிற வேலையை மிச்சப்படுத்துகிற மாதிரியான ஒரு சாப்பாட்டு முறையைக் கடைப் பிடித் திருக்கலாம். 'ஆ...ங்' ஸ்பூனெல்லாம் எதற்கு இருக்கிறது. படிக்கட்டிலிருந்து சத்தமாக ஜோதி, ''கையைக் கழுவுங்கப்பா'' எனக் கத்தினாள். கூவாதே கொல்லிமலைக் குயிலே, ''தண்ணி ஒரு டம்ளர் எடுத்துக்குடு''

வைரம் வருமா?

பிரிட்டிஷ் மகாராணியின் தலையில் சூட்டப்பட்டுள்ள கிரீடத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் வைரம் இந்திய மண்ணுக்குச் சொந்தமானது. விலை மதிப்பில்லாத, கோகினூர் வைரமான அதனை, உடனடியாக பிரிட்டிஷ் அரசு, இந்திய அரசிடம் ஒப்படைப்பதுதான் நியாயம்; அப்படி ஒப்படைப்பதுடன், தங்களுக்குச் சொந்தமில்லாத ஒரு பொருளை, இத்தனை வருடங்கள் வைத்திருந்ததற்காக, பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர், இந்திய அரசிடம் தமது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் பல்லாண்டுகளாக எழுப்பப்பட்டு வந்துள்ளது.



இந்தியாவில், மகாராஜா ரஞ்சித் சிங்கிற்குச் சொந்தமான அந்த கோகினூர் வைரம், மகாராஜாவுக்குக் கிடைத்த விதம் சுவையானது. அவர் கையைவிட்டு நழுவி, பிரிட்டிஷ் மகாராணியின் கிரீடத்துக்குப் போன கதையும் சுவாரசியமானது.

டெல்லியை ஆண்ட மன்னர்களின் சிம்மாசனத்தில் பதிக்கப்பட்டு இருந்ததுதான் இந்த கோகினூர் வைரம். நாதர்ஷா என்ற மன்னனின் படையெடுப்பின்போது, கைப்பற்றப்பட்ட இந்த வைரம், காபூலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. காபூல் மன்னரை போரில் வென்ற மகாராஜா இந்த வைரத்தைக் கைப்பற்றி, இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். மகாராஜா ரஞ்சித் சிங்கை தோற்கடித்துவிட்டு, அவர் வசமிருந்த வைரத்தைக் கைப்பற்றினார்கள் பிரிட்டிஷ்காரர்கள்.

அப்போது, இந்தியாவின் வைசிராயாக இருந்த டல்ஹவுசி பிரபு பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில், இந்திய மன்னர்கள் பலரையும், பிரிட்டிஷார் வென்று, அவர்களது நாடுகளைக் கைப்பற்றி இருக்கலாம். ஆனால், நாம் அடைந்த வெற்றியின் அடையாளமாக, விலை மதிப்பில்லாத கோகினூர் வைரத்தை பிரிட்டிஷ் மகாராணி தனது கிரீடத்தில் பொருத்திக் கொண்டால்தான் நம் வெற்றி முழுமையடைந்ததாகக் கொள்ள முடியும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

விக்டோரியா மகாராணி, கோகினூர் வைரத்தைச் சூட்டிக் கொள்ள ஒப்புதல் அளித்தார். அதன்படி, கோகினூர் வைரம், பிரிட்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்திய மண்ணுக்குச் சொந்தமான அந்த வைரம், பிரிட்டிஷ் மண்ணுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நாள் 1850 ஜூன் 29.

ஒரு பிரம்மாண்டமான விழாவில் கோகினூர் வைரத்தை பிரிட்டிஷ் மகாராணியின் கிரீடத்தில் பொருத்தினார்கள். ''இக்கணத்திலிருந்துதான் நீங்கள் உண்மையில் இந்தியாவுக்கும் மகாராணி'' என்று டல்ஹவுசி பிரபு பெருமையுடன் குறிப்பிட்டார்.

இங்கிருந்து போன கோகினூர் வைரம் இந்தியாவுக்கு வருமா? எப்போது? என்பதெல்லாம் விடைதெரியாமல் தொடர்ந்து கேட்கப்படும் கேள்விகள்!

– மானஸா

என்றான் மோகன். கதவுக்கு உள்ளே நின்று மறைந்திருந்து படிக்கட்டில் கை கழுவிக் கொள்ளுதல் அவனது திட்டம். சாப்பிட்டு முடித்தபின் எச்சரிக்கை உணர்வு தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. சாதாரண சாப்பாடா அது? வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குக் கையின் ஆண் தன்மை தெரியாமலிருக்கும் பொருட்டு வளையல் மாட்டிக் கொண்டாலும் வியப்பேதும் இல்லை. தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்த ஜோதி, "நீங்க ஸ்டீவரைக் பண்ணி, பத்தி எரிஞ்சது... பயந்தான்ஸ்" என்றான். டம்ளரைக் கொண்டு வந்து எட்டி நின்று கையலம்பினான். பிறகு குனிந்து பக்கெட்டில் ஒரு டம்ளர் நீரெடுத்தான். அது பார்த்திபனுக்காக. குனிந்து நீரள்ளும் அவனது தோற்றம் நூறு மீட்டர் பந்தயத்துக்கு ஓடும் வீரனின் துவக்க நிலை போல இருந்தது. தண்ணீரை எடுத்து வந்து பார்த்திபனிடம் கொடுத்தான். பார்த்திபன் கையலம்புவதற்குக் கதவருகே வந்தான். கதவுக்கு வெளியே அவனது கை மணிக்கட்டும் உள்ளங்கைப் புறங்கையும் டம்ளரும் தெரிந்து கொண்டிருந்தன. அந்த அறையின் கதவுக்கு முன்னால் நடந்து போகிற யாரும் எளிதாகப் பார்த்திபனைப் பார்த்து விட முடியும்.

பார்த்திபனின் கையிலிருந்து கடைசித் துளிகள் சொட்டிக் கொண்டிருந்தன. கையை உதறினான். கடுகுக்கும் சிறிதான நீர்த் துளிகள் காற்றில் நீந்தின. அதில் ஒரு சிறு துளி உள்ளே புதிதாய் நுழைந்து கொண்டிருந்த முகத்தில் பட்டது. பச்சை நிறமுள்ள கைக் குட்டையால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு பெண்கள் கோடவுனுக்குள் நுழைந்தது- காந்தாமணி டீச்சர்.

(தொடரும்)


• மிர் விண்கலம்

மீருக்குப் போறேன்!

"கோடை விடுமுறைக்கு... எங்கே டூர்..? கொடைக்கானலா? ஊட்டியா?" இதெல்லாம் சாமானியனுக்கான கேள்வி! கொஞ்சம் 'டப்'புள்ள பார்ட்டிகளிடம் என்ன இமயமலைச் சாரல் பக்கம் ஏதும் டூர் போனீங்களா? என கேட்கலாம். ஆனால் அதையும் தாண்டி... இன்று சிலர் ஆசைப்படுவது சாமானியனுக்கு எட்டாத இடத்தை! உண்மைதாங்க இன்னைக்கா... நாளைக்கா.. என்று தனது வாழ்நாளை எண்ணிக் கொண்டிருக்கும் மிர் விண்கலத்துக்கு... அதன் உயிர் போகும் முன்பு ஒரு முறையாவதுபோய் வந்துவிட வேண்டும் என்ற ஆசை வந்திருக்கிறது மனுஷனுக்கு!

இப்படி ஆசைப் பட்டவர் - டென்னிஸ் டிட்டோ! கலிபோர்னியாவில் வில்ஷெயர் அசோசியேட்ஸ் என்ற கம்பனி நடத்தி வரும் இவர், இப்போது சாகக் கிடக்கும் 'மிர்' விண்கலத்துக்கு 'ஆக்ஸிஜன்' ஏற்றிக் கொண்டிருக்கும் 'மிர் கார்ப்' என்ற ஹாலந்து நிறுவனத்துடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த டூருக்கு பல லட்சம் டாலரைச் செலவிடவும் தயாராய் இருப்பதாய் சொல்கிறார் மனுஷர்!

"20 மில்லியன் டாலர் செலவாகும்! புரிஞ்சுதான் சொல்லுறீங்களா?" என்ற 'மிர் கார்ப்' பின் கேள்விக்கு, டிட்டோ கடுப்பாகி விரைத்துக் கொள்ளாதது தான் பாக்கி! அந்த அளவு வேகம்.

பதினான்கு சொச்சம் வயசான இந்த மிர் விண்கலத்துக்கு டிட்டோ திட்டமிடும் பயணத்துக்கு முன்பே... இன்னொரு முயற்சி நடக்க உள்ளது - எப்படியாவது இந்த விண்கலத்தைத் தேத்திவிட முடியாதா என்ற இறுதி சோதனைகள். நவம்பரில் ஒரு குழுவை அனுப்பி வைக்க உத்தேசமாகத் திட்டமிட்டுள்ளார்கள். கடந்த எட்டு மாதமாகவே மனித துணையில்லாமல் ஒண்டிக் கட்டையாய் ஓடிக் கொண்டிருக்கும் 'மிர்'க்கு இன்றைய நிலையிலேயேகூட சோறு... ஸாரி.. ஆக்ஸிஜன் ஊட்டிக் கொண்டிருப்பது ரஷ்ய அரசல்ல. தனி நபர்களின் முயற்சி தான். கடந்த இரண்டு மாதமாக 'மிர்'க்கு மருத்துவம் பார்க்கப்போய் படாதபாடுபட்டு சலித்துப் போன இரண்டு விண் வெளிவீரர்கள்கூட பூமிக்குத் திரும்பியது கடந்த வாரத்தில்தான். இப்படியான எல்லாவிஷயங்களையும் தெரிந்து கொண்டு... டிட்டோ சொல்வதுதான் இன்னும் ஆச்சரியம் அளிக்கிறது.

வரும் ஜூலையில் மிர் கார்ப்- ஏற்கனவே 'மிர்'க்கு நிதியுதவி செய்துவரும் தனியார் அமைப்பு - ஆளில்லாத ஒரு 'ஆட்டோ'வை ரோபோக்கள் மூலம் இயக்கி - 'மிர்'க்கு மீண்டும் முழு உயிர் ஊட்ட முடியுமா என்று சோதிக்க உள்ளதாம்.

'மிர்'ரைத் தொட்டுவிட துடிக்கும் டிட்டோவும்கூட மன் ஏஜ் பையனில்லை. மிர்க்கு இணையாக ஆட்டம் காணும் வயசு! அதாவது 59 வயது. இந்த வயசில் விண்வெளி பயணம், அதன் வித்தியாசமான சவால்கள் என எல்லாவற்றையும் சமாளிக்கும் சக்தி அவரிடம் உள்ளதா என்ற சோதனையைத் தொடங்கினால்... இன்றைய

நிலையில் அவர் 'பாஸ்' செய்திருப்பது பாதி டெஸ்ட்டைத்தான். மீதி பாக்கியுள்ள நிலையில் முயற்சி மட்டும் முன்னேற்றப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது.

டிட்டோவிடம் இன்னொரு கேள்வியும் கேட்கப்பட்டிருக்கிறது. "1997லேயே ஆக்ஸிடெண்டுல காலியாகியிருக்க வேண்டிய சமாசாரம் மிர். அதுல போய் டூர் ஏன்?" என்றால்... "ம்... அதெல்லாம் உண்மைதான்! ஆனா இன்றைய கிரக நிலைப்படி கோள்களின் சுற்றுப்பாதைப்படி... என்னோட பயணத்துக்கு எந்தவித ஆபத்தும் வராது.. அந்த சூழ்நிலையைத் தாண்டி மிர் ரொம்ப தூரம் வந்துடுச்சு" என்கிறார் டிட்டோ.

"நிறைய சிக்கலும்... செலவும் பிடித்த டூர் திட்டத்துக்கு டிட்டோவின் நோக்கம்தான் என்ன?"

"நோக்கம்னு எதுவுமில்லை! நான் அந்தக் காலத்துல விண்வெளியில பறந்தவன். இன்னுமொருமுறை அப்படிப் பறக்கணும்னு தோணுது. அது சும்மாவாச்சும் பறக்கற மாதிரியில்லாம... ரஷ்யாவோட முதல் விண்வெளி சாதனையான மிர்க்குப் போய் வருவோமேன்றது தான்" என்கிறார்.

தொகுப்பு : 'நிலமுரசு'



கிருஷ்ணர் கையில் கோக்!

பழைய பாட்டுகளை, விறுவிறுப்பாக மேற்கத்திய பீட்களுக்கு ஏற்ப மாற்றி, பழைய குரல்களுக்குப் பதிலாக, புதுப் பாடகர்களைப் பாடவைத்து, கேஸட், சி.டி. வெளியிடுவது இப்போது பேஷனாகி இருக்கிறது. அந்த முயற்சியைத் தமிழில் செய்திருப்பவர் இசையமைப்பாளர் ஆதித்தியன்.

கிருஷ்ணா முகுந்தா முராரேவில் தொடங்கி, எம்.ஜி.ஆர். படப்பாட்டுகள் உட்பட இருபத்திரண்டு பாடல்களை ரீமிக்ஸ் செய்து, இரண்டு ஆல்பங்கள் வெளியிட்டிருக்கிறது அக்சார்செம் பெயிண்ட் கம்பெனி.

"பெயிண்ட்டுக்கும், இசைக்கும் என்ன சம்பந்தம்?"

"பெயிண்ட் என்றாலே வண்ணம். மகிழ்ச்சி. இசையும் அதைத்தானே செய்கிறது" என்கிறார் அக்சார்செம் நிறுவனத்தின் கிருபாகர்மூர்த்தி.

"எத்தனையோ பழைய பாடல்கள் இருக்க, இந்த இருபத்திரண்டை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?"


"ரீமிக்ஸ் செய்ய ஏற்றதாய், வேகமான தாளத்துக்குப் பொருத்தமாய் இருப்பவைகளாகத் தேர்ந்தெடுத்தேன்" என்கிறார் இசையமைப்பாளர் ஆதித்யன்.

இரண்டு ஆல்பங்களுக்கும், விளம்பரம் செய்ய உதவியாய், இரண்டு பாடல்களுக்கு மியூசிக் வீடியோ எடுத்திருக்கிறார்கள். காட்சிகளை இயக்கியிருப்பவர் பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர், ராம்குமார். இவரது குறும்படமான வானவில் தேசிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட படம்.

கிருஷ்ணா முகுந்தா முராரே பாடல் காட்சியில் பழைமைக்குச் சற்றும் பொருத்தமில்லாத உடையில் பாடகர்கள், இசைக் கலைஞர்கள் தோன்றுகிறார்கள். கூலிங் கிளாஸ், கையில் புல்லாங்குழல் ப்ளஸ் கோக் சகிதம் குட்டி கிருஷ்ணர். ஜீரணிக்கக் கஷ்டமாக உள்ளது. ஜீரணத்துக்காகத்தான் கிருஷ்ணர் கையில் கோக் கொடுத்திருக்கிறார்களோ!

— சி.எம்.





சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது

இரண்டு பாகங்கள் – ரூ.500/-

1304 பக்கங்களில் வியாச பாரதத்தின் சுருக்கம்; 18 பர்வங்களில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள்; பாரதக் கதை நடந்திருக்கக் கூடும் என்பதற்கான வழக்கறிஞர் சோவின் ஆணித்தரமான வாதம்; பாரதப் போர் நடந்தபோது தர்மரின் வயது 72, பீமனின் வயது 71, அர்ஜுனனின் வயது 71; மேலும் போரில் ஈடுபட்ட படை பலங்களின் துல்லியமான எண்ணிக்கை – போன்ற பலரும் கேட்டிராத நுணுக்கமான அரிய தகவல்களுடன் – பாரத நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும் விமரிசித்துள்ள விதம் புதுமையானது.

எங்கே பிராமணன்? — **சோ** — **ரூ.85/-**

பூணூல் போடுவதன் நோக்கம் என்ன? திருமணச் சடங்கின்போது சொல்லப்படும் மந்திரங்களுக்கு என்ன அர்த்தம்? வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸ்மிருதிகள், புராண இதிகாசங்கள் – இவற்றில் சொல்லப்பட்டுள்ள மிகப் பெரிய தத்துவங்களை விளக்கி, யார் உண்மையான பிராமணன் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

நவக்கிரக தலயாத்திரை — **சுப்பா நாயுடு** — **ரூ. 60/-**

நவக்கிரகத் தலங்களுக்குச் செல்லும் வழித் தடங்கள், செல்ல ஏற்ற காலங்கள், தல வரலாறு, தல அமைப்பு, பொது வழிபாட்டு முறை, செய்ய வேண்டிய சிறப்பு வழிபாடு, ஆலயங்களில் நாம் கவனித்துப் பார்க்க வேண்டியவை, தல விழாக்கள், தங்கும் வசதி, சுற்றுப்புற இடங்கள், வழிபாட்டுக் கட்டணங்கள், தோஷப் பரிகார வழிபாடு, நோய்க்கேற்ற பூஜைகள், தலயாத்திரை முறை, செவ்வாய் தோஷம் – பரிகாரம், நவக்கிரகக் கோலங்கள், கோளறு பதிகம் – இப்படி அனைத்தையும் ஒரே புத்தகத்தில் விளக்கியுள்ளார். மிகவும் உபயோகமான புத்தகம்.

விபூதி ருத்ராட்சம் மகிமை — **பி.என். பரசுராமன்** — **ரூ.32/-**

ருத்ராட்சத்தின் பெருமை, வரலாறு, ருத்ராட்ச வகைகள், முகங்களின் விவரங்கள், எப்படி வாங்குவது? அணிய வேண்டிய முறைகள், ருத்ராட்சம் பற்றிய புராணக் கதைகள், ருத்ராட்ச வைத்தியம் – விபூதியின் மகிமை, விபூதியைப் பற்றிய புராணச் செய்திகள், கையினால் விபூதியை இட்டுக் கொள்வது எப்படி, விபூதி அணியும் காலம், விபூதி செய்முறை விதிகள், வியாதிகள் தீர திருநீற்றுப் பதிகம் – விபூதி ருத்ராட்சம் பற்றிய இன்னும் ஏராளமான தகவல்களைக் கொண்ட புத்தகம்.

டாக்டர் சொல்கிறார் — **Dr. S. ஜகதீசன், M.B.B.S.,** — **ரூ.90/-**

நமது உடலில் உள்ள ஒவ்வொரு அவயவத்தின் இயக்கம், ஏற்படக்கூடிய நோய்கள், அறிகுறிகள், பொதுவாகச் செய்யக் கூடிய வைத்திய முறைகள், தடுக்கும் முறைகள் ஆகியவற்றை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் – ஏராளமான படங்களுடன் விளக்கியுள்ளார். அதிக பக்கங்கள் – குறைவான விலையில்.

நீரிழிவு நோயில் கால் பராமரிப்பு — **Dr. G. சிவகுமார், M.S.FICS.,FAIS.,** — **ரூ.35/-**

நீரிழிவு நோயின் காரணமாகக் காலில் ஏற்படும் மாற்றங்கள், புண் ஆறும் விதம், காலில் நுழையும் நுண் கிருமிகள், நுண்கிருமிகளை அழிக்கும் ஆண்டிபயாடிக்ஸ், நடக்கும் முறையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள், நீரிழிவினால் காலில் ஏற்படும் நோயின் அறிகுறிகள், சிகிச்சை முறைகள், கால் விரல்களை அகற்றுதல், ரத்த நாளங்களில் செய்யப்படும் அறுவை சிகிச்சை, நோய் முற்றிய நிலையில் காலை அகற்றும் சிகிச்சை ஆகியவற்றை ஏராளமான படங்களுடன் விளக்கியுள்ளார். உங்கள் காலைப் பாதுகாக்க இப் புத்தகம் மிகவும் அவசியம். மருத்துவ வல்லுனர்களே மிகவும் புகழ்ந்து பாராட்டுகின்றனர்.

முக லட்சண சாஸ்திரம் — **சுவாமி** — **ரூ.40/-**

ஒருவரது தோற்றத்தைக் கொண்டு உள்ளத்தை ஆராய்ந்து குணங்களைக் கூறுவது தனித்தன்மை வாய்ந்த ஒரு கலை. இப்படி தலையிலிருந்து தொடங்கி கழுத்து வரை அமைந்துள்ள அங்கங்களின் தோற்றத்திற்கு முகலட்சண சாஸ்திரப்படி விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. சுவாரஸ்யமான ஒரு வித்தியாசமான புத்தகம்.


● வி.பி.பி. உண்டு ● தபால் செலவு தனி ● விவரமான இலவச விலைப் பட்டியல் பெற எழுதுங்கள்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டை நெருங்கும் முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

244, ராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.

✆ 494 13 14



வீடு

குருதேவ்

சிவன் கோயிலில் தீப ஆராதனையின் போது, சந்நிதியில் சாமிநாதனைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை.

கற்பூர ஒளியைக் கண்களில் ஒற்றிக் கொண்ட பிறகு, குருக்கள் தந்த விபூதியைக் கையில் வாங்கி நெற்றியில் தீட்டிக் கொண்டார்.

"வந்த காரியம் முடிந்ததா?"

குருக்களின் கேள்வியில் பயம் சற்றே தெரிந்தது. எங்கே கோபித்துக் கொண்டுவிடப் போகிறாரோ என்ற பயம்.

"ம்"

வெளியே வந்தார் சாமிநாதன். சரிகைக் கரைப் புது வேட்டி. தோளில் வழிந்த மேல் துண்டு.

வெயில் மெதுவாக ஏறிக் கொண்டிருந்தது. எதிரே பார்த்தார்.

சிதிலமாகிப் போயிருந்த மதில் சுவர்கள் நாலாபுறமும் சூழ்ந்திருக்க, வெறும் கட்டாந் தரை தெரிந்தது. உதிர்ந்த காரையும், பொடிச் செங்கற்களுமாகத் தரையில் ஆங்காங்கே சிதறியிருந்தன.

கோயிலை அடுத்த வீடுதான். அதனால் காலில் செருப்புக் கூட அணியவில்லை.

வீட்டுக்குள் நுழைந்தவர், மறுபடி நின்று எதிரே கட்டாந்தரையைப் பார்த்தார். தூரத்தே, குளத்தில் குளிப்பாட்டி விட்டு, யானையை மெதுவாக நடத்திக் கூட்டிக் கொண்டு அச்சுதன் வருவது தெரிந்தது.

அதன் கம்பீரமான நடையையே மெய் மறந்து பார்த்துக் கொண்டிருந்தார் சாமிநாதன். யானையின் கழுத்தில் இருந்த மணி, அதன் ஒவ்வொரு கழுத்து அசைவுக்கும், அளவான இடைவெளியில் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது.

யானை, கோயில் யானை. அவர் வாங்கிக் கொடுத்ததுதான். அச்சுதன்

அவரைத் தாண்டிப் போகையில் அவருக்கு மரியாதை நிமித்தம் ஒரு கும்பிடு போட்டான்.

கோயிலைத் தொட்டாற்போலிருந்த புத்தம் புதிய தேர் அருகே யானையைச் சங்கிலியால் தூணோடு பிணைக்கும் வரை அதன் கம்பீரத்தை வெகுவாக ரசிக்கிற மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார். பிறகே உள்ளே நுழைந்தார்.

காரியஸ்தர் உள்ளே நுழைந்து, கோயில் திருவிழாவுக்கு யார் யாரெல்லாம் எவ்வளவு நிதி கொடுத்தார்கள் என்பதை, நடுநடுவே மூச்சு விட்டு, ஒரு பட்டியல் போலப் படித்தார். பம்பாய், தில்லி, தவிர சில அமெரிக்க நகரங்களின் பெயர்களும் அதில் இருந்தன.

"மேனன் சார், லிஸ்ட் இருக்கட்டும். செலவுக்கு மீதிப் பணம் இருக்கிறதா, இல்லை நான் தரட்டுமா?"

"கோயில் செலவுக்கா? ஸாமி, இதுவே தாராளம்!"

"டொனேஷன் தந்தவர்களுக்கெல்லாம் ரசீது அனுப்பி விட்டீர்களா?"

"ரசீது போட்டு வைத்து விட்டேன். போஸ்ட் பண்ண வேண்டியதுதான்!"


"நான் இன்றைக்கு ஊருக்குப் புறப்படலாம் என்றிருக்கிறேன்..."

"வந்த வேலை முடிந்ததா?"

வந்தது கோயிலின் வருடாந்தரத் திருவிழாவுக்கும், தேருக்கும். ஆனால் இந்தத் தடவை மட்டும், அவற்றோடு அவர் வந்த வேலை முடியவில்லை. வேறு ஒன்று பாக்கி இருந்தது. பலரின் வேண்டுகோளை முற்ற முழுக்க நிராகரித்து, அந்த வேலையை முடித்தார்.

சாமிநாதன் மேனனைப் பார்த்தபோது, அவர் வாயில் ஒரு சிறு புன்னகை தெரிந்தது. கண்களில் கூட அது பிரதிபலித்தது. அதில் ஆணவமோ, குறும்போ எதுவோ ஒன்று வெளிப்படையாகத் தெரிந்தது.

"ஆமாம், வந்த வேலை முடிந்தது!" என்றார் சாமிநாதன் அழுத்தம் திருத்தமாக.



குருக்கள் கேட்ட கேள்வியைத்தான் மேனனும் கேட்கிறார்.

ஒரே ஓர் அட்சரத்தில் குருக்களிடம், 'ம்' என்று சொன்ன மாதிரி, மேனனிடம் சொல்லிவிட முடியாது.

உள்ளேயிருந்து காப்பி டபராவும் தம்ளருமாக வந்த சாமிநாதனின் மனைவி லலிதா, அங்கே இருந்த நீண்ட பெஞ்ச் ஒன்றில் வைத்து விட்டு, நிற்பதா போவதா என்று நகர்கிற தோரணையில் நின்றாள்.

"என்ன?"

"காப்பி மேனனுக்கு. உங்களுக்கும் போடணுமா?" என்றவள், மேனன் பக்கம் திரும்பி, "எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றாள்.

அவள் தயங்கி நின்றதன் காரணம், அவர் மேற்கொண்டு எதுவும் சொல்லப் போகிறாரோ என்பதைக் கேட்கவே.

"இலையைப் போடு. நான் சாப்பிட்டு விட்டுப் படுத்துத் தூங்கப் போகிறேன்! மேனன், நீங்கள் சாயந்தரம் வந்தால் போதும். சங்கரன் கார் கொண்டு வரேன் என்று சொல்லியிருக்கிறான். எட்டு மணிக்குத்தான் எனக்கு ரயில்!"

மேனன் கூடவே வெளியே வந்த போது, மறுபடி எதிரே தெரிந்த கட்டாந்தரையை நோக்கினார். மதில் சுவரின் உடைந்த பகுதி வழியாக ஒரு சின்னக் கன்றுக்குட்டி உள்ளே நுழைவதை, பணியாள் கிருஷ்ணன் தடுத்து, விரட்டுவதை வேடிக்கை பார்த்துவிட்டு, ஒரு புன்னகையுடன் வீட்டுக்குள் நுழைந்தார் சாமிநாதன்.

"இந்த போலீஸ் ஸ்டேஷன்ல எல்லாரும் 'மாமூல்' வருமானத்தை மலைபோல் நம்பிக்கிட்டிருக்காங்க..."

"எப்படிச் சொல்றே?"

" 'கேடி வாழ்ந்தால் கோடி நன்மை'ன்னு போர்டு எழுதி வெச்சிருக்காங்களே!"

– சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

முன்னாலேயே ஒரு துளசி மாடம். நுழைந்தவுடன் விசாலமான திண்ணை. வலமும், இடமுமாக பத்துப் பேர் இந்தப் புறமும், பத்துப் பேர் அந்தப் புறமுமாகத் தாராளமாகப் படுத்துக் கொள்ளலாம். வழ வழவென்று ரெட் ஆக்ஸைடு பரவிய தரை.

நீளமும் அகலமுமாகப் பெரிய கூடம். வலப்புறத்தில் முதல் மாடிக்குப் போகப் படிக்கட்டுகள். மரப்படி கூட அல்ல. மொழு மொழுவென்ற சிமெண்ட் படிக்கட்டுகள். கூடத்தின் முடிவில் இடப்புறம் நீண்ட சதுர சமையல் அறை. எதிரேயே உக்கிராண அறை. சுவரில் ஐந்தடி உயரத்துக்குச் சிமெண்ட்டைப் பலகை மாதிரி அமைத்து, சுண்ணாம்பு பூசிய அலமாரி. சற்றே பெரிய சுவாமி அறை.


மாடி ஏறினால், கீழே இருக்கிற பரப்புக்கு, வலமும் இடமுமாகப் பெரிய பெரிய அறைகள். கோடியில் இரண்டு பக்கமும் 'டைப்' பொருத்திய பாத்ரூம்கள். அதையடுத்து இரண்டாம் மாடிக்குப் போக மரப்படிகள்.

இரண்டாம் மாடியில் இரண்டு அறைகள். ஏகமாகத் திறந்தவெளி.

துணிகள் உலர்த்த, நீண்ட கயிறுகள் கட்ட வசதியாக மதிலோடு ஒட்டிப் பூசப் பட்ட மூங்கில் கழிகள்.

கீழே சமையலறை தாண்டினால் குளியலறை. தாழ்வாகக் குழாய்ப் பொருத்திய பாத்திரம் தேய்க்கிற சிமெண்ட்டுச் சதுரம்.

பின்னால் பலா மரம். தரையிலிருந்தே பறித்து விடலாம் போல் குட்டைத் தென்னை மரம். நெடு நெடு என்று வளர்ந்து அந்த அழகான இரட்டை மாடி வீட்டுக்குச் சாமரம் வீசுவது போல், ஸ.... ஸ...ஸென்று ஒலியெழுப்பி ஓயும் உயர் தென்னை மரங்கள்.



செம்பருத்தியும், நந்தியாவட்டையும், சிவப்பும் வெள்ளையுமாக மாறுபட்ட வண்ணங்களைச் சொரிய, தோட்டத்தின் ஒரு பகுதி முழுதும் மாதுளையும் கொய்யாவுமாக மணத்துக் கொண்டிருந்த வீடு....

'வீட்டை இடிக்கப் போகிறேன்' என்று பிரகடனம் மாதிரி சாமிநாதன் அறிவித்த போது, முதலில் அதிர்ந்து தான் போனாள் லலிதா.

"அதுபாட்டுக்கு இருந்துட்டுப் போகட்டுமே!" என்றாள்.

"இருக்க வேண்டாம்னுதான் இடிக்கப் போறேன்!"

"மகேஷ் கலிபோர்னியாவிலேர்ந்து நிறைய சிநேகிதர்களோட வருவான். அப்போ உபயோகமா இருக்கும்."

"அவன் எப்பவாவது வருவான். அதுக்கு இந்த வீடே போறும்!"

மாலை மேனன் வந்தபோது, அவரிடம் சாமிநாதனின் எண்ணத்தை முதலில் சொன்னது லலிதாதான். அவருக்கு அதைக் கேட்டபோதே இடி விழுந்த மாதிரி இருந்தது.

சந்தியாவந்தனம் முடிந்து, ஈரக் கையைத் துண்டால துடைத்துக் கொண்டு வந்து நாற்காலியில் சாமிநாதன் உட்காரக் கூட இல்லை.

"ஸாமி செய்ய நினைக்கிறத கேட்டால் மயக்கம் வரது!"

"வரட்டுமே?" என்றார் சாமிநாதன். அதில் தெரிந்த அலட்சியம், அவர் முடிவை எடுத்து விட்டால், மாற்றிக் கொள்கிற எண்ணமே இல்லை என்பதைத் திட்ட வட்டமாகச் சொல்லியது.

"என் பாட்டாவோட பாட்டா, ராஜா மாதிரி வாழ்ந்த வீடு அந்த வீடு. அதுக்கப்புறம் என்னோட பாட்டாவோட அப்பா. அப்புறம் என்னோட பாட்டா. கூடத்து ஊஞ்சல்ல வீசி வீசி ஆடிண்டே, ஆளும் படையுமா, ஒரு ராஜ வாழ்க்கை வாழ்ந்தார். அதுக்கப்புறம் என் அப்பா. சங்கிலில கட்டாத யானை மாதிரி கம்பீரமா அவர் இந்த வீட்டுல மேலயும் கீழயும், வாசல்லயும் தோட்டத்துலயும் நடந்து நடந்து, அதிகாரம் பண்ணி வாழ்ந்த வீடு அது. அதை வாங்கறவன், அதே படிகள்ல ஏறி மாடிக்கு வந்து நடை போடறதையும், அதே கூடத்து ஊஞ்சல்ல வீசி வீசி ஆடறதையும் என்னால தாங்கிக்க முடியாது! மாசம் ஒரு தடவை மெட்ராஸ்ல இருந்து நான் இந்தக் கோயிலைத் தரிசனம் பண்ண வரபோது எதிரே இருக்கற என்னோட பரம்பரை வீட்டுல, பணம் குடுத்துட்டதுனாலேயே ஒருத்தன் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரனாகி, என் கண் முன்னாலேயே, ஊஞ்சல்ல கால் மேல் கால் போட்டுண்டு அதிகாரம் பண்றதை நிச்சயமா எனக்குப் பார்க்கச் சகிக்காது!"

அமைதி என்றால் அப்படி ஓர் அமைதி அங்கே. நிலவிய போது, கோயில் மணி ஒன்று மட்டுமே அதைக் கலைத்தது.

அப்புறம் மேனன் ஆட்களைக் கூட்டிக் கொண்டு வந்து, வீட்டை இடிக்க காண்ட்ராக்ட் தொகை பேசி முடித்து விட்டுப் புறப்பட்ட மறு நாளிலிருந்து, அந்த வீடு மெல்ல மெல்லக் கூரை இழந்து, சுவர் இழந்து, தரை இழந்து, மரம், செடி கொடிகள் எல்லாம் வெட்டிச் சாய்க்கப் பட்டு, பதினைந்தே நாளில் வெறும் கட்டாந் தரையாக, சிதிலமான மதில் சுவர்களுடன், வெறுமையாய்ப் போயிற்று.

இடத்தை வாங்க யாராவது விசாரித்தால் தமக்குத் தெரிவிக்கும்படி, ஒரு துளி கூட உணர்ச்சிவசப்படாமல், சாமிநாதன் மேனனிடம், புறப்படும்போது சொல்லிக் கொண்டிருந்தார். ⭘



துறவைத் துறந்தவர்!

தியாகத்தில் பெரிய தியாகம் எது என்று கேட்டால், குழந்தையை சந்நியாசாசிரமத்துக்கு அனுப்பி வைக்கும் தாயின் தியாகம் என்று பலர் சொல்லக்கூடும். ஆனால் அதனினும் பெரிய தியாகம் உண்டு என்றால் அது சன்னியாசம் மேற்கொண்டு, ஏழரை ஆண்டுகள் துறவியாக வாழ்ந்த ஒருவர், தாயின் சொல்லுக்குப் பணிந்து சம்சார' வாழ்க்கைக்குத் திரும்புவதாகத்தான் இருக்க முடியும்.

அவ்வாறு திரும்பியவர் லால்குடி கோபாலய்யர்- உலகப் புகழ் பெற்றுவிட்ட வயலின் கலைஞர் லால்குடி ஜயராமனின் அப்பா. சத்குரு தியாகராஜரின் நேர் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த வாலாடி ராதாகிருஷ்ண அய்யரின் இரண்டாவது மகனாய்ப் பிறந்து, எட்டாவது வயதில் தந்தையை இழந்தவர். ஞானமார்க்கத்தை நாடி சத்குரு ஞானபோதானந்தாவின் சீடராய் 15 முதல் 22 வயது வரை வாழ்ந்தார் கோபாலய்யர். அவர் துறவைத் துறந்ததன் விளைவுதான் ஆல் போல் இன்று தழைத்து நிற்கும் லால்குடி கலைக் குடும்பம்.

அந்த கலைக் குடும்பம் ஒன்று கூடி கோபாலய்யரின் நூற்றாண்டைக் கடந்த 18.6.2000 அன்று சென்னை கிருஷ்ணகான சபாவில் கொண்டாடியது. லால்குடி அறக்கட்டளை நடத்திய விழா நிகழ்ச்சிகளில் லால்குடி சிஷ்ய குடும்பமும் ரசிகர் குடும்பமும் முழு அளவில் பங்கேற்று அஞ்சலி செலுத்தின.

குடும்ப வாழ்க்கைக்குத் திரும்பிய கோபாலய்யர் ஒரு சராசரி இல்லற வாழ்க்கை நடத்தி திருப்தியடைந்து விடவில்லை. பயிற்சியின்றியே குருவருளால் வயலின் வாசிக்கும் ஆற்றலும், புல்லாங்குழல், வீணை, கோட்டுவாத்தியம் என்று பல கருவிகளைக் கையாண்டு அவற்றைக் கற்றுத் தரும் ஆற்றலும் பெற்றிருக்கிறார். மகள் பத்மாவதிக்கு வீணையிலும் மகன் ஜயராமனுக்கு வயலினிலும் பயிற்சி அளித்ததோடு பல சிஷ்யர்களையும் உருவாக்கினார். மூன்று தலைமுறையினர் அவரிடம் இசைப் பயிற்சி பெற்றுள்ளனர்.


பாடல்களை இசையுடன் இயற்றும் வாக்கேயக்காரராகவும் கவிஞராகவும் கூட விளங்கியிருக்கிறார் கோபாலய்யர். வேதாந்த பாடல்கள், கச்சேரிப் பாடல்கள், தேசபக்திப் பாடல்கள் என்று பல வகை கிருதிகளையும் வெண்பா, அந்தாதி என்று கடின இலக்கணத்துக்குள் அடங்கக் கூடிய அருந்தமிழ்க் கவிதைகளையும் படைத்துள்ளார். (லால்குடி விஜயலக்ஷ்மி குரலில், அவரது சில பாடல்களின் காஸெட், விழா மேடையில் வெளியிடப்பட்டது.)

கவித்திறனுடன் அழகுணர்ச்சியும் ஆராய்ச்சி மனப்பான்மையுமுடைய வராதலால் இசைக் கருவிகளை வீட்டிலே செய்ய வைத்தும், நவராத்திரிக்கு பொம்மை, தீபாவளிக்குப் பட்டாக என இல்லத்திலேயே தயாரித்த வித்தியாசமான மனிதராகவும் விளங்கியிருக்கிறார்.

இத்தனை பரிமாணங்களையுடைய ஒருவரைப் பற்றிப் பேச பலதுறை வல்லுனர்கள் வேண்டும் எனத் திட்டமிட்டுப் பேச்சாளர்களை அழைத்திருந்தார்கள் விழாவுக்கு.

லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் வரவேற்புச் சொல்ல, அசோக் லேலண்ட் எம்.டியும் கலைப் புரவலருமான சேஷசாயி தலைமைதாங்கினார்.

தாய்ச் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இல்லறத்துக்குத் திரும்பினாலும் கோபாலய்யர் மனத்தால் துறவியாகவே விளங்கியதைச் சுட்டிக் காட்டினார் சேஷசாயி.



• தந்தையும் மகனும்—

"ரகுவம்சத்தின் பல தலைமுறை சிறப்புதான் ஒரு ராமனை உருவாக்கித் தந்தது. எனவே குலப் பெருமை என்பது வெறும் வறட்டுப் பெருமையல்ல; அது தியாகத்தின், சீலத்தின், பண்பாட்டின் செழுமையான வரலாறு—இலட்சியத்தின் விளைநிலம்; அத்தகைய குலங்களுக்குச் சமுதாயம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது" என்றார். ரசிக சமுதாயத்துக்காக அருந்தொண்டாற்றி வரும் லால்குடி குலத்துக்கு ஆதரவு அளிக்க அழைப்பு விடுத்தார்.

வித்வான் டி.வி. கோபாலகிருஷ்ணன், தமது தம்பி கோபாலய்யரிடம் இசை பயின்ற அனுபவத்தைச் சொல்ல, செம்மங்குடி தமது நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள, கிருஷ்ண கான சபா செயலாளர் யக்ஞராமன் தாமறிந்த கோபாலய்யர் பற்றிப் பேச, பேராசிரியர் வ.வே.சு., கோபாலய்யரின் கவிதைகளை ஓர் அலகு அலசி முழங்க, அதன் பின் கோபாலய்யரின் சிஷ்யைகள் கோகிலா, அலமேலு, உமா தங்கள் அனுபவங்களைச் சொல்ல இறுதியாக உணர்ச்சி ததும்ப தந்தையை நினைவு கூர்ந்தார் லால்குடி ஜெயராமன்:

தந்தை பாட மகனும், மகன் பாட தந்தையும் வயலினைப் பக்கவாத்தியமாக வாசித்ததுண்டு; நூற்றுக்கணக்கானோர் கோபாலய்யரிடம் இசை பயின்று அதை ஜீவனோபாயமாக இன்று கொண்டுள்ளனர்.

சிஷ்யைகளுக்குக் கல்யாணமெனில் பெண்-மாப்பிள்ளை இருவர் பெயரும் வரக் கூடிய ஒரு பாடலைப் புனைந்து அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துவிடுவார். நலங்குப் பாட்டாக அதைப் பாடி மகிழ்ந்தார்கள் சிஷ்யைகள்!

வயலினைப் பக்கவாத்யமாக எப்படிக் கையாள்வது என்று மகனுக்குக் கட்டுரையே எழுதிக் கொடுத்து விட்டார். சுய விமர்சனம் செய்து கொள்ளவும் பழக்கினார்.

மகனைப் பிறர் புகழ்வதை அனுமதிக்காத கண்டிப்புக்காரர். புகழ்ச்சி, போதையைத் தந்து மனத்தை கலையிலிருந்தும் கடமையிலிருந்தும் திருப்பி விட்டுவிடும் என்று நம்பினார்.

இவ்வாறு அப்பாவின் இயல்புகளைப் பட்டியலிட்ட ஜயராமன், "அவரை எப்போதும் குரு ஸ்தானத்தில்தான் நான் பார்த்தேனேயொழிய அவர் அப்பா ஸ்தானத்தில் இருந்து நான் பார்த்ததேயில்லை" என்று சொன்னபோது, தந்தையைப் போலவே மகனும் தியாக வாழ்வு நடத்தியிருக்கிறார் என்பது புலனாயிற்று.

கோபாலய்யரின் தியாகமும் சரி, ஜயராமனின் தியாகமும் சரி அவர்களுடைய குடும்பத்துக்கு மட்டும் பலனும் பெருமையும் சேர்ப்பதோடு நின்று விடவில்லை. சேஷசாயி குறிப்பிட்டது போல், மிக முக்கியமான, அழகான, பொக்கிஷம் அந்தத் தியாகத்தில் புடம்போடப்பட்டு உருவாயிற்று - கர்நாடக இசைத்துறையிலும் ரசிகர்கள் மனங்களிலும் நீங்காத சிறப்பிடம் பெற்றுள்ள லால்குடி பாணி என்ற பொக்கிஷம்!

— ஸ்ருதி கீர்த்தி

"இத்தாலியைச் சேர்ந்த சோனியாகாந்தி, இந்தியாவின் பிரதமராக வரக்கூடாது என்று இந்தியாவில் எதிர்க்கிறார்கள். ஆனால், இந்தியரான மகேந்திரபால் சௌத்ரி, பிஜி நாட்டு பிரதமராகலாமா?" என்று சென்ற வருடம் தேர்தல் நடந்தபோது பிஜியில் எதிர்ப்பு. இதற்கு சௌத்ரி தரப்பில் தரப்பட்ட விளக்கம்: "இந்தியாவின் முன்னேற்றத்துக்கு இத்தாலியின் பங்களிப்பு ஒரு துரும்பும் இல்லை. ஆனால், பிஜியில் அப்படியில்லையே! இங்கே இந்தியர்களின் பங்கு என்ன என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும்! மகேந்திர சௌத்ரியின் வாதம் மக்கள் மத்தியில் எடுபட்டது. ஆட்சியைப் பிடித்தார் சௌத்ரி! ஆனால் மண்ணின் மைந்தர்கள் மறுபடி வெகுண்டு ஒடி அதிரடியாய் ஆட்சிக் கவிழ்ப்பு. இன்று சௌத்ரி உயிருடன் இருப்பதே பெரும் புண்ணியம்!

பிஜி தீவில் இந்தியர்கள் பிரதமர் ஆவதற்குத் தடை செய்யும் விதமாய் ஏற்கனவே ஒருதடவை, அந்நாட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. ஆனால், பின்னர், இந்த விஷயம் மறு ஆய்வு செய்யப்பட்டு, பழையபடி இந்தியர்கள் பிரதமர் ஆக வழி செய்யும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டது. இப்போது மறுபடி அதே பிரச்னை!

பிரச்னை

பிஜியில்தான் இப்படி என்று இல்லை. 1963ல் ஆப்ரிக்க நாடான கென்யா சுதந்தரமடைந்தது. உடனே, இந்தியர்கள் கென்யாவை விட்டு வெளியேற வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். 1972ல் இடிஅமீன் ஆட்சியைப் பிடித்தவுடன் இந்தியர்கள் உகாண்டாவை விட்டு வெளியேற தொண்ணூறு நாட்கள் கெடு வைத்தார். கயானா நாட்டில், திடீரென்று அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. பதவியில் இருந்த செட்டி ஜகன், வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். திரினிடாட் நாட்டில், மொத்த மக்கள் தொகையில் நாற்பத்து இரண்டு சதவீதம் இந்தியர்கள்தான். பிரதமர் பதவியில் இருந்த பாசுதியோ பாண்டே பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை.

பர்மாவிலிருந்து, போர் காலத்தில், இந்தியாவில் தஞ்சமடைந்த இந்தியர்கள் ஏராளமானவர்கள். இந்திய வம்சாவளியினரான தமிழர்கள், இலங்கையில் படும்பாடு உலகப் பிரசித்தம். தினம் தினம் அகதிகளாய்த் தமிழகத்துக்கு கள்ளத்தோணி ஏறி வரும் அவலம்.

இன்று உலகின் நூற்றுக்கு அதிகமான நாடுகளிலும் சுமார் இரண்டு கோடி இந்தியர்கள் வசித்து வருகிறார்கள். இவர்களில், பாதிக்கு மேலானவர்கள் அந்தந்த நாட்டுக் குடியுரிமை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி, இந்தியர்கள் எந்தெந்த நாட்டுக்குப் போனாலும் சரி, அங்கே அவர்களுக்குப் பிரச்னைதான்!

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியர்கள் பிழைப்புக்காக, அந்நிய நாடுகளில் குறிப்பாக பிரிட்டிஷ் காலனி நாடுகளுக்குச் செல்லத் துவங்கினார்கள். கும்பல் கும்பலாக, அந்த நாட்டுத் தேயிலைத் தோட்டங்களிலும், ரப்பர் எஸ்டேட்களிலும், தொழிற்சாலைகளிலும் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் பெரும்பாலும் பீகார், உத்திரப் பிரதேசம் மற்றும் தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்! மொழி தெரியாத தேசத்தில், பிழைப்புத் தேடிப் போன இந்தியர்கள் கடுமையாக உழைத்தார்கள்.

அந்தத் தலைமுறையினர், தமது பிள்ளைகளைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார்கள். இன்னும் பணம் சேமித்து, கூடுதலாக நிலம் வாங்கவோ, சிறு அளவில் வியாபாரம் செய்யவோ தொடங்கினார்கள்.

கடும் உழைப்பு காரணமாக, தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்



• இடிஅமீன்

மனிதர்கள்?

— பரிதவிக்கும் இந்தியர்கள்!

கொண்ட இந்திய பரம்பரையினர் அந்நாட்டு மண்ணின் மைந்தர்களைவிட, பொருளாதார ரீதியில் வளம் பெற்றிருந்தாலும், வெள்ளையர்களைப் பொறுத்தவரை தாழ்வாகவே மதிக்கப்பட்டனர். பிரிட்டிஷ் காலனிகளாக இருந்த நாடுகள் சுதந்தரம் அடைந்தவுடன், பிரட்டிஷார் வெளியேதிவிட, இந்தியர்கள், பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பலம் பொருந்தியவர்கள் ஆனார்கள். இந்தியாவின் பாரம்பரிய அம்சமான ஜாதி அங்கு வேறு ஒரு உருவில் இடம் பிடித்தது. தங்களைவிட வெள்ளையர்களை உயர்வாக மதித்த இந்தியர்கள், மண்ணின் மைந்தர்களை அவர்கள் கருப்பர் இனத்தவர்களானாலும் சரி, மற்றவர்கள் ஆனாலும் சரி, கீழ்த்தரமாகவே நடத்தினார்கள். கென்யாவுக்குச் சென்றிருந்த ஒரு இந்தியப் பெண் பத்திரிகையாளர் உள்ளூர் கறுப்பின பத்திரிகையாளர் ஒருவருடன், ஊர் சுற்றிப் பார்த்தார். அவர்களை, இந்திய வம்சாவளியினர் ஒரு மாதிரியாகப் பார்த்தார்களாம். "இங்கே, இந்தியப் பெண்கள் கறுப்பு இன ஆண்களுடன் பழகுவதை விரும்புவதில்லை" என்று அவர் விளக்கம் தந்திருக்கிறார். நைஜீரியாவில், கறுப்பு இன மக்களை, இந்திய பரம்பரையினர்கள் 'பினாக்கி' என்று கிண்டலாகத்தான் குறிப்பிடுவார்களாம். பிஜி தீவு மக்கள், இந்திய பரம்பரையினரை பிஜி குரங்குகள் என்று கேலி செய்வார்களாம்.

தவிர, இந்தியர்களுக்குள்ளேயும், மனப்பூர்வமான ஒற்றுமை இல்லை என்பது இன்னும் ஒரு காரணம். இந்திய பரம்பரையினர்களுக்குள்ளே நடக்கும் பனிப்போர் அரசியல் பற்றியும் குறிப்பிட்டே ஆக வேண்டும். பிஜி தீவில் சௌத்ரியை பதவியிறக்கம் செய்த ஸ்பைட்டுக்கு மறைமுகமாக ஆதரவு கொடுத்து ஊக்குவித்தவர் தொழிலதிபரான ஒரு பிஜி இந்தியர்தான் என்று ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன!



• இந்திய டிரைவரிடம் கொள்ளையடிக்கும் பிஜியினர்.

கென்யாவில், இந்தியர்கள் என்றால், ஒரு ஜோடி ஷூவுக்கு சொல்லும் விலையை, ஆப்ரிக்க இனத்தவர்களிடமிருந்து ஒரு ஷூவுக்கு வாங்கி விடுவார்களாம், இந்திய வியாபாரிகள்!

ஆக, ஆண்டான், அடிமை பேதத்தின் வெவ்வேறு உருவங்கள்தான் இந்தப் பிரச்னைகள்!

— மௌலி



* பூங்கா பள்ளிக் கட்டடம்



* பூனைக்குப் பயந்த சிறுத்தை

கள்ளக்குறிச்சி கோயில் திருவிழாவில் டிக்கெட் போட்டு, 'ஷோ' நடத்திக் கொண்டிருந்தவர்களிடமிருந்து சிங்கம், சிறுத்தை, கரடி உள்ளிட்ட இருபத்து இரண்டு விலங்குகளை மீட்டுள்ளனர் தமிழக வனத்துறையினர்.

மீட்கப்பட்ட விலங்குகளுக்கு அடைக்கலம் கொடுத்திருப்பவர்கள், சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினர். அந்த விலங்குகளை பார்த்து வரப் புறப்பட்டோம். அங்கு சென்றதும்தான் தெரிந்தது, மீட்கப்பட்ட விலங்குகளை, பூங்கா மருத்துவமனையில் வைத்திருக்கிறார்கள் என்று. பூங்கா இயக்குனர் கிருஷ்ணகுமாரைச் சந்தித்தோம்.

"அரசிடம் அனுமதி பெறாமல், யாரும், எந்த வனவிலங்குகளையும் வைத்துக் கொள்ள முடியாது. ஆனால் இத்தனை நாளும் அரசின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு 'ஷோ' நடத்தியவர்கள்தான் கள்ளக் குறிச்சி கோயில் திருவிழாவில் மாட்டிக் கொண்டார்கள். இந்த ஷோக்கள் மக்கள் ஆதரவுடன் நடப்பதுதான் வேதனை. விலங்குகளை வெறும் காட்சிப் பொருளாக மட்டுமே பார்ப்பதுதான் இதற்குக் காரணம்" என்றார்.

மருத்துவமனையில் இருந்த விலங்குகளை காட்டிட, நம்மை அழைத்துப் போனவர் அங்கிருந்த டாக்டர் பால் பிரெடெரிக்.

மிகப் பெரிய சிங்க வீட்டில் ஒரு ஆண் சிங்கம் சாதுவாய் நின்று கொண்டிருந்தது. கம்பீரமாய் உலவும் என சிறிது நேரம் காத்திருந்தோம். ஆனால் நடக்கிற மாதிரி தெரியவில்லை. "இந்த சிங்கத்திற்கு எட்டு வயது ஆகிறது. நடக்கத் தெரியாது. பிறந்தது முதல் அதன் உருவத்திற்கு ஏற்ற இரும்புக் கூண்டிலேயே வாழ்ந்து விட்டது. எனவே ஒரு அடி வைத்து நடக்க பயப்படுகிறது" என்று டாக்டர் சொன்னதும் நமக்கு ஆச்சர்யம். நிஜம் தானா?

என்று நாம் ஆச்சர்யப்பட்டதும் டாக்டர் ஒரு துண்டு மாட்டு இறைச்சியை சிங்க வீட்டின் மற்றொரு மூலையில் நின்று கொண்டு நீட்டினார். இரண்டடி நடந்த சிங்கம் தொபுக்கடீர் என்று கீழே விழுந்து, திரும்பவும் எழுந்து மறுபடி விழுந்து... வாத்து மாதிரி நடந்து வந்ததைப் பார்த்த நமக்கே சோகமாகி விட்டது. இந்த சிங்க ராஜாவுடன், அதன் மனைவி, இரண்டு வயதான மூன்று குட்டிகள் என்று ஒரு முழுக் குடும்பத்தையும் மீட்டு வந்திருக்கிறார்கள். இதைவிடப் பெரிய கொடுமை இந்த சிங்கங்களின் எல்லா பற்களையும் 'ஷோ' நடத்துபவர்கள் அடிக்கடி உடைத்து விடுவார்களாம். இவ்வாறு செய்தால் சிங்கங்கள் பரம சாதுவாய் மாறிவிடுமாம். மருத்துவமனையில் சுமார் ஆறு மாத காலம் சிகிச்சை அளித்த பின்பே, பூங்காவில் உள்ள, சிங்கம் உலவும் பகுதியில் இதை விட முடியுமாம். இங்கு வரும் எல்லா விலங்குகளுக்கும் முறையாக

நோய்த் தடுப்பு செய்து இந்தச் சூழலுக்குப் பழக்கி, பிறகே அவற்றுக்கென்று உருவாக்கப் பட்ட ஸ்பெஷல் 'குட்டி' காடுகளில் விடுகிறார்கள்.

விடுதலை!

அடுத்து நாம் பார்த்தது ஒற்றைக் கரடி யார். ஒரு நிலையில் நில்லாமல் இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டிருந்தார். ஏன் இப்படி ஆடுகிறார் 'போர்' அடிக்கிறதா என நாம் நகைச்சுவையாய் கேட்க... 'ஆமாம்' என்றார் டாக்டர்.


"கரடிகளுக்கும், யானைகளுக்கும் விரை வில் எரிச்சல் வந்து விடும். இதைப் போக்கிக் கொள்ள 'ஸ்டீரியோ டைப்பில்' உடம்பை இப்படியும் அப்படியும் ஆட்டிக் கொண்டே யிருக்கும் என்றவர், கரடியார் அருகில் சென்று டேய்... கருப்பா... இங்கே பாரு இங்கே பாரு, உன்னை போட்டோ எடுக்க வந்திருக்காங்க பாரு, பாரு" என்றார். அவ் வளவுதான் 'பர்ர்ர்' என்ற சத்தத்துடன் டாக்டரின் முகத் தில் துப்பி விட்டது. ஆனால் டாக்டர் கொஞ்சமும் கோபப்படாமல் பேசினார். "இந்தக் கரடியை வைத்திருந்தவர்கள் பதினைந்து கிலோ எடையுள்ள இரும்புச் சங்கிலியை இதன் மூக்கில் கோத்துப் போட்டு, ஒரு பூட்டால் பூட்டி யிருந்தார்கள். அதுதான் மனிதர்களைக் கண்டால் இப்படி அடிக்கடி துப்புகிறது" என்றார்.



• விக்டர்

கரடிக்குப் பக்கத்துக் கொட்டகையில் இரு செந்நிறப் பூனைகள். அதற்கு அடுத்த வீட்டில் ஒரு சிறுத்தை. இறைச்சி துண்டைக் கண்டதும் ஓடி வந்த சிறுத்தை, பக்கத்தி லிருந்து பூனைகளும் ஓடி வருவதைப் பார்த்து பயந்து நடுங்கி ஒளிந்து கொண்டது! "அழிந்துவரும் வனவிலங்குகளில் சிறுத்தைப் புலி முக்கியமானது. இந்தியக் காடுகளில் மருந்துக்கும் சிறுத்தைகள் கிடையாது" என்று நொந்து கொண்ட டாக்டரின் ஆதங்கம் புரிய, அங்கிருந்து நகர்ந்தோம்.

அடுத்த வீட்டில் நாம் கண்டது நான்கு குள்ள நரிகள். நம்மைக் கண்டதும் உச்சஸ் தாயியில் ஊளையிட்டன. டாக்டரின் அதட் டலுக்குப் பயந்து பணிந்த நரிகள் கம்பி ஓரமாக வந்து நம்மை மோப்பம் பிடித்தன. பிறகு வவ், வவ் என்று குரைத்ததும் நமக்கு ஆச்சர்யம். நரிகள் குரைக் குமா? மிருகங்களை வைத்து ஷோ நடத்தி யவர்கள் ஒரு வேட்டை நாயையும் வளர்த் தார்களாம். "அந்த நாய் குரைப்பதைக் கேட் டுக் கேட்டு இவையும் குரைக்க கற்றுக் கொண்டிருக்கின்றன! இதற்குச் சூழல்தான் காரணம்" என்று டாக்டர் சொல்ல, நமக்கும் உண்மை புரிந்தது. மீட்கப்பட்ட விலங்கு களில் கொஞ்சம் மகிழ்ச்சியாக விளையாடிக்



• சிங்கக் குட்டிகள்



• கிருஷ்ணகுமார்



• பால் பிரெட்ரிக்



• பாஸ்கர்

கொண்டிருந்தவை இரண்டு மலை அணில்கள்தான்.

மருத்துவமனையிலிருந்து புறப்பட்ட நம்மை சிங்கவால் குரங்குகள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார் வன உயிரியலாளர் பாஸ்கர். கழுத்தைச் சுற்றி வெள்ளை நிற சிங்கப் பிடரியும் கருநிற உடம்பும், சிங்க வாலும் நம்மை மயக்க அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது.

"இந்த இனம் கிட்டத்தட்ட அழிஞ்சுட்ட நிலையிலே, இங்கே மட்டும்தான் இதை இனவிருத்தி செய்து உலகம் முழுக்க இருக்கும் காப்பகங்களுக்கு அனுப்புகிறோம். இந்தக் குரங்குகளுக்குச் சர்வதேச எண் இருக்கு. நீங்க அமெரிக்காவில் உள்ள ஒரு மிருகக் காட்சி சாலைக்கு சென்று கேட்டாலும் இங்குள்ள குரங்கின் பெயர்; அதன் அப்பா, அம்மா, வயசு எல்லா விவரமும் கிடைக்கும். அந்த அளவுக்கு அரிய விலங்கினமாகப் போய் விட்டது" என்றவர், பாமா! மோகன்! என்று கூப்பிட்டார். உடன் காட்டுக்குள்ளிருந்து இரண்டு குரங்குகள் ஓடிவந்து நிற்க, இவர் மாத்திரை வடிவில் இரண்டு வைட்டமின் மிட்டாய்களைத் தூக்கி எறிந்தார். அவற்றை சரியாக 'காட்ச்' செய்து லபக்கின இரண்டும்.

பாஸ்கர் அடுத்து நம்மை அழைத்துச் சென்றது, சிம்பன்சி இருந்த இடத்திற்கு. அங்கு சென்றதும், "டேய் விக்டர் இங்க வா... என்று குரல் கொடுத்தார். ஆனால் சிம்பன்சி இருக்கும் சுவடே தெரியவில்லை. "அதோ டுன் டுன் வரா பாரு" என்றதும் திடீரென ஆஜரானது பத்து வயசு சிம்பன்சி ஒன்று. கல்கத்தா காட்சியகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட டுன்டுன் என்ற பெண் சிம்பன்சியை விக்டருக்கு இணை சேர்த்திருக்கிறார்கள். விக்டர் அதிக அன்பைப் பொழிந்து கொண்டே இருப்பதால் எரிச்சலடைந்த டுன்டுன், பெரும்பாலும் ஷெட்டுக்குள் சென்று ஒளிந்து கொள்ளுமாம்.

பாஸ்கர் சொல்வதைச் சரியாகக் கேட்டு, புரிந்து கொண்டு, சிரித்து, டாட்டா காட்டி, கைதட்டியும் காட்டிய சிம்பன்சி விக்டரிடமிருந்து விடைபெறும் நேரத்தில் அங்கே வந்து சேர்ந்தார் இயக்குனர் கிருஷ்ணகுமார்.

"இங்கு வருபவர்கள் பாலிதீன் பைகளை உணவுப் பொருட்களோடு, விலங்குகளிடம் தூக்கிப் போட்டு விடுகிறார்கள். பாலிதீன் பைகளோடு சாப்பிட்டுவிடும் விலங்குகள், செரிமானம் ஆகாமல் இறந்து விடுகின்றன. பாலிதீன் பைகள் போடுவதைத் தடுக்கவும் விலங்குகளின் 'மற்றொரு உலகத்தைப் பற்றி' எடுத்துச் சொல்லவும் தன்னார்வமாக வரும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்கள் விரும்பும் போது இங்கே பணி செய்ய 'ஸ்டூடண்ட் ஜூ கிளப்' தொடங்கியிருக்கிறோம். இதில் சேர்ந்தால் இரண்டு ஆண்டுகள் உறுப்பினராக இருக்க அனுமதிக்கிறோம். இந்த அரிய வாய்ப்பை ஆர்வத்துடன் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்" என்றவர், மற்றொரு புதிய தகவலையும் தெரிவித்தார்.

"விலங்குகளின் வாழ்க்கை, பராமரித்தல், இனவிருத்தி செய்தல் என விலங்குகளைப் பற்றிய முழுமையான கல்வி அளிக்கும் நோக்குடன் புதிதாக 'ஜூ ஸ்கூல்' தொடங்கியிருக்கிறோம். இந்தப் பள்ளியில் ஆசிரியர்கள், மாணவர்கள் என்று இதுவரை இரண்டாயிரம் பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்தியாவில் வேறெங்கும் இதுபோன்ற பள்ளி கிடையாது. எப்போது வேண்டுமானாலும் சேர்ந்து படிக்கலாம். இரண்டு மணி நேர கோர்ஸ் கூட உண்டு" என்றார்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய பூங்காவாகத் திகழும் அண்ணா உயிரியல் பூங்காக்களில் எண்பத்து எட்டு குட்டிக் காடுகள் அமைக்கப்பட்டு, எண்பத்தெட்டு வகையான பறவைகள், விலங்குகள் காட்டில் வாழ்வது போல மகிழ்ச்சியுடன் வாழ்ந்து இனவிருத்தி செய்கின்றன. ஆனால் இந்தப் பூங்காவிற்கு வரும் எந்த பார்வையாளரும் இதுவரை முழுவதுமாகச் சுற்றிப் பார்த்தது கிடையாதாம். காரணம் பாதி வழியிலேயே களைத்துப் போய் விடுவதுதான் என்கிறார்கள்.

— ஆர்.சி. ஜெயந்த்

படங்கள் : **ஸ்ரீஹரி**



ஃபாரூக் பாணி ஷாக் ட்ரீட்மெண்ட்!

'**மா**நில சுயாட்சி' முழக்கம் செய்து டெல்லியை ஒரு கலக்கு கலக்கிய ஃபாரூக் அப்துல்லா கொஞ்சம் அடக்கி வாசிக்கத் தீர்மானித்திருப்பது மத்திய அரசுக்குச் சற்று மூச்சு விட்டுக் கொள்ள நேரம் அளித்திருக்கலாம். ஆனால் எழுப்பப்பட்டுள்ள பிரச்னை இலேசில் தீரப்போவதில்லை. ஜம்மு காஷ்மீர் சட்டசபையில் 87 இடங்கள். அவற்றுள் 62 தேசிய மாநாடு கட்சியினுடையவை. ஃபாரூக் மாநில சுயாட்சி குறித்த தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அது மிகச் சுலபமாக நிறைவேறிவிடும்.

'ஃபாரூக்கின் அறிவிப்பைத் தொடர்ந்து, பிரதமர், இஸ்ரேல் சென்றிருந்த உள்துறை அமைச்சர் அத்வானியிடம் ஹாட்லைனில் பலமுறை பேசினார் என்று தலைநகரில் ஒரே பரபரப்பாகி விட்டது.

மத்தியில் பி.ஜே.பியின் ஆதரவு கட்சியாக தேசிய மாநாடு விளங்குவதால் இடித்துரைக்கவும் முடியாது; ஆனால் பிரிவினை வாதத்தை எதிர்த்தாக வேண்டும். எப்படி சமாளிப்பது என்று யோசித்து முடிவெடுப்பதற்குள் ஃபாரூக் தமது நிலையை வலுப்படுத்திக் கொள்ள முயன்றார் –

"எனது சுயாட்சி கோரிக்கையைப் பிரிவினைவாதம் என்று எப்படிச் சொல்லலாம்! இன்று காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகத் தொடர்வதே என்னால்தானே! அந்த நன்றி கூட இல்லையா உங்களுக்கு" என்று காட்டமாகக் கேட்டார்.

உள்துறை நிமிர்ந்து உட்கார்ந்து ஃபாரூக் வகுத்துள்ள தீர்மானத்தை ஆராய்ந்தது. அதன் முக்கிய அம்சங்கள் அச்சுறுத்தின :

- ராணுவம், தொலைத் தொடர்பு, அயலுறவு தவிர இதர விஷயங்களில் காஷ்மீர் தனித்து இயங்கும்.
- மத்திய அரசு அவசர நிலைப் பிரகடனம் செய்தால் அது காஷ்மீரில் செல்லுபடியாகாது. மாநில அரசின் முன் அனுமதியுடன்தான் அங்கு அவசர நிலைப் பிரகடனம் செய்ய முடியும்.
- 356வது பிரிவைப் பயன்படுத்தி அம்மாநிலத்தில் ஆட்சியைக் கலைக்க முடியாது.
- உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையம் இரண்டுமே ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் அதிகாரம் செலுத்த முடியாது.
- ஐ.ஏ.எஸ். போல் காஷ்மீருக்கென்று தனியாக ஆட்சிப் பணி பிரிவு செயல்படும். மாநில அரசின் கட்டுப்பாட்டில் அது இயங்கும்.

'மத்திய அரசு காஷ்மீர் தீவிரவாத அமைப்புகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதால் ஃபாரூக் அப்துல்லா தமது முக்கியத்துவம் குறைந்து போய் விடும் என்று அஞ்சுகிறார். அதனால்தான் இப்படி ஒரு ஸ்டண்ட்' என்று விளக்கமளிக்கின்றனர் ஒரு தரப்பினர்.

இதற்கிடையே ஃபாரூக் அப்துல்லாவுக்கே ஒரு தலைவலி கிளம்பியிருக்கிறது. ஜம்மு, காஷ்மீர், லடாக் என்ற மூன்று பகுதிகள் முறையே ஹிந்து, முஸ்லிம், பௌத்த குடிமக்கள் அதிகம் வசிக்கும் இடங்கள். லடாக்கில் உள்ள பௌத்த லாமா வென் குஷோக் பகுலா 'இனி ஸ்ரீநகர் ஆட்சியைத் தாங்கிக் கொள்ள மாட்டோம்' என்று தீர்மானம் கொண்டு வந்ததுடன் இந்தியாவும் லடாக்கியர்களை உதாசீனப்படுத்துகிறது; அதனால் லடாக்குக்கு யூனியன் பிரதேச அந்தஸ்து வேண்டும் என்கிறார். "பாக். ஆக்கிரமித்துள்ள காஷ்மீரில் இஸ்லாமாபாத் ஆட்சி நடக்கிறது. லடாக்கில் டெல்லி ஆட்சி நடப்பதே பாதுகாப்பு" என்கிறார்.

இதற்கிடையே ஜம்மு காஷ்மீர் முழுதும் பதற்ற நிலை உருவாகி விட்டது என்றும், உடனடி உறுதியான நடவடிக்கை தேவை என்றும் உள்துறைக்கு ரகசியச் செய்திகள் வர ஆரம்பித்து விட்டன.

டெல்லியிலிருந்து : **வெங்கட்**

One & Only

ஏழ்க்கு

ஸ்கூல் திறந்த இரண்டாவது நாள். புது டீச்சர், வகுப்பறைக்குள் நுழைந்தார். "என் பேர் அருணா! நான்தான் உங்களுக்கு டிராயிங் மிஸ்!" என்று இரண்டாவது வகுப்புக் குழந்தைகளிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டார்.

"இந்த வருஷம் மார்ச் மாசம் என்ன விசேஷம் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்!"

"மதர்ஸ் டே வந்தது!" "கரெக்ட்! மதர்ஸ் டே அன்று நீங்கள் என்ன பண்ணினீர்கள்?"

"அம்மாவுடன் ஹோட்டலுக்குப்போய் டின்னர் சாப்பிட்டோம்."

"மதர்ஸ் டே கார்டு கொடுத்தேன்! நானே வரைஞ்சு கொடுத்தேன்."

பலதரப்பட்ட பதில்கள்.

"சரி! ஃபாதர்ஸ் டே எப்போ வரும் தெரியுமா?"

வகுப்பில் சில நிமிடங்கள் அமைதி.

ஒரே ஒரு பையன் கரெக்டாய் பதில் சொன்னான். ஜூன் மாசம் பதினெட்டாம் தேதி!"

"கரெக்ட்."

"அன்னைக்கு நீங்கள் எல்லாம் என்ன செய்யப் போகிறீங்க தெரியுமா? ஃபாதர்ஸ் டே அன்றைக்கு, உங்கள் அப்பாவுக்குக் கொடுக்க நீங்களே ஒரு கிரீட்டிங் கார்டு இப்போ தயாரிக்கப் போறீங்க" என்று சொல்லிவிட்டு, அத்தனை குழந்தைகளுக்கும் ஒரு அட்டையை விநியோகித்தார் டீச்சர்.

அடுத்த அரை மணி நேரத்துக்குக் குழந்தைகள் பிசி.

குச்சி, குச்சியாய் இரண்டு உருவங்கள் வரைந்து விட்டு, ஒன்றின் கீழ் 'அப்பா' மற்றதின் கீழ் 'நான்' என்று எழுதியிருந்தது ஒரு குழந்தை.

"Dad! I love you' என்று எழுதி தன் பெயரைக் கீழே எழுதியிருந்தது இன்னொரு குழந்தை.

சிரிக்கும் முகம் ஒன்றை வரைந்து 'ஹாப்பி ஃபாதர்ஸ் டே!' என்று எழுதியது மற்றொன்று.

மணியடிக்க இன்னும் பத்து நிமிடம். "எங்கே! நீங்கள் வரைந்ததை எல்லாம் கொண்டு வந்து காட்டுங்கள் பார்க்கலாம்!" என்று டீச்சர் சொன்னதும், எல்லாக் குழந்தைகளும் வரிசையில் வந்து, காட்டினார்கள்.

"ஃபாதர்ஸ் டேன்னு சொல்லித்தானே கார்ட் வரையச் சொன்னேன்..."

ராக்கெட்டில் கொண்டை போட்ட பெண் உருவமும் அதனருகே ஒரு குட்டி உருவமும் வரைந்திருந்தக் குழந்தையைக் கேட்டார்.

"ஏய், தப்பா வரைஞ்சிருக்கே மீனா!" – மற்ற குழந்தைகளும் சூழ்ந்துகொண்டு எட்டிப் பார்த்தன.


"கிடையாது!" என்றாள் மீனா.

"எங்கப்பாவைப் பார்க்கத்தான் அம்மாவும் நானும் இந்த ராக்கெட்ல போறோம்... ரொம்ப மேல போனாத்தான் இனிமே அவரைப் பார்க்கலாம்னு எங்க பாட்டி சொல்லிருக்காங்க..."

மற்ற குழந்தைகளை அவசரமாக அப்புறப்படுத்தினார் டீச்சர்.

எஸ். சந்திரமௌலி







• சேரும் சீட்டு



• தேவை...



• தென்னாப்பிரிக்க மெதட்!



• விசாரித்திருந்தால்...

டூப், ரீல், மாய்மாலம்

● எம். சிவகுருநாதன், சென்னை – 42.

? நம் நாட்டில் சென்ற மூன்று ஆண்டுகளாக வருமான வரி கட்டாத சர்வதேச நிறுவனங்களின் எண்ணிக்கை நாற்பத்திரண்டாமே? இதுகுறித்து உங்கள் கருத்து என்ன?

! பி.ஜே.பி. அரசின் கையாலாகாத்தனத்துக்குச் சிகரமான உதாரணம். அதுசரி சர்வதேச நிறுவனங்களை மட்டும் பிரித்துப் பேசுவானேன்? நம் தேச நிறுவனங்கள் எல்லாமே ஒழுங்காக வரி கட்டி வருகின்றனவா என்ன...? வரி வசூலில் அமெரிக்கா பாணிதான் பலன் தரும்!

● வி. சரவணன், மதுரை –1.

? சமீபத்தில் சென்னையில் பா.ஜ.க. மாநில தலைவர் கிருபாநிதிக்கு நடத்திய பாராட்டு விழாவில் மலர்க் கிரீடம், மலர்ச் செங்கோல் வழங்கப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. திராவிட இயக்க அரசியலையே பா.ஜ.கவினரும் பின்பற்றுகிறார்களே...?

! ரத யாத்திரை கலாசாரத்தில் வந்தவர்கள் தானே... இதை ஏற்பது ஒன்றும் கஷ்டமில்லை.

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் – 1.

? வசனம் எழுதியவரே கோடிக்கணக்கில் சம்பாதித்தால் கதாநாயகியாக நடித்த எவ்விடம் எவ்வளவு பணம் இருக்கும் என்கிறாரே ஜெ...?

! எம்.ஏ.எம். ராமசாமியிடம் கேட்டுத்தான் சொல்ல வேண்டும்.

● கே.எம். சுப்பிரமணியன், பூனாம்பாளையம் தெற்கு.

? டூப், ரீல், மாய்மாலம் – எங்கே காணலாம்?

! டூப் – "நான் முஸ்லிம் என்பதால் என் மீது பழி சுமத்தினார்கள்!"

ரீல் – "பத்திரிகைகள் நான் சொன்னதைத் திரித்து வெளியிட்டு விட்டன!"

மாய்மாலம் – "மன்னிப்புக் கோருகிறேன்!"

– அஸார்.

● ஏ. ஜஹ்பர் காதர், விளாத்திகுளம் அஞ்சல்.

? ஆசிரியர்கள் மனம் வைத்தால் ஐந்தே ஆண்டுகளில் நாடு முன்னேறி விடும் என்கிறாரே அமைச்சர் அன்பழகன்?

! நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை. அது மெய்ப்பட தரமான ஆசிரியர்களையே தேர்வு செய்ய அமைச்சர் மனம் வைக்க வேண்டும்!

● நாஞ்சில் க. நாகராஜன், பரமக்குடி.

? லல்லு பேட்டியளிக்கும்போது பக்கத்தில் நம் ஊர் சுப்ரமண்யம் சுவாமியும் உட்கார்ந்திருக்கிறாரே?

! ஜோக்கர் எந்த 'செட்'டிலும் சேரும் என்பது உமக்குத் தெரியாதா?

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? கபில்தேவும் அஸாருதீனும் இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் சுக்தேவ் சிங் திண்ட்சா வலியுறுத்தியிருப்பது பற்றி...?

! இதெல்லாம் போதாதுங்க; காலக்கெடு நிர்ணயிச்சு, அதுக்குள்ள உண்மைகளை ஒளிக்காம சொல்லி, சம்பாதிச்ச பணத்துக்கு வரி கட்டிட்டா மன்னிப்பு; ஒளிச்சு வைச்சு பிறகு கண்டுபிடிக்கப்பட்டா பயங்கரமான தண்டனை என்ற தென் ஆப்பிரிக்க மெதட்தான் நல்ல பலன் தரும்.

● எம். ரியாஸ் அஹ்மத், பேரணாம்பட்டு.

? 'நான் கடவுளை நம்புவதில்லை; ஜெயலலிதாவை நம்புகிறேன்' என்று வீரமணி பேசியிருப்பது பற்றி...?

! நல்லவேளை; பெரியார் இறந்து விட்டார்!

● கே.ஆர். வேலுச்சாமி, அன்னூர்.

? தொலைக்காட்சித் தொடர்கள் இப்போது எப்படி...?

! எப்போதும் அப்படியேதான்...
(இ...வ்!)

● ஆர்.சி. ஜெயச்சந்திரன் பூனாம்பாளையம்.

? கலைஞருக்குக் 'கம்ப்யூட்டர் ரிஷி' பட்டம் சூட்டிய பிரமோத் மகாஜன் பற்றி...?

! கவலைப்படாதீங்க. இவரே ஆந்திரா கர்நாடகா போகும்போது ராஜரிஷி, பிரும்ம ரிஷி பட்டங்களைத் தயாராக வைத்திருப்பார்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? பீஹாரில் படுகொலை நடந்துள்ளது பற்றி...?

! மீண்டும் பூமிஹார் அட்டூழியம். அந்த மாநில சகோதரர்களை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. திறமையற்ற சுயநல, அரசியலுக்கும் கண்மூடித்தனமான வெறிக்கும் இடையே சிக்கித் தவிக்கின்றனர்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'அ.தி.மு.க.வினர் மீது யாராவது கை வைத்தால் அந்தக் கையை முறித்து எறியத் தயங்க மாட்டோம்' என்று ஜெயலலிதா எச்சரித்துள்ளாரே...?

! ரொம்பத் தவறான பேச்சு. கை வைக்கும்படி எங்கள் கட்சியினர் நடந்து கொள்ளவே மாட்டார்கள் என்று சொல்ல முடிகிறதா பாருங்கள்!

எங்கே காணலாம்?

● ஆர். கப்பாராவ், திருக்கோவலூர்.

? 'என்னிடம் இரண்டு தமிழ் இருக்கிறது. ஒன்று கற்பனைத் தமிழ்; இன்னொன்று விற்பனைத் தமிழ்' என்று கவிஞர் வாலி கூறுகிறாரே...?

! கற்பனைத் தமிழும் காவியத் தமிழும் விற்பனை ஆகாது என்று முடிவு செய்து விட்டாரே; சோகம்தான்! அவர் கையாலேயே வெளியிட்ட குறையொன்றுமில்லை எத்தனை பிரதிகள் விற்றது என்று விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தால் அவ்வாறு பேசியிருக்க மாட்டார்.

● வைகை வளவன், மதுரை – 17.

? 'தண்டனை பெற்றவர்கள் அப்பீல் செய்திருந்தாலும் அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்று தேர்தல் கமிஷனர் கில் சொல்வது அநியாயம் அக்கிரமம்' என அ.தி.மு.க. எகிறிக் குதிக்கிறதே தலைவா...?

! அப்படி எகிறிக் குதிக்கலைன்னா இவங்க (ஜெ அண்ட் கோ) மேல் கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போனதே தப்புன்னு ஒப்புக் கிட்டதாகிவிடுமே! சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டதாகி விடுமே!

● ஆர். கிருஷ்ணமூர்த்தி, தேலூர் அஞ்சல்.

? கோஷ்டி இல்லாத காங்கிரஸை தமிழகத்தில் உருவாக்கப் போவதாக தமிழக புதிய காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் கூறியுள்ளாரே?

! அட, அதுக்குள்ள கனவு காண ஆரம்பிச்சுட்டாரே, நல்ல கும்பகர்ணர்தான் போல!

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம் – 1. ❑

? தமிழகத்தில் வரவிருக்கும் சட்டசபை தேர்தல் எத்தனை கட்டங்களாக நடப்பது நல்லது...?

! ஒரே நாளில் மாநிலம் முழுவதும் நடத்து முடிவதே நல்லது. தேர்தல் கமிஷன் மனம் வைத்தால் அது முடியாததும் அல்ல.

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? த.மா.கா. இல்லாத ஆட்சி உப்பில்லாத பண்டம் போல, இனிப்பு இல்லாத பால் போல இருக்கும் என்கிறாரே ப. சிதம்பரம். இது குறித்து...?

! த.மா.கா. பஞ்சர் ஆன சைக்கிள் போல ஆகிவிடக் கூடாதே என்ற கவலையில் பேசுகிறார்!



• மனம் வைக்கட்டும்



• கேட்டுப் பார்க்கலாம்...



• பழகிய வழி

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
எம்.டி. ரவிகாந்த்,
49/1, தும்பவனம் தெரு,
காஞ்சிபுரம் - 631 501.

• ரூ. 25 பரிசு பெறுபவர் :
எம். சிவகுருநாதன்,
எண் 14, ஃப்ளாட் 2,
ஸ்ரீகிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ்,
இரண்டாவது தெரு, சாரதி நகர்,
வேளச்சேரி - 600 042.

23

அந்த வண்ண நீருற்று வேகமாக மேலே கிளம்பி அழகாக ஆடியது. பிறகு துள்ளலுடன் கீழிறங்கியது. பார்த்தவர்கள் வெகுவாக ரசித்தார்கள். சங்கீதா கொஞ்சம் அதிகமாகவே.

தள்ளி நின்ற சுவாதியைச் செல்லமாகக் கோபித்துக்கொண்டான். "என்ன சுவாதி இது. பெங்களூர் லால்பாகுக்கு வந்துவிட்டு இதையெல்லாம் ரசிக்கலேன்னா எப்படி?"

சுவாதி சுதாரித்துக்கொண்டாள். ஓஹோ, அவ்வளவு ரசிக்கிறீங்களா? அப்போ உங்க தேனிலவை பெங்களூரிலேயே வச்சுக் கலாமே?" என்று கூறிவிட்டு அவள் முகத்தில் படர்ந்த செம்மையை ரசித்தாள்.

அடுத்தமாதம் சங்கீதாவுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டிருந்தது. தனது வருங்காலக் கணவனுக்கும் சென்னையிலேயே வேலை என்பதில் அவளுக்கு அதிகப்படி நிம்மதி.

அது மலர்க்கண்காட்சி சீஸன். லால்பாக் முழுவதுமே பூக்கள் மலர்ந்து, விரிந்து மணம் வீசிக்கொண்டிருந்தன. விற்பனைக்கென்று தனிப் பிரிவுகள்.

"இந்தக் கண்ணாடிக் கூடம் இருக்கே. இதில் மீட்டிங் நடந்தபோதுதான் காங்கிரஸ் இரண்டாக உடைந்தது. அதற்குப் பிறகுதான் இந்திரா காங்கிரஸ் உருவானது" என்று சொல்லிக்கொண்டே போன சங்கீதா அப்போதுதான் கவனித்தாள். தன் கூட வராமல் சுவாதி சற்றுப் பின் தங்கிவிட்டதை. அவளை நோக்கிச் சென்றாள்.

"என்ன சுவாதி, அம்மா ஞாபகமா?" என்றாள். மௌனத்திலேயே ஒப்புதல் தென்பட்டது.

"என்ன செய்ய சுவாதி. நாலு நாள் முன்னேகூட எடிட்டர் தேசிய நாளிதழிலே சத்யா மேடத்தின் புகைப்படத்தைப் போட்டு 'எங்கிருந்தாலும் உடனே வரவும்'னு ஒரு முழுப்பக்க விளம்பரம் கொடுத்திருக்கிறார். நாம மெட்ராஸ் போகும்போது உங்கம்மா ஒருவேளை வந்திருக்கலாம்."

பாவம், அம்மாவைக் கண்டு பிடிக்கவும், தன்னை சமாதானப்படுத்தவும் இவர்கள் தங்களால் முடிந்ததையெல்லாம் செய்கிறார்கள். இப்போதுகூட கட்டாயப்படுத்தி இந்த ஐந்து நாள் பெங்களூர் பயணத்துக்கு அனுப்பியிருக்கிறார் ராஜ்குமார் - நண்பர் வீட்டில் இரவுத் தங்கல், போக, வர ரிசர்வேஷன் என்று தகுந்த ஏற்பாடுகளோடு. சங்கீதா ஏற்கனவே இருமுறை பெங்களூருக்கு வந்திருக்கிறாள்; இப்போது தனக்குத் துணை என்பதற்காக மட்டுமே மீண்டும் வந்திருக்கிறாள். மனம் நெகிழ்ந்தது.

"சங்கீதா, இப்போதெல்லாம் அம்மா வரலையேன்றது மனத்தில் ஒரு பாரமா இல்லே. எப்படியுமே என்னை அவங்கதான் வழி நடத்துவதாக ஒரு நம்பிக்கை வந்திருக்கு.

அருண் சரண்யா



ஆனால் கமர்ஷியல் பைலட் லைசன்ஸ் கிடைத்தபிறகு, விமான நிறுவனத்திலும் வேலை கிடைச்சு, வரும் வெள்ளிக்கிழமை துணை விமான ஓட்டியாக முதல் தடவை போகப் போறேன். அந்த சமயத்திலே அம்மாவே இருந்து வாழ்த்தியனுப்பினா நல்லாயிருக்குமேன்னு ஒரு எண்ணம் அடிக்கடி மனசிலே வருது. அதனாலே வருத்தம் உண்டாகுது. சாரி, இதனால்தான் உங்க மூடையும் அப்பப்போ கெடுத்துக்கிட்டு இருக்கேன்."

"இதிலே வருத்தப்பட என்ன இருக்கு? உணர்வுகளைப் பகிர்ந்துக்கவும், சோகங்களைக் குறைக்க முயற்சிப்பதும்தானே மனித உறவுகளின் அர்த்தம். தவிர உங்கம்மா எனக்குப் பலவிதங்களில் பக்கபலமாக இருந்திருக்காங்க. அதை நினைச்சுப் பார்க்கும்போது இதெல்லாம் ஒண்ணுமே யில்லே" என்றாள் உண்மையான நெகிழ்வோடு.

சங்கீதாவுக்கு மட்டுமல்ல, பிரசாத்துக்கும் கூடத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. பூர்வீகம் தஞ்சாவூர்தான் என்றாலும் பெண்ணின் குடும்பத்தினர் நாக்பூரில் குடியேறிப் பல வருடங்கள் ஆகிவிட்டதாம். பிரசாத்தின் வீட்டிற்கே மகளை அழைத்து வந்துவிட்டனர். செய்தி அறிந்ததும் "அப்போ இது பிள்ளை பார்க்கும் படலம்னு சொல்லுங்க" என்று சுவாதி சிரிக்க, பிரசாத் சங்கடப்பட்டான்.

"பாராட்ட வேண்டிய முடிவு இது பிரசாத். வாழ்க்கை என்பது ஏங்குவதற்கு இல்லை. சாதிக்கணும். சந்தோஷப்படணும். இதுதான் இனிமையான வாழ்க்கையின் ஃபார்முலா. எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் இதிலே தேவையில்லே. பொண்ணு வந்துட்டுப் போனப்புறம் உங்க கருத்தை என்கிட்டே சொல்லுங்க" என்றாள் இலேசாகக் கண்களைச் சிமிட்டியபடி.

ஆனால் அவள் எதைத் தவிர்க்க

நினைத்தாளோ அதுதான் நடந்தது. "நல்லா யிருக்கே சுவாதி. எதிர்வீட்டிலே ஒரு விசேஷம்னா அதிலே கலந்துக்காம இருப்பாங்களா? ஜானகியும் சிங்கப்பூர் போயாச்சு. நீதான் வந்து கூடமாட உதவி செய்யணும். உங்கம்மா இருந்தால் கேட்காமலேயே வந்திருப்பா" என்றாள் பிரசாத்தின் அம்மா.

மறுக்க முடியவில்லை.

அறிமுகம், சிற்றுண்டி வழங்கல், சம்பிரதாயக் கேள்விகள் இப்படித் தடங்கலின்றி நிகழ்ச்சி நடந்து முடிந்தாலும் சுவாதியின் மனத்தில் ஒரு இலேசான குறுகுறுப்பு இருக்கவே செய்தது.

"சுவாதி, என்னை உங்க வீட்டுக்குக் கூப்பிட மாட்டீங்களா?" என்று வடஇந்திய நகர வளர்ப்புக்கேற்ப அந்தப் பெண் பளிச்சென்று கேட்க, "அவ்ளோதானே, இப்பவே வாங்க" என்று அவளை அழைத்துச் சென்றாள். அவளது பெற்றோர் தங்கள் வருங்கால சம்பந்தியிடம் பேச நிறைய விஷயமிருந்ததால் அங்கேயே தங்கி விட்டனர்.

தன் வீட்டுக்குள் நுழைந்ததும், பெட்-பாட்டிலில் வைத்திருந்த சாக்லெட்டுகளில் இரண்டை எடுத்து அவளிடம் நீட்டினாள். "எங்கள் வளாகத்தின் புது மணப் பெண்ணுக்கு இந்த சுவாதியின் இனிமையான வரவேற்பு" என்றாள்.

"அதிருக்கட்டும்" என்ற அந்தப் பெண் இரண்டடி பின்னே நகர்ந்து சுவாதியை உச்சி முதல் பாதம் வரை ஒரு பார்வை



"தலைவர் கிரிக்கெட்ல ரொம்ப ஆர்வம் உள்ளவர்."

"அதுக்காக மணமக்களை, 'கிரிக்கெட்டும் பெட்டிங்கும் போல' ஒற்றுமையா இருக்கணும்னு வாழ்த்தணுமா என்ன...?"

— பா. செந்தில்குமார்

பார்த்தாள்.

"நல்ல பர்சனாலிடி. கோதுமை நிறம், சராசரியைவிடக் கொஞ்சம் அதிக உயரம், எளிமையான சுரிதார். கமீஸ்கூட அழகாக இருக்கு. ட்ரெஸ் சென்ஸ் இருக்கு" என்று கூறிக்கொண்டே வந்தவள் சட்டென்று குரலைத் தழைத்துக்கொண்டு "பிரசாத் உங்களை லவ் பண்ண முயற்சிகூட செய்ததில்லையா?" என்று ஒரு அணுகுண்டை வீசினாள்.

சகஜமாகச் சில நொடிகள் தேவைப்பட்டன சுவாதிக்கு. "வட இந்தியாவிலே வளர்ந்தவர்கள் பரந்த மனப்பான்மையோடு இருப்பாங்களே. எதிரெதிர் வீடுகளில் கல்யாணமாகாத ஒரு ஆணும், பெண்ணும் வசித்தால் அதில எப்படியும் காதல்ங்கிற விஷயம் வந்தே ஆகணுமா?" என்றாள்.

"அப்படியில்லே. வீடுகளில் நெருக்கத்தை வச்சு நான் இந்த முடிவுக்கு வரல்லே... சரி விடுங்க, ஏதோ உள்ளுணர்வுன்னு வச்சுக்குங்களேன். எப்படியோ உங்கள் நஷ்டம் எனக்கு லாபம்."

'எதை வைத்து இவளுக்கு இந்த உள்ளுணர்வு ஏற்பட்டது? பிரசாத் தன்னை ஏக்கமாகப் பார்த்துத் தொலைத்து விட்டானா? அல்லது தனது மனத்தின் மூலையில் ஒளிந்திருந்த சின்ன வருத்தம் வெளிப்படும்படி நான்தான் நடந்து கொண்டு விட்டேனா? எப்படியோ கல்யாணத்துக்குப் பிறகு இந்தப் பெண் இங்கேயே வந்து விடப் போகிறாள். முடிந்தால் வேறு வீடு பார்க்கச் சொல்லி அம்மாவை வற்புறுத்த வேண்டும்.'

"கமான் சுவாதி, இந்தப் பூக்களையெல்லாம் பாரு. தானாக மனசு லேசாகும்" என்று சங்கீதா தன்னை உலுக்கியதும்தான் அவள் பிரசாத்திடமிருந்து பெங்களூருக்கு வந்தாள்.

சென்னை திரும்பியபோது அவர்களை அழைத்துச் செல்ல ராஜ்குமார் கார் அனுப்பியிருந்தார். எதிர்பார்த்ததுதான். ஆனால் அந்தக் கார் நேரே ராஜ்குமாரின் வீட்டுக்குச் செல்லும் என்பதை சுவாதி எதிர்பார்க்கவில்லை. சங்கீதா கூட கொஞ்சம் குழப்பமடைந்தாள். "எடிட்டர் என்னையுமா தன் வீட்டுக்கு அழைத்து வரச் சொன்னார்?"

"சுவாதியம்மாவை சார் வீட்ல விட்

டுட்டு, உங்களை உங்க வீட்டிலே இறக்கி விடச் சொல்லி உத்தரவு" என்றார் டிரைவர்.

ஏதோ மர்மச் சூழல் உருவாவது போல் பட்டது சுவாதிக்கு.

வாசலில் கார் நின்றதும், காத்திருந்தவர் போல் வந்து எதிர்கொண்டார் ராஜ்குமார்.

டிரைவர், சங்கீதாவுடன் காரைக் கிளப்பிக்கொண்டு போக, சுவாதி உள்ளே நுழைந்தாள். "வாணி எங்கே காணோம்?"

"உடம்பு சரியில்லேன்னு இன்னிக்கு சீக்கிரமாகவே வீட்டுக்குப் போயிட்டா. ஆனா சமையல் முடிஞ்சாச்சு. சாப்பாடு ரெடி. முதல்லே முகம் கழுவிட்டு வா, சாப்பிடலாம்" என்றபோது அவர் குரல் கரகரப்பது தெரிந்தது. தன்னை சுவாதி உற்று நோக்குவதைப் பார்த்ததும் "பத்திரிகை விஷயமா நேத்து கோயம்புத்தூர் போயிட்டு வந்தேன். வழியிலே கண்ட தண்ணியையும் குடிச்சதிலே இப்படி."

பார்த்துப் பார்த்து பரிமாறினார். "ஐயோ சார், போதும். இதுக்கு மேலே ஒரு கவளம் சாப்பிட்டால்கூட நான் ஏறப்போகும் விமானம் மேலேயே கிளம்பாது" என்று அவள் சிரித்தபடி பதற, "ஆமாம், அவ்வளவுடன் எடை கொண்ட விமானம் ஒரு அரைக் கிலோ அதிக எடையிலே கிளம்பாமப் போயிடுமா?" என்ற ராஜ்குமார் கனிவாக "ட்ரிப் எப்படி இருந்தது? ஏதாவது உதவி தேவையா?" என்றார்.

"ட்ரிப் சூப்பர்தான். உதவி எதுவும் வேண்டாம். நீங்கதான் எனக்கு எந்த உதவின்னாலும் தயங்காமல் செய்யறீங்களே. தவிர எனக்குத் தேவைப்படும் ஒன்றே ஒன்றை உங்களாலே தர முடியாது."

ராஜ்குமார் புரிந்துகொண்டார். அவர் கண்களிலிருந்து சில சொட்டுக்கள் இறங்கின. சுவாதிக்குப் பதற்றம் ஏற்பட்டது.

"பரவாயில்லே சார். விமானத்திலே ஏறுவதற்கு முன் அம்மா 'பெஸ்ட் ஆஃப் லக்' சொன்னா நல்லாயிருக்குமேன்னு அடிக்கடித் தோணுது. அவ்வளவுதான்" என்றபடி மேஜையின் மீதிருந்த சமையல் பாத்திரங்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சரி செய்து வைத்தாள்.

முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டு வந்த ராஜ்குமார் "உடனே கிளம்பும்மா. சாந்தி நர்சிங் ஹோமுக்குப் போகலாம்" என்றார்.

சற்றே ஆச்சரியத்துடன் சுவாதி அவரை நோக்க, "சென்னையில் இருக்கும் போதெல்லாம் சத்யா அந்த நர்சிங் ஹோமுக்கு வாராவாரம் தவறாமல் போவா. அந்த ஹாஸ்பிடலிலே உள்ள காற்றிலே உங்கம்மாவின் சுவாசமும் கலந்திருக்கும்னே கூட வச்சுக்கலாம்."

இதற்குள் சங்கீதாவை விட்டுவிட்டு கார் திரும்பியிருக்க, இருவரும் கிளம்பினார்கள்.

உடலின் களைப்பு உறக்கத்தை வேண்டினாலும், "இங்கே வந்ததும் நல்லதாகப் போயிற்று" என்று தோன்றியது. நர்சிங் ஹோம் வாசலில் நின்று கொண்டிருந்த காப்டன் ராஜ்குமாரைப் பார்த்த போது.

(தொடர்ந்து பறக்கும்)

புலிக்குத்தி வீரன்...!

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகேயுள்ள குப்பிரிக்காபாளையத்தில் சென்ற மாதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது புலிக்குத்தி வீரன் சிலை!




அதென்ன புலிக்குத்தி வீரன்?

முற்காலத்தில் புலிகள் வனப் பகுதியிலிருந்து வந்து குடிமக்களின் ஆடு, மாடுகளைத் தூக்கிச்சென்று விடுமாம். இதைத் தடுத்து புலியை வீழ்த்த ஒரு சிறப்பான வீரனை மன்னர் நியமிப்பார். போராட்டத்தில் அவன் இறந்தால் அவன் சமாதியில் கல் நடுவார்கள். அதில் புலியைக் குத்துவது போன்ற சிற்பத்தையும் வடித்து விடுவார்கள். இதுதான் புலிக்குத்தி வீரன் சிலை.

இங்கு கிடைத்த புலிக்குத்தி வீரனின் சிற்பம் 12ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாமென தொல்லியல் ஆய்வாளர்கள் கல்லுக்காடு பரமசிவம், கே. முருகவேல், வி. பொன்னுசாமி ஆகியோர் சொல்கிறார்கள்.

— சந்தியூர் கோவிந்தன்



‘ஐயோ! கண்ணே!’ —மாறவில்லை!

“அன்றும் சபை கூடியிருந்தது. பீர் தட்டுப்பாடு தொடங்கி, சர்வதேச பிசினஸ், செமினார் வரை, விதிவிலக்கின்றி விவாதிக்கப்படும் மனமகிழ் சபை. அன்றைய விவாதம் திடீரென இலங்கை இனப் பிரச்னைக்குத் திசை மாறியது. “ஈழத் தமிழர்கள் தனிநாடு கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது? என ஒரு மலையாள நண்பன் கேட்க, நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். ஆறாம் நூற்றாண்டு தொடங்கி, தமிழகத்திற்கும் இலங்கைக்குமான வரலாற்று தொடர்புகளை அடுக்கினேன். எல்லோரும் வாயடைத்துப் போனார்கள். இத்தனை விவரமாகப் பேசுகிறாயே நீ என்ன வரலாற்று மாணவனா என்றார்கள். இல்லை, கல்கியின் பொன்னியின் செல்வனையும், சிவகாமியின் சபதத்தையும் வாசித்தாலே போதும் என்றேன். எங்களைப் போன்ற பக்கத்து வீட்டுக்காரர்கள் அது போன்ற நல்ல படைப்புகளை எப்படி படிக்க? என்று ஆதங்கப்பட்டார்கள் அந்த மலையாளிகள். அதுவே என்னைச் சிந்திக்க வைத்துவிட்டது” என்கிறார் பொறியாளரும், தொழிலதிபருமான சி.வி. கார்த்திக் நாராயணன்.

- அருள்மொழிவர்மன், வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான், நந்தினி, குந்தவை இவர்களெல்லாம் இப்போது ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்றால், அதற்கு காரணமானவர் தான் இந்தக் கார்த்திக் நாராயணன். ‘பொன்னியின் செல்வனை’ ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கும் இவரிடம் உங்களை மொழி பெயர்க்கத் தூண்டிய விஷயம் இது மட்டும் தானா? என்றோம்.

“துரதிஷ்டவசமாக, இன்றைய தேதிக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதத் தமிழர்கள் அதிகரித்து விட்டார்கள். தமிழில் தொடக்கக் கல்வியை கற்றுக் கொடுப்பதா வேண்டாமா என்று தமிழகத்திலேயே சர்ச்சை நடக்கிறது. இப்படியொரு சூழ்நிலையில்தான், ‘ஆங்கிலம் பேசும் தலைமுறைக்கு ‘கல்கி’ போன்ற எழுத்தாளர்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று விரும்பினேன். சமீப காலத்தில் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களுக்குப் பெருகியிருக்கும் மிகப் பெரிய வாசகர் வட்டமும் என்னைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது” என்கிறார்.


• கார்த்திக் நாராயணன்

"எனக்கு பன்னிரண்டு வயதாக இருக்கும்போது 'கல்கி'யின் படைப்புகளை வாசிக்கத் தொடங்கினேன். தூத்துக்குடியில் வசித்து வந்த எனது தாத்தா பாட்டியின் வீட்டில்தான் நான் வளர்ந்தேன். தேசியவாதிகளான அவர்கள்தான் எனக்கு கல்கி இதழை அறிமுகப்படுத்தி, அதில் வந்த கல்கியின் தொடர்களைப் படிக்கச் சொல்வார்கள். படித்து முடித்ததும், அதிலிருந்து கேள்விகளும் கேட்பார்கள். இப்படித்தான் 'பார்த்திபன் கனவும்,' 'சிவகாமியின் சபதமும்' எனக்குப் பரிச்சயமாயின. அடுத்து பொன்னியின் செல்வனைப் படிக்கத் தொடங்கியபோது, பல நூற்றாண்டுகள் பின்நோக்கி, பயணித்து, சோழர் ஆட்சியில் வாழும் பிரஜையைப் போல் ஆனேன்" என்றவரிடம் "கலாசார மணம் அதிகமுள்ள ஒரு சரித்திர நாவலை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது அத்தனை எளிதானதா? இது எப்படி சாத்தியமாயிற்று" என்றோம்.



• மினி கிருஷ்ணன்



• இளங்கோ



• கிருஷ்ணன்

"முதலில் ஆங்கிலம் பேசும் தமிழர்களும், இந்தியர்களும் படிக்க வேண்டும் என்பதுதான் எனது ஆவல். எனவே அமரர் கல்கியின் நடையை எந்தவிதத்திலும் சிதைத்து விடாத, எளிய ஆங்கிலத்தைக் கையாண்டேன். அய்யோ! கண்ணே! போன்ற உணர்ச்சிகரமான வார்த்தைகளை எளிதில் புரிந்துகொள்ள முடியும் என்பதால் அவற்றை அப்படியே கையாண்டிருக்கிறேன். அதேபோல பாத்திரங்களின் பெயர்களிலும் கை வைக்கவில்லை. அருள்மொழித்தேவன் என்றால் அந்தப் பெயரை அருள்மொழித் தேவா என மாற்றவில்லை. மொழி பெயர்ப்பின் சில பகுதிகள், முன்னோட்டமாக ஹிந்து நாளிதழில் வந்தபோது, வாசகர்களிடம் பெரும் வரவேற்பு பெற்றது. புத்தகம் வெளிவந்த பிறகோ 'தமிழ் தெரியாத குறையைப் போக்கி விட்டீர்கள்' என்று வெளிநாட்டு வாழ் இந்தியர்களும் தமிழர்களும் ஈமெயில் அனுப்புகிறார்கள். வாழ்க்கையில் எதையோ உருப்படியாகச் சாதித்து விட்ட திருப்தி வந்துவிட்டது" என்று நெகிழ்கிறார்.

பொன்னியின் செல்வனைப் பலமுறைப் படித்து இன்புற்று அதை ஆங்கிலப் படுத்தியிருக்கும் கார்த்திக் நாராயணன், கல்கியின் படைப்புகள் குறித்த தனது மதிப்பீட்டையும் முன் வைக்கிறார். "சரித்திர பின்னணியைக் களமாகக் கொண்டு நாவல் எழுதிய வகையில் இன்று வளர்ந்து வரும் மேற்கத்திய எழுத்தாளர்கள்கூட 'கல்கி'யை எட்ட முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். காரணம், வரலாறு, கற்பனை இரண்டையும் கல்கி, தனக்கேயுரிய 'கலவை விகிதத்தில்' கையாண்டார். இதனால் கற்பனையான ஒரு சில பாத்திரங்கள்கூட நிஜத் தோற்றத்தில் வாழ்கின்றன. அதே போல் நடப்பு அரசியல், வாழ்வை பிரதிபலிக்கக் கூடிய அவரின் டாபிகல் டச்



நாவலை மேலும் மெருகூட்டி விட்டது. வாழ்க்கையைப் பிரதிபலிக்காத படைப்புகளைக் கால வெள்ளம் அடித்துப் போய்விடும். ஆனால் பொன்னியின் செல்வன் காலம் கடந்து நிற்கும் படைப்பு. அதனால் தான் அதற்கு ஒவ்வொரு தலைமுறையிலும் வாசகர்கள் கிடைத்துக்கொண்டே இருக்கிறார்கள்" என்று முடித்தவர், "ஒரே ஒருமுறை கல்கியின் மடியில் ஐந்துவயது சிறுவனாக அமர்ந்திருக்கிறேன்" என்கிறார்!

ஆங்கில மொழி பெயர்ப்பின் எடிட்டர் மினி கிருஷ்ணனைச் சந்தித்தோம். மேக்மிலன் சென்னை பிரிவு ஆசிரியர் குழுவின் முதன்மை எடிட்டராக இருக்கும், இவருக்கு பதினெட்டு ஆண்டுகால மொழிபெயர்ப்பு அனுபவம். "ஆங்கில மொழி பெயர்ப்புகள், பல கலாசாரங்களுக்கு இடையே விரைவான தொடர்புகளையும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இந்திய இலக்கியத்தை உலகின் பார்வைக்குக் கொண்டு செல்ல ஆங்கில மொழிக்கு மட்டும் சக்தி இருக்கிறது. இதை எண்ணியே சுதந்தரத்திற்குப் பிறகு எழுதப்பட்ட ஐம்பத்து ஐந்து இந்திய நாவல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் திட்டத்தைத் தொடங்கினேன்" என்கிறார். இந்தத் திட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காகப் பல இடங்களில் அலைந்து திரிந்திருக்கிறார். இறுதியில் இவரது முயற்சிக்கு உயிர் கொடுத்தவர்கள் ஏ.ஆர். எஜுகேஷனல் சொசைட்டி.

கல்கியின் படைப்புகளை மொழிபெயர்க்கச் செய்து வெளியிடும் பொறுப்பும் அவற்றை எடிட் செய்யும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதல் இரண்டு பாகங்களுக்கு வாசகர்களிடம் கிடைக்கும் ஆதரவு வியப்பூட்டுகிறது" என்கிறார்.

போலீஸ் : மெகா திருடன் மயிலாண்டி கடிதம் போட்டிருக்கான்..

இன்ஸ்பெக்டர் : என்னவாம்?

போலீஸ் : வி.ஐ.பி. கார்களில் சிவப்பு விளக்கு பொருத்தியிருக்கிற மாதிரி தன் காரிலும் பொருத்திக்கலாமான்னு கேட்டிருக்கான்...

- ராஜி ராதா



பொன்னியின் செல்வனுக்கு மணியம் வரைந்த ஓவியங்கள் இன்னும் வாசகர் மனத்தை விட்டு அகலாத நிலையில், ஆங்கில மொழி பெயர்ப்பிற்குக் கோட்டோவியங்கள் தீட்டியிருப்பவர் ஓவியர் ஏ.வி. இளங்கோ. ஒரு ஓவியம் வரைய எத்தனை நேரம் ஆகிறது என்றதும் "இருபத்து ஐந்து வருடங்களும் முப்பது நிமிஷமும்" என்கிறார்!

"மரப்பாச்சி பொம்மைகள்தான் எனது ஓவியங்களுக்கு அடிப்படை. ஓவியத்தில் எனக்கென்று ஒரு மொழி வசப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு இருபத்தைந்து வருடங்கள் ஆகி இருக்கிறது" என்று சொல்லும் இளங்கோ, தாம் வரையும் கோட்டோவியங்களுக்குத் தூரிகை பயன்படுத்துவதில்லை. துடைப்பக்குச்சிதான் பயன்படுத்துகிறார். நவீன கோட்டோவியத்தில் ஆதிமூலம், மருது. வரிசையில் புகழ் பெற்று வரும் இவருக்கு ஓவியம் தொடர்பான படிப்போ, குருவோ கிடையாது.

"நான் லண்டனில் நடத்திய ஓவியக் கண்காட்சியைப் பார்த்து, ஓரியண்ட் லாங்மேன் தங்கள் 'சிலப்பதிகாரம்' ஆங்கில மொழி பெயர்ப்புக்குக் கோட்டோவியம் வரைந்து தரும்படி கேட்டார்கள். பிறகுதான் மேக்மிலன் நிறுவனம் அழைத்தது" என்று சொல்லும் இளங்கோ தம்மை ஒரு இல்லஸ்ட்ரேட்டர் என்று யாரும் நினைத்து விடக் கூடாது என்கிறார். "ப்ளஸ் டூ படிக்கும்போதே பொன்னியின் செல்வனை வாசித்து மகிழ்ந்திருக்கிறேன். அதில் வந்த மணியம் ஓவியங்கள் உணர்ச்சி வெளிப்பாடுகளை எனது ஓவிய மொழியில் பிரதிபலிக்கிறேன். அதேநேரம் நவீன கோட்டோவியம் விவரணை ஓவியம் போல எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டிருக்காது. கூடுதல் அர்த்தங்களைத் தோண்டி எடுத்துக் கொள்வது வாசகனின் கடமை" என்கிறார்.

சரி, பொன்னியின் செல்வன் ஆங்கிலப் படைப்பின் முதல் இரண்டு பாகங்களைப் படித்து முடித்த வாசகர் கிருஷ்ணன் என்ன சொல்கிறார்? "வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் என்னை மிகவும் கவர்ந்து விட்டார்கள். முக்கியமாகப் பயமுறுத்தாத எளிய ஆங்கிலம் ஒரே மூச்சில் படிக்க வைத்து விட்டது. அடுத்து மூன்று பாகங்கள் எப்போது வரும் என்ற ஆவலில் இருக்கிறேன். பொன்னியின் செல்வன் வாசித்த பிறகு கல்கியின் மற்றப் படைப்புகளையும், மொழி பெயர்க்க மாட்டார்களா? என்ற ஆவல் வந்துவிட்டது" என்கிறார்.

— லியோ

படங்கள்: ஸ்ரீஹரி/வெங்கடேஷ்

வட்டமேஜை

✉ முதல்வர் கூறிய யோசனை என்பதால் ஆதரித்து விடாமல், செக்கோஸ்லோவாகியா யோசனையின் விளைவுகளை அக்குவேறு ஆணிவேறாக அலசி, கண்டித்திருப்பது பாராட்டத்தக்க நடுநிலைமை!

சென்னை – 23, த. சத்தியநாராயணன்.

✉ பரதம் என்பது வசதியானவர்களின் விஷயமாகவும், ஏழைக்குப் பகல் கனவாகவும் இருந்ததை மாற்றியமைத்து, புதிய சாதனை செய்த சாருமதிக்கு வாழ்த்துகள்.

சாத்தியாகுளம், க. பாக்யமலர்.

✉ கோயில்களில் உண்டியல் கணக்கு சம்பந்தமாகப் பலவிதமான புகார்கள் எழுப்பப்படுகின்றன. பூஜைக்காலம் முடிந்த பிற்பாடு கதவுகள் மூடின பிறகு பக்தர்கள் இல்லாதபோது உண்டியல்கள் திறக்கப்படுவது. வழக்கமாகியுள்ளது. கோயில் திறந்திருக்கும்பொழுது பக்தர்கள் இருக்கும்பொழுதுதான் உண்டியல் திறக்கப்பட்டு, கணக்கெடுக்க வேண்டும். இது குறித்து அறநிலையத்துறை கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். வருமானத்தின் நிலையைப் பொறுத்து மாதம் ஒரு முறையோ, மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறையோ பக்தர்கள் முன்னிலையில் இப்பணி நடைபெற வேண்டும். இப்பணி குறித்து நாளும் நேரமும் கோயில் நோட்டீஸ் போர்டில் முன்னதாகவே அறிவிப்புச் செய்ய வேண்டும். உண்டியல் கணக்கு பற்றிய விவரமும் போர்டில் அறிவிக்கப்பட வேண்டும். உண்டியல்களுக்குக் காவல் இருக்க வேண்டியது நமது பொறுப்பு என்பதை உணர்ந்து பக்தர்கள் செயல்படுவார்களாக!

ஜி.கே. சுந்தரம்,
தலைவர், ஸ்ரீலக்ஷ்மி மில்ஸ்,
கோவை.

✉ 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' படத்தைப் பொறுமையுடன் பார்த்து, ரசித்து 'எ வெரி நீட் ஃபிலிம்' என்று பாராட்டிய உமக்கு 'பொறுமைசாலி 2000' பட்டத்தை அளித்து … யோவ் கடுப்பைக் கிளப்பாதீங்கப்பா!

திண்டுக்கல்–5, வெங்கி.

✉ கே. ராஜனின் அலை பறக்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்க சிந்தாமணி முருகேசன் மறுத்திருப்பதற்கு என்ன காரணம்? லாவணி பாட வேண்டாம் என்று நினைக்கிறாரா? வாகவமாகக் கழன்று கொள்ள நினைக்கிறாரா? ஆனாலும், மூப்பனாரை விட மோசமான மௌனம்!

நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ அனிதா ரத்னம் உண்மையில் தமிழ்த் திரைக்கு வரப்பிரசாதம். நடிப்பிலும் குரலிலும் அவர் பழைய பானுமதியை ஞாபகப் படுத்துகிறார். அதிர்ஷ்டம் இருந்தால் ஒரு ரவுண்டு வருவார்.

திண்டுக்கல் – 5, ஜனனி பார்கவி.

✉ சிதாரவி ஆரம்பித்திருக்கும் பயணக் கட்டுரைத் தொடர் முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. அச்சுக்கலையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி பிரமிப்பாக இருக்கிறது.

மொரட்டுப்பாளையம், சு.நா. இராஜேஸ்வரன்

✉ தாக்குப் பிடிப்பாரா புதிய தலைவர்? படித்தேன். இ.மு.க, அ.தி.மு.கவைப் போல, அடிமட்டத் தொண்டர்கள் பலம் இல்லாதவரை, எத்தனைத் தலைவர்கள் மாறி வந்தாலும், காங்கிரஸ் தேறுவது கஷ்டம்தான்!

கும்பகோணம்–1, எஸ்.கே. மூர்த்தி.

கடுப்பைக் கிளப்பாதீங்கப்பா!

"காஞ்சி மாநகர், ஆதிகாலம் தொட்டு, அறியாமை போக்கும், நகரங்களின் நகரமாக விளங்கி வந்தது. அதனால் தான் அதை 'நகரேஷு காஞ்சி' என்கிறோம். அந்த பாரம் பரியம் பட்டுப் போய் விடக்கூடாது என்பதால்தான் காஞ்சி காமகோடி சங்கர பீடத்தின் அரிய முயற்சியால் 'பல்கலைக் கழகம்' தொடங்கப்பட்டது. காலமாற்றத்திற்கு ஏற்ப அதை அடியொற்றியே இப்போது 'காஞ்சி சாஃப்ட்வேர் பூங்காவும்' உதயமாகிறது" என்கிறார் அதன் பொறுப்பாளர்களில் ஒருவரான ஜே. ஜெயராமன்.

"தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழ் நாடு முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறது. பல நூறு கோடி செலவில் அரசே டைடல் பூங்கா அமைக்கிறது. ஆனால், ஏழை, கீழ்த் தட்டு, நடுத்தர மாணவர்கள் கம்ப்யூட்டர் வல்லுனர்களாகப் பயிற்சி பெறவும், வேலை வாய்ப்பு பெறவும் வசதியின்றி தவிக்கிறார்கள். குறிப்பாக கிராமப்புற இளைஞர்களுக்குத் தரமான கம்ப்யூட்டர் கல்வி இன்னும் கனவாகவே இருக்கிறது. மற்றொருபுறம், கடன் வாங்கி கம்ப்யூட்டர் கல்வியைக் கற்றாலும் போதிய ஊதியத்துடன் பொருத்தமான வேலை கிடைக்காததால் அமெரிக்கா போன்ற வேறொரு நாட்டின் வளர்ச்சிக்கு உழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். எனவே தரமான பயிற்சியும் அவசியம்; பொருத்தமான வேலையும் அவசியம். இதை மனத்தில் கொண்டே காஞ்சி சாஃப்ட்வேர் பார்க் தொடங்கப்பட வேண்டும் என ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் விருப்பம் தெரிவித்தார்கள்.





அவர்களின் நல்லாசிகளோடு, ஸ்ரீ காஞ்சி சங்கர விஞ்ஞான டிரஸ்ட் மூலம்

கம்ப்யூட்டர்புரமாகிறது காஞ்சிபுரம்!

சாஃப்ட்டுவேர் பூங்கா உதயமாகிறது" என்கிறார் அவர்.

'பிரக்ஞா' என பெயர் சூட்டப்பட்டிருக்கும் காஞ்சி சாஃப்ட்டுவேர் பார்க் இரண்டு பிரிவுகளாக உருவாக்கப்படுகிறது. முதல் பிரிவில், காஞ்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் 19.5 ஏக்கர் நிலப்பரப்பில் மூன்று மாடிகள் கொண்ட சாஃப்ட்டுவேர் பார்க் கட்டப்பட இருக்கிறது. இதில் உலகத்தரத்துடன் அனைத்து அடிப்படை கட்டுமான வசதிகளும் நிறுவப்பட உள்ளன. இரண்டாவது பிரிவில் சுமார் இருநூற்று ஐம்பது ஏக்கர் பரப்பளவில், பூங்காவை ஒட்டி குடியிருப்புகள் உருவாக்கப்படுகின்றன.

"சாஃப்ட்டுவேர் பார்க் ஒரே ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டதும், அதில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தேவையான சதுர அடிகள் சொந்தமாக வாங்கிக் கொண்டோ அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொண்டோ அலுவலகத்தைத் தொடங்கலாம்" என்ற ஜெயராமனிடம் சாஃப்ட்டுவேர் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மட்டும்தான் இங்கே அனுமதியா? என்றோம்.

"சாஃப்ட்டுவேர் தயாரிப்போர், கால் சென்டர், மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன், கிரெடிட் கார்டு நிறுவனங்கள், டேட்டா நிறுவனங்கள், அனிமேஷன் கம்பெனிகள், ரிமோட் எஜுகேஷன் நிறுவனங்கள், ஈ பிசினஸ் நிறுவனங்கள், டிஜிட்டல் பிரிண்டிங் பிரஸ், முக்கியமாகக் கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனங்கள் போன்றவை இடம் பெறும். இங்கு இடம் பெறும் நிறுவனங்களிடம் கனிவுடனும், உரிமையுடனும் ஒரு வேண்டுகோளை முன் வைக்கப் போகிறோம். காஞ்சிபுரத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தருமாறு கேட்டோம். நிறுவனங்கள் எந்தத் துறையில் எத்தகைய பயிற்சி பெற்ற மாணவர்களை வேலைக்குக் கேட்கிறார்களோ, அதற்கு ஏற்ப பாடத் திட்டத்தை அமைத்து இங்கேயே பயிற்சி கொடுக்கப் போகிறோம். வசதியில்லாதவர்களுக்குப் படிப்புதவித் தொகையும் தருகிறோம். 'பிரக்ஞா' – காஞ்சி சாஃப்டு வேர் பார்க், தகவல் தொழில் நுட்ப புரட்சியை ஏற்படுத்தும்'' என்ற ஜெயராமன், ஸ்ரீ காஞ்சி சங்கர விஞ்ஞான அறக்கட்டளையின் அறங்காவலர் குழுவில் இடம்பெற்றுள்ளார். இவர் கொச்சின் ரிபைனரீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராகவும், தலைவராகவும் இருந்தவர். முன்னாள் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் ஆலோசகர் குழுவில் இடம் பெற்றுள்ளார். இன்னும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் பதவி வகித்தவர்கள் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களாம். மாசற்ற பசுமையான சூழலில் தொடங்கப்படும் காஞ்சி சாஃப்ட்டுவேர் பார்க் காஞ்சிப் பல்கலைக்கழக வளாகத்திலேயே அமைய விருப்பது மற்றொரு சிறப்பு என்கிறார்கள்.




— ஜெயன்

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க சுயபலம் மேலோங்கி நிக்கற வாரம் இது. இதுவரைக்கும் இருந்து வந்த எதிர்ப்புகள் தானா மறையும். அல்லது நீங்களே முறியடிச்சிடுவீங்க. தன்னம்பிக்கை பெருகி, பல கஷ்டமான காரியங்களை சுலபமா சாதிப்பீங்க. பணம் பல வழிகளிலிருந்தும் வரும். செலவும் கைக்குள்ள அடங்காது. அரசாங்க அனுகூலம் இருக்கும். கலைஞர்களுக்கு விருது, பாராட்டுகள் கிடைக்க வாய்ப்புண்டு. பெண்களுக்குப் புது வீடு யோகமோ, புதுப் புடைவை யோகமோ இருக்கும். அடுத்த சில நாட்கள்ல, நீங்களே நம்ப முடியாத வளர்ச்சி, உங்க தொழில்ல இருக்கும்.

நடக்குமென்பார் நடக்கும்!



தனுசு ராசிக்காரரான முன்னாள் டி.ஜி.பி. வைகுந்துக்கு பிக்பாக்கெட்டால கொஞ்சம் இழப்பு ஏற்படலாமாம்!

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க பாடு கொஞ்சம் கஷ்டம்தான். குடும்ப ஸ்தானத்தில் சூரியனும் செவ்வாயும் இருக்கறது சரியில்லை. சிறு குழப்பங்கள், குடும்பத்துல சலசலப்புகள் இருக்கும். எதுக்கும் பதறவே பதறாதீங்க. கூடப் பிறந்தவங்களால பல பிரச்னைகள், நெருக்கடிகள் ஏற்படலாம். வீண் அலைச்சல், செலவு வேற எகிறும். உடல்நலத்துல எச்சரிக்கையா இருங்க. விளையாட்டுத் துறையினருக்கு எலும்பு முறிவு அபாயம் இருக்கு; கவனம்! இத்தனை பிரச்னை இருந்தாலும் ராசில குரு இருக்கறதால கொஞ்சம் பாதுகாப்புதான். பயணத்தால சிலருக்கு லாபம் இருக்கும். எழுத்து, கணிதத் துறையினருக்குப் புகழ் கூடும். கணவன், மனைவி உறவு சுமுகமா இருக்கும்.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

செய்யற காரியத்துல அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. பிரச்னைகள் நிறைய வரும். மேலதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். செலவு கூடும். பயணத்தால லாபமிருக்காது. வெளியிடங்கள்ல சாப்பிட்டு சிலர் உடம்பைக் கெடுத்துப்பீங்க. கணிதத் துறையினருக்கு மட்டும் வளர்ச்சிப் பாதை புலப்படும். பெண்கள், தூண்டாக் விட்டு வம்புல மாட்டிக்க வேண்டி வரும். பெற்றோர் உடல்நலத்துல கவனமா இருங்க. சிலருக்கு வெளியூர் டிரான்ஸ்பர் வரலாம். சிலர் வீடு மாற வேண்டியும் வரலாம்.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

தோற்றப் பொலிவு, வசீகரம் கூடும். ஜாலியா பேசியே உங்க காரியங்களை சுலபமா முடிச்சிடுவீங்க. போட்டி, பந்தயங்களில் வெற்றி வாய்ப்பு உறுதி. கணிதம், கம்ப்யூட்டர் துறையினருக்கு வெளிநாட்டு சான்ஸ் அடிக்கப் போகுது. வீடு, மனை வாங்கற யோகம் சிலருக்கு இருக்கு. கணவன் மனைவி உறவுல இதுவரை இருந்து வந்த கசமுசாக்கள் குறைந்து வீட்டுல அமைதி ஏற்படும். வெளியூர் பயணங்கள் ஆதாயமா அமையும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

கிளாட் வாங்கற யோசனைல இருக்கீங்களா? இப்ப அது ஓக்கேவுட் ஆயிடும். அது மட்டுமில்லை. வேறு பல உபயோகமான பொருட்களும் வாங்கித் தள்ளுவீங்க. காரணம், கையில பணப் புழக்கம் தாராளமா இருக்கும்ங்கறது

தான்! அரசியல்வாதிகளுக்கு அபாரமான வரவேற்பும் பாராட்டும் கிடைக்கப் போவுது. வழக்குகள் இருந்தா, உங்களுக்கு சாதகமா பைச லாகிற நேரம் இது. சினிமாத் துறையினருக்குப் புதிய வாய்ப்புகளும் பழைய பாக்கி களும் வந்து சேரும்.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

வாழ்க்கை வசதிகள் உயரும் நேரம் இது. முக்கிய மான சில திட்டங்கள் இப்ப நிறைவேறும். கூட்டுத் தொழில் செய்யறவங்களுக்கு லாபம் கூடும். எதிர்பாராத வியாபார ஒப்பந்தங்கள், வெளிநாட்டு முதலீடுன்னு பிசினஸ் பார்ட்டிகளுக்கு நல்ல மகசூல் தர்ற வாரம். பெண்களுக்குத் திருமண ஏற்பாடு நடக்கும். மாணவர் கள் அதீத திறமை காட்டிப் படிப்பாங்க. விளையாட்டு, கலை, விஞ்ஞானம், விவ சாயத் துறையினருக்கு மாமூலான வாரம். ஆனா பிரச்னை எதுவும் வராதுங் கறதே பெரிய விஷயம்தானே?

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

தேக ஆரோக்கியம் சிறப் பாக இருக்கும். எண்பது வயசுக்காரங்களுக்குக் கூட கபடி ஆடலாமான்னு தோணும். கலைத் துறை யினருக்குச் சில விசேஷமான பலன்கள் உண்டு. எதிர் பாராத வெளிநாட்டுப் பய ணம் சிலருக்கு வாய்க்கும். நிலம் வாங்கற யோகம் சிலருக்கு இருக்கும். சிற்பிகள், ஓவியர்களுக்குப் புகழ்கூடும். பிச்சைக்காரர்களுக்கு நிறைய சில்லறை சேரும். அரசுப் பணியாளர்கள் ஏதாவது வம்புல மாட்டிக்கற சூழ்நிலை உருவாகலாம்; எச்சரிக்கை!

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

நல்ல நண்பர்களால இப்ப சில முக்கியமான உதவிகள் கிடைக்கும். தேக ஆரோக்கி யம் உயரும். உங்க அலுப்பு, சலிப்பெல்லாம் மறைஞ்சி, 'இளசா' ஆயிடுவீங்க. பண நடமாட்டம் சீரா இருக்கும். சிலருக்கு பக்தி மார்க்கத்துல தீவிரமா ஈடுபடத் தோணும். பெண்களுக்கு ஆன்மீக யாத்திரை வாய்ப்பு வரலாம். திருமணம் தள்ளிப் போயிட் டிருக்கற பையன்களுக்கு இப்ப காதல் கைகூடும் நேரம். கலைஞர்களுக்கு புகழோட பணமும் சேரும் வாரம் இது.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

வீட்டுக்குள்ள சிறு குழப் பங்கள், சலனங்கள் உண்டா கும். ரொம்ப கவனமா கையாள வேண்டியது அவசி யம். கணவன் மனைவி உறவுல சுணக்கம் வரலாம். ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுத்து நடந்துக்கணும். பொருளாதாரப் பிரச்னை இருக்காதுன்னாலும் செலவு கூடும். கையிருப்பு கரையும். சிலருக்கு வெளியூர் மாறுதல் ஏற்படலாம். தெய்வகாரியங் கள்ல நாட்டம் விலகும். பய ணத்துல எச்சரிக்கை அவசி யம். பிக்பாக்கெட்டால் கொஞ்சம் இழப்பு ஏற்பட லாம்.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

நிர்வாகத் துறையினர் கொடிகட்டிப் பறக்கப் போற வாரம் இது. அதுவும் தனியார் - தொழில் துறை அதிபர்களுக்கும் உயரதிகாரி களுக்கும் இப்ப பல சாதக மான விஷயங்கள் நடக்கப் போகுது. பொருளாதார ரீதில எதிர்பாராத அபிவிருத்தி ஏற்படும். ராணுவத் துறையில இருக்கறவங்களுக்கும் போலீஸ்காரங்களுக்கும் இப்ப உடல்நலன் கொஞ்சம் படுத்தும். விருந்தினர் வரவு, ஆடைகள் சேர்க்கை, வெளி நாட்டிலிருந்து நல்ல சேதி இவை இப்ப நிகழும். வெளியூர் பயணம் ஒண்ணு இருக்கும். சிலருக்கு வெளியூர் மாறுதலாகவும் இருக்கலாம்.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

எதிர்ப்புகள் குறையும். தாய் தந்தை மூலமா ஏதாவது அனுகூலம் நடக்கும். சினிமா, நாட்டியத் துறையினருக்கு ஆதாயமான காலகட்டம். குறிப்பா பெண்களுக்குப் பல நல்ல வாய்ப்புகள் வரும். மாணவர்கள் படிப்பை விட விளையாட்டுல அதிகம் பிரகாசிப்பாங்க. வெளிநாட் டுத் தொடர்புகள் ஆக்கம் தரும். புதிய ஆடை, நகை சேர்க்கை உண்டு.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பண நிலவரம் அத்தனை திருப்தியா இருக்காது. செலவு எகிறும். புதிய முயற்சிகள்ல ஈடுபடறதைக் கொஞ்சம் தள்ளிப் போடறது நல்லது. ஆனா, திறமைக் கேற்ற அங்கீகாரம் உறுதி. வீடு ரிப்பேர், குழாய் ரிப் பேர்னு சில மராமத்து செலவுகள் இருக்கும். சில ருக்கு வாகன அசௌகரியம் ஏற்படலாம். பெண்களுக்கு இது வளர் காலம். பல் வலியோ, வயித்து வலியோ வரலாம். நடைபாதைவாசி களுக்கு எதிர்பாராத லாட் டரி அதிர்ஷ்டம் அடிக்க லாம். ●

அக்னிசர்மா பக்கம்

ஒளியை ஓவர்டேக் செய்யும் ஒளி!



ஒளியைத் தாண்டிவிடுவதன் மூலம் அதன் இயற்கையான வேகத்தை அதிகப்படுத்த முடியும் என்பதை விஞ்ஞானிகள் உணர்த்தியிருக்கிறார்கள். இதன் விளைவுகள் கற்பனைக்கப்பாற்பட்டவை!

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி ஒளியின் வேகம் ஊக்கப்படுத்தப்பட்டு அதன் இயல்பான வேகம் (நொடிக்கு 186,000 மைல்கள்) மிஞ்சப்பட்டது.

இப்படி ஊக்கப்படுத்தப்படும்போது மூலாதாரமான இடத்திலிருந்து ஒளி புறப்படும்போதே அது போய்ச் சேர வேண்டிய இடத்தைக் கடந்து விடுகிறது. சொல்லப்போனால் அது காலத்தில் முன்னோக்கி அதிவேகத்தில் பாய்ந்து விடுகிறது!

இந்த ஆராய்ச்சி பிரின்ஸ்டனில் உள்ள நெக் ஆராய்ச்சி நிலையத்தில் டாக்டர் லிஜுன் வாங் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. ஒளித் துடிப்பு ஒன்று காசியம் வாயு நிரம்பிய அறை நோக்கி செலுத்தப்பட்டது. வாயு நிரம்பிய அறையை அணுகுமுன்பே ஒளித் துகளானது அறையையும் ஊடுருவி அதற்கப்பால் 60 அடிகள் வரை போயே போய்விட்டது. சுருக்கமாகச் சொன்னால் ஒளித் துகளானது இந்த வேகத்தில் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் காணப்பட்டது. இந் நிகழ்வில் ஒளித்துகள் அதனுடைய வழக்கமான, இயல்பான வேகத்தைப் போல் முன்னூறு மடங்கு அதிக வேகத்தில் சென்றது.


இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் விஞ்ஞானிகளை திகைப்பில் ஆழ்த்தியுள்ளன. இதன் முடிவுகள் இயற்பியலின் அடிப்படைகளைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. விளைவு ஒன்று இருக்குமென்றால் முன்னதாக அதற்கான காரணி ஒன்றும் இருக்கவேண்டும் என்கிற இயற்பியலின் அடிப்படை விதியை மீறுகிறது. ஒளி காலத்தில் முன்னோக்கி பயணம் செய்ய முடியுமென்றால், அதனால் தகவல்களையும் எதிர் காலத்திற்குக் கொண்டு செல்ல முடியும். இது ஐன்ஸ்டைனின் சார்பியல் கொள்கையை நொறுக்கி விடும். ஏனெனில் ஒளியின் வேகத்தை அடைய முடியாது என்பதுதான் ஐன்ஸ்டைன் சித்தாந்தத்தின் முடிவு.

இதைக் குறித்து ஆராய்ச்சியாளர் வாங், "எங்களுடைய ஆராய்ச்சியில் ஒளித்துகள் வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒளியின் வேகத்தை விட அதிக வேகத்தில் பயணம் செய்தது. இந்த விஷயம் ஒளியின் இயற்கையைப் பற்றியும், ஒளி செயல்படும் விதம் பற்றியும் புதிய புரிதல்களை ஏற்படுத்தும்" என்கிறார்.

— ஸ்ரீனி.

படம் : ஐரிஸ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை-63. Tel & FAX: 2376129
E.mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர் ! வணக்கம், தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்திர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ	1000/-
• மதிய உணவு	ரூ	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ	2,00,000/-

—: விவேகானந்தர் தேசிய இயக்கம் :—



ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசிய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது.
இதன் மூலம் 51 கிராமங்களில் சுமார் 2700 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியூஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

1.	ஒரு சென்டருக்கு ஒரு மாதத்தின் பராமரிப்பு செலவு (பௌர்ணமியன்று ஒரு வேளை சிறப்பு உணவு செலவு உட்பட)	ரூ	1,500/-
2.	2700 மாணவர்களுக்கு பௌர்ணமி நாளன்று உணவு வழங்க (அன்று கூட்டு வழிபாடு, பக்தி பாடல்கள் பிரார்த்தனை அனைத்து டியூஷன் சென்டரில் நடத்தப்படும்)	ரூ	27,000/-
3.	ஒரு மாதத்திற்கு 51 சென்டர்களின் பராமரிப்பு செலவு பௌர்ணமி பூஜை உட்பட	ரூ	76,500/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/ DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka